
வயலூரானின்
வெண்பா மாலை
(ஆயிரம் நேரிசை வெண்பாக்கள்)

உ

சிவமயம்

வயலூரானின்

# வெண்பாமாலை

( ஆயிரம் நேரிசை வெண்பாக்கள்)

2024 ஏப்ரல்

## நூல் விபரம்

நூலின் பெயர் :- வெண்பாமாலை

நூலின் வகை :- நேரிசை வெண்பாக்கள்

நூலாசிரியர் :- செல்வராஜா சுதாகரன்
(வயலூரான்)(0770710729)

பக்கங்கள் :- i-xxii + 170

பிரதிகள் :- 500

பதிப்புரிமை :- நூலாசிரியர்

முதற்பதிப்பு :- 2024 ஏப்ரல்

அட்டைப்படம் :- வரோ கிரியேஷன்ஸ், மட்டுவில் வடக்கு,

அச்சுப் பதிப்பு :- திருக்கணித பதிப்பகம், சாவகச்சேரி

ISBN :- 978-955-38036-5-8

விலை :- 750.00

Title :- Venpamalai

Type :- Nerisai Venpakkal

Author :- Selvarajah Suthakaran
(Vayalooran) (0770710729)

Pages :- i-xxii + 170

No.of.Copies :- 500

Copy Right :- Author

First Edition :- 2024 April

Cover Design :- Varo Creations, Madduvil North, Chava.

Printers :-Thirukkanitha Pathippakam,
Chavakachcheri

ISBN No :-978-955-38036-5-8

Price :- 750.00

## உள்ளடங்குபவை.........


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. வியப்புமிகு வெண்பாமாலை | |
| 2. அணிந்துரை | |
| 3. என்னுரை | |
| 4. காப்புச் செய்யுள்கள் | 1 |
| 5. அன்னை ஓர் ஆலயம் | 3 |
| 6. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை | 6 |
| 7. ஆசானைப் போற்றல் அறம் | 9 |
| 8. இருமனம் இணையும் இல்லறம் | 12 |
| 9. வேடதாரி உறவுகள் | 14 |
| 10. கற்பீர் மரபுக் கவி | 16 |
| 11. செல்லிடப் பேசியின் சிறப்பும் சீரழிவும் | 18 |
| 12. பாசத்தாற் கூடும் பரிவு | 20 |
| 13. ஊழல் மலிந்த உலகு | 23 |
| 14. தழைத்தோங்கும் தங்கத் தமிழ் | 26 |
| 15. நல்லாரும் கெட்டாரும் | 29 |
| 16. இகழ்வோர் அடைவர் இடர் | 32 |
| 17. கடன்படக் கூடாதுகாண் | 34 |
| 18. பணம்பத்தும் செய்யும் பாதாளம்வரைபாயும் | 36 |
| 19. தென்மராட்சி மண்ணின் சிறப்பு | 38 |

20. பாரினில் உள்ள பாகுபாடு 42

21. மறையும் பண்பாடும் மாந்தர் வாழ்வும் 44

22. இயற்கை அழகே அழகு 47

23. சோதனையும் வேதனையும் 48

24. பொல்லாத போதையைப் போக்கு 51

25. காதல் கீதங்கள் - காதலன் கூற்று 54

26. காதல் கீதங்கள் - காதலி கூற்று 58

27. இடப்பெயர்வின் இன்னல்கள் 63

28. இன்பரசம் என்னாளும் பருகவேண்டும் 68

29. முகநூல்தளம்- நன்மையும் தீமையும் 72

30. மறைமுக எதிரிகள் 74

31. அருகிவரும் விளையாட்டுகள் 76

32. பணமில்லா வாழ்க்கை பாடாய்ப்படுத்தும் 78

33. அங்காடிகளாகும் ஆலயங்கள் 83

34. நல்லவை நவில்வேன் நான் 87

35. ஔவையாரின் அருஞ்சுவைப் பாடல்கள் 91

36. ஊழ்வினை நீங்க உயர்வு 93

37. நன்றென நீயும் நவில் 95

38. நல்லதோர் நண்பனென நவில் 99

39. செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு 101

40. குன்றாப் புகழைக் குவி 104

41. சந்திரனும் சூரியனும் 106

42. சாலை விபத்துகள் 109

43. தொற்றா நோய்களின் தொந்தரவு 112

44. அரசபணியும் அவலங்களும் 114

45. தேர்தலும் வாக்குறுதியும் 118

46. நிலையிலா வாழ்க்கை 123

47. தனிப்பாடல்கள் மும்மூன்று 125

48. சமரசம் உலாவும் இடம் 131

49. நல்லைக் கந்தன் புகழ்மாலை 133

50. சந்நிதி வேலவா சரணம் 138

51. வல்லிபுர மாயவன் துதி 142

52. கேதீச்சரநாதன் துதி 144

53. கோணமலையும் கதிரமலையும் 147

54. நயினைத் தாயே நல்லருள் தருவாயே 149

55. பொங்கிப் பெறுவோம் புகழ் 151

56. இல்லறம் என்னும் நல்லறம் 153

57. கலப்படம் கூடாது காண் 157

58. பொன்மொழி வெண்பாக்கள் 158

59. நன்றி செலுத்துவேன் நான் 165

# வியப்புமிகு வெண்பாமாலை.

கவிஞர் வயலூரான் என்று அழைக்கப்படும் தென்மராட்சி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் செல்வராஜா சுதாகரன் அவர்களுடைய பன்னிரெண்டாவது நூலாக ஆயிரம் நேரிசை வெண்பாக்களைக் கொண்ட ''வெண்பாமாலை'' மரபுக்கவிதை நூல் வெளிவருவது பாராட்டுக்குரியது

''புலவர்க்கு வெண்பாப்புலி'' என்று சொல்வார்கள். தமிழ் யாப்பு வடிவங்களில் சிக்கலானதும் மிகமிக நுட்பமான ஓசை விடயங்களைக் கொண்டதும் கவிஞர்களாலும் பண்டிதர்களாலும் கூடக் கையாளக் கடினமானதுமான யாப்பு வடிவம் வெண்பா ஆகும். அத்தகைய கடினமான யாப்பு வடிவத்தில் எம்முன்னோர் எத்தனை பெரும் பாய்ச்சல்களைப் பாய்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்தால் வியப்பல்ல மலைப்பே தோன்றும். குறள் வெண்பாவில் திருக்குறளைத் திருவள்ளுவரும் , நேரிசை வெண்பாவில் நளவெண்பாவை புகழேந்திப் புலவரும் தனித்துவமாகப் பாடியதுடன் தொடர்ந்து கம்பர், ஒட்டக்கூத்தர் , காளமேகப் புலவர் , ஔவையார், பட்டினத்தடிகள் முதல் பிற்காலத்தில் பாரதியார் வரை பல புலவர்களும் இவ்வடிவத்தில் அழியாப்புகழ் மிகு கவிதைகளை ஆக்கிப் படைத்திருக்கிறார்கள்.

ஈழத்திலும் பல புலவர்கள் வெண்பாக்களைக் கையாண்டு இருக்கிறார்கள். ஈழத்தின் தமிழ்க்கவிதை பிதாமகர்களில் ஒருவரான கவிஞர் முருகையன் இவ்வெண்பா யாப்பில் ஒரு விஞ்ஞானம் சார்ந்த குறுங்காவியமே பாடியிருக்கிறார்.

புழக்கத்தில் சில வெண்பா வகைகள் காணப்பட்டாலும் அதிக பயன்பாட்டில் இருப்பவை நேரிசை வெண்பாக்களே. இந்நேரிசை வெண்பாவுக்கு எளிய உதாரணங்களாக ''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்...'' , பாலும் தெளிதேனும் பாகும்….. '' , துதிப்போர்க்கு வல்வினைபோம்…., என்பவற்றைக் கூறலாம்.

இவ்வாறானவை பார்க்க கேட்க எளிமையான யாப்பு வடிவம் போலத் தோன்றினாலும் மிகமிக நுட்பமானவை.

எவரையும் தடக்கிவிழ வைக்கக்கூடியவை என்பதைக் கற்றோர் அறிவர். அவ்வகையில் ஆயிரம் நேரிசை வெண்பாப் பூக்களை யாப்பு நுட்பம் , பொருள் நுட்பம் என்பன சிதையாமல் ஓர் அழகான ஆரமாகக் கோர்த்து இந்நூலை ஆக்கி வழங்கிய வயலூரானைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்று வெண்பாக்களை எழுதும் தமிழக , ஈழக் கவிஞர்கள், புலவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஏனெனில் இந்த யாப்பு நுட்பத்தை அதாவது எழுத்து , தளை பிழைக்காமல், பிசகாமல் எழுதுவதில் உள்ள யாப்பு அறிவின்மை , போதிய பரிச்சயமற்ற தன்மை, தவறு விட்டுவிடுவோமோ என்ற பதற்றம் என்பவை இவ்வடிவத்தைப் பலரும் கையிலெடுக்காமைக்கான காரணங்கள் எனலாம். ஒரு எழுத்துத் தவறும் இதனைத் தளைதட்டியதாக, வெண்பா என்னும் வடிவில் சேர்க்க விடாததாக மாற்றிவிடும். பலர் தளைதட்டினாலும் ஓரளவு இவ் ஓசையை ஒத்து வெண்பா எழுதி “வெண்பா” என திருப்திப்பட்டுக் கொள்ளும் அவலமும் அபத்தமும் கூட இன்று காணப்படுகின்றது.

ஆனால் ஓரளவு ஆர்வமும் ஓசைப் பரிட்சயமும் , யாப்பறிவும் அனுபவமும் பெற்றுள்ள வயலூரான் இச்சாதனையை படைத்துக் காட்டியிருக்கிறார். அவர் இவ்வாறு அநாயாசமாக ஆயிரம் வெண்பாக்களை எழுதியது இத்தலைமுறையில் மரபுக் கவிதைத் துறையில் வேறெவரும் செய்யவொண்ணாத , செய்யாத மகத்தான சாதனை என்றால் மிகையில்லை.

தமிழ்க் கவிதை மரபானது ஓசையை அடிநாதமாகக் கொண்டது. ஒவ்வொரு எழுத்தும் அதாவது குறில், நெடில் , ஒற்றுக்களும் ஓசைப்பிரமாண அடிப்படையைத் தீர்மானிக்கின்றன. இரண்டு அல்லது மூன்று எழுத்துகள் இணையும் போது இரண்டாம் கட்டமான “அசைகள்” உருவாகின்றன. இரண்டு வகையான அசைகளான நேரசை, நிரையசை என்பன உள்ளன. இந்த அசைகள் இணைந்து மூன்றாம் கட்டமாக சொற்கள் அல்லது சீர்கள் உருவாகின்றன. அதாவது உலகிலுள்ள அனைத்துச் சொற்களும் மேற்படி இரு அசைகளால் ஆனவை என்பது மிகமிக வியப்பிற்குரியது. இந்த ஓசை நுட்பத்தை எமது முன்னோர்கள் கண்டறிந்துள்ளார்கள் என்பதும் இந்நுட்பம் தொடர்பாக ஏனைய மொழிகளின் வல்லுநர்கள் கூடப் பெரிதாக

அறிந்து அலட்டிக் கொள்ளவில்லை என்பதும் முக்கியமானது. உதாரணமாக ''அம்மா'' என்ற சொல் அல்லது சீர் அம் - மா எனப் பகுக்கப்பட்டு அது நேர் - நேர் என்ற ஓசை ஒழுங்குள்ள அசைகளால் ஆனது என்பதனைக் காணலாம். இதுவே ஆங்கிலத்தில் ''மம்மி'' என்ற சொல் அல்லது சீர் மம் - மி எனப் பகுக்கப்பட்டு நேர் - நேர் என வரும் என்றும் கூறலாம். இதேபோல கணவன் என்ற சொல் அல்லது சீர் கண - வன் எனப் பகுக்கப்பட்டு நிரை - நேர் என்ற அசைகளால் ஆனதனைக் காணலாம்.

இத்தகைய சொற்கள் அல்லது சீர்கள் இணையும் பொழுது கவிதையொன்றின் அடி ஒன்று தோன்றும். இவ்வாறான பல அடிகள் சேர்ந்தால் அது கவிதையாகும். மேலும் அடுத்தடுத்த இரு சொற்கள் அல்லது சீர்களுக்கிடையில் ஓசை ஒழுங்கை மேலும் சீராகப் பேணும் இணைப்பு ''தளை'' எனப்படும். வெண்பாவில் சொற்கள் அல்லது சீர்களுக்கிடையில் ''வெண்தளை'' என்னும் விசேடதளை காணப்படல் வேண்டும் என்பது கண்டிப்பான விதி. அவ்வாறு வெண்டளை காணப்படாது விடின் அது தளைதட்டியதாக அதாவது வெண்பாவாக கருத முடியாதது ஆகிவிடும்.

இந்தத் தளைநுட்பத்தைத் தெளிவாகக் கற்றறிந்து ஓசை ஒழுங்கை அனுபவபூர்வமாக அகப்புறச் செவிகளில் உணரும் ஒருவராலேயே சீரான வெண்பாவைப் படைக்க முடியும். இந்த விபரீத விளையாட்டு ஏனென எண்ணியே பலர் வெண்பாவே வேண்டாம் என்று தூர விலகி ஓடுகிறார்கள். ஆனால் வயலூரான் இந்தச் சவாலையே ஏற்று அதனைச் சாதனையாக்கி இருக்கிறார்.

வயலூரான் அவர்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஏற்பாட்டில் நல்லை ஆதீனத்தில் சில ஆண்டுகளிற்கு முன் நடத்தப்பெற்ற முதலாவது மரபுக்கவிதைப் பயிலரங்கில் ஆர்வத்துடன் பங்குபற்றியவர். அவ்வகுப்புகளை எமது மூத்த கவிஞர் சோ. ப அவர்களும் நானும் வார இறுதி நாள்களில் நடாத்தினோம். யாப்பு தொடர்பான விடயங்களை நானேற்கனவே கவிஞர் முருகையனிடம் கற்றுக் கொண்ட பாணியில் உதாரணக் கவிதைகளூடாக எடுத்துரைப்பேன். கவிஞர் சோ.ப அவர்களும் ஒவ்வொரு கவிதை யாப்பு வடிவங்களிற்கும் தேர்ந்தெடுத்த

பிரபலமான கவிதைகளை அச்சுப் பிரதியாக்கி வழங்கி ஒவ்வொரு யாப்பினதும் திட்ப நுட்பங்களை விளங்கப்படுத்துவார். அவ்வகுப்புகளில் சுதாகரன் உட்படப் பலர் மிக ஆர்வமாக கலந்துகொண்டு யாப்பு வடிவங்களை அவற்றின் நுட்பங்களை அறிந்து அவற்றைப் பரிட்சயப்படுத்தி சிறிது சிறிதாக அவற்றைக் கையாளும் திறமைகளைப் பெற்றுக் கொண்டனர்.

மிக எளிமையான யாப்பு வடிவமான அகவல் மற்றும் விருத்த வகைகளை அவர்களில் பலர் சிறப்பாக எழுதத் தொடங்கினர். வெண்பாவின் நுட்பங்களை உள்வாங்கித் தட்டுத் தடுமாறி தளைகளின் ஒழுங்கைத் தவறவிடாமல் தொடக்கத்தில் பொருளைக் கணக்கெடாமல் வெண்பாவை எழுத முயன்ற சிலரில் சுதாகரனும் ஒருவர். ஆனால் அவரின் இடையறாத முயற்சி, தேடல் , வாசிப்பு , அனுபவம் என்பன இக்குறுகிய காலத்தில் ஆயிரம் நேரிசை வெண்பாக்களை ஆக்கி அதனை நூலாக வெளியிடும் துணிவை அவருக்கு வழங்கியுள்ளது.

அவருடைய நூல் காப்புச் செய்யுள்களோடு தொடங்கி காவிய வடிவில் இல்லாமல் வெவ்வேறு விடயங்களை ஏதோ ஒரு ஒழுங்குத் தொடர்ச்சியை அடிப்படையாக பேசிக்கொண்டு நகர்கிறது.

காப்புச் செய்யுளின் முதல் வெண்பா

வேதவனம் தன்னில் விரும்பியுறை நாதனே
ஏதமின்றி என்றனது இம்முயற்சி – பூதலத்தில்
சாதனை செய்திடத் தண்ணருளே தந்தெனக்குப்
பாதகம் வந்திடாமற் பார்

என்று தன் குலதெய்வத்திடம் வேண்டித் தொடர்கிறது.

வெவ்வேறு தெய்வங்களிடம் நேரிசை வெண்பாவில் வேண்டுதல் வைக்கும் இவர் ''அன்னை ஓர் ஆலயம்'', ''தந்தைசொல் மிக்க மந்திரமில்லை'', ''ஆசானைப் போற்றுதல் அறம்'', ''இருமனம் இணைந்த இல்லறம்'', ''வேடதாரி உறவுகள்'', ''கற்பீர் மரபுக் கவி'', ''செல்லிடப் பேசியின் சிறப்பும் சீரழிவும்'', என்று தொடர்ந்து குடும்பம் , சூழல், சமயம், சமுகம், இலக்கியம், அரசியல் , அன்றாட அனுபவங்கள், தத்துவார்த்தம் என வெவ்வேறு தளங்களில் , தடங்களில் தனது அனுபவங்களை

வெண்பாக்களாகப் பாடிப் ‘‘பொன்மொழி வெண்பாக்கள்’’, ‘‘நன்றி செலுத்துவேன் நான்’’ என்ற தலைப்புகளுடன் நிறைவு செய்து அசத்தியிருக்கிறார்.

ஆயிரம் வெண்பாக்களையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து நயப்புரை வழங்குவது இலேசான காரியமில்லை. பதச் சோறுகளாக சில வெண்பாக்களின் சிறப்பை எடுத்துரைக்க முயல்கிறேன்

அறுசுவை உண்டியை ஆக்கியே ஊட்டி
பொறுமையும் காத்துப் புவியில் - உறுதியாய்
எங்களின் வாழ்வில் இனிமையும் கூட்டவே
சங்கடந் தீர்ப்பாளே தாய் (016)

எனத் தாயின் பெருமை பேசி

வெண்பா விருத்தம் விரும்பும் கலிப்பாவாய்
மண்ணில் மலர்ந்து மணம்பரப்பும் - எண்ணிலாப்
பாக்கள் பலவிந்தப் பாரினில் உண்டாமே
ஆக்க முயல்வோம் அறிந்து (096)

எனத் தமிழ்மரபின் புகழ்பாடி

தொலைவினில் உள்ளோர் தொடர்பும் கிடைக்கும்
அலைச்சல் அகலும் அறிவாய் - நிலையாய்
வளரும் தொழில்நுட்பம் வாழ்வினில் தந்த
உளமகிழ் பேசி உணர் (112)

எனக் கைபேசிப் புகழ்சொல்லி

முன்னோர் எமக்காய் முகிழ்த்த முதுமொழிகள்
என்னாளும் காக்குமே எம்மையும் - இந்நாளில்
ஆங்கதை எண்ணி அதற்கேற்ப வாழ்ந்திட
ஈங்கு வராதே இடர் ( 195)

எனவும் நம்பி

சின்ன இடையசையைச் சிங்காரம் காட்டுகிறாய்
அன்ன நடையழகால் ஆணினத்தைப் - பின்னாடி
சுற்றவே வைக்கிறாய் சுந்தரியே நீயென்னைப்
பற்றியே வாழ்ந்திடப் பார் ( 328)

எனக் காதலில் வீழ்ந்து

பண்டைத் தமிழரின் பண்பான ஆட்டங்கள்
விண்டுமே போனதோ வீழ்ந்தென – மண்ணினில்
எல்லோரும் எண்ணி இருந்திங்கு வாடுகிறார்
நல்லபடி காண்போமே நாம் ( 459)

என்று பாரம்பரிய விளையாட்டுகளை மீள விளையாட முயன்று

செய்யும் தொழிலையே தெய்வமாய் எண்ணினால்
உய்யும் வழிகள் உயருமே – பொய்யைப்
புவியினிற் பேசினால் புண்ணியம் போகும்
தவிப்பும் தொடருமே தான் ( 519)

என்ற மெய்யுணர்ந்து

ஆழ்கடல் சென்றே அருஞ்செல்வம் தேடினால்
வாழ்வில் பெறலாம் வளமெல்லாம் - தாழ்வின்றி
நல்லுலகில் நாமும் நலமுடன் வாழ்ந்திடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு ( 613)

எனப் பொருளின் பெருமை பகர்ந்து

தேவையை நாடித் தினமும் வருவோரின்
தேவையை நல்லபடி தீர்த்திடவே- ஆவலாய்
போற்றியே செல்வருன் பொன்னடி தன்னையே
ஏற்றுவர் என்றே யுணர் ( 685)

என அரச சேவகர்க்கு அறிவுரைதந்து

நல்லைப் பதியோனே நம்பினோர் காவலனே
அல்லல் அகற்றும் அழகனே – தொல்லைகள்
இப்பாரில் நீங்கிட இன்னருள் தந்தெமை
தப்பாமல் நீயுமே தாங்கு

என நல்லூரானின் தாழ்பணிந்து

தமிழ்ச்சங்கம் தந்த தகைசால் பயிற்சி
அமிழ்தின் இனிதாய் அமைந்து- தமிழினில்
நன்றுமே பாக்களை நானியற்ற வைத்தது
நன்றி செலுத்துவேன் நான் ( 986)

என்ற நன்றியறிதலையும் வழங்கி

நூலினை நிறைவு செய்கின்றார் .

இவை நான் ஏலவே சொன்னது போலப் பதச் சோறுகளே. ஆயிரம் வெண்பாக்களில் இன்னும் அழகும் கவித்துவமும் பொருட்செறிவும் உடைய பல வெண்பாக்கள் உள்ளன.

ஒரு கவிஞனுக்கு சொற்பஞ்சம் இருக்கக் கூடாது என்பர். வயலூரானிடம் மிகப்பெரிய சொத்து அவரின் மனவங்கியில் சேமிப்பாகக் குவிந்து கிடக்கிறது. அதனால் எதுகைகளும் மோனைகளும் பொருத்தமாக வந்துவிழக் கவிதைகள் அழகோடும் புதுப் பொலிவோடும் வாசிக்கக் கேட்க இனிமையாகவும் மிளிருகின்றன.

வயலூரான் சுதாகரனின் ''நெஞ்சுறுத்தும் நிஜங்கள்'' என்ற கவிநூல் வெளியீட்டில் அவரது மண்ணில் சில ஆண்டுகளின் முன் நயப்புரை ஆற்றிய ஞாபகம். ஒரு அரச சேவையாளனாக ஏற்கெனவே அவரை அறிந்திருந்த நான் ஒரு மரபுவழிக் கவிஞனாக அவரின் பல சிறப்புகளையும் ஏனையவர்களுக்கு எளிதில் கைவராத ஓசை வழிப்பட அவர் கவிதை எழுதுவதையும் அது மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டால் அவரால் மரபுக் கவிதைகளில் பல சாதனைகளையும் செய்ய முடியும்

என்பதையும் அன்று எனது பேச்சில் தெரியப்படுத்தி இருந்தேன். தன் வழமையான பணிகளிற்கிடையில் அவற்றை மனங்கொண்டு சாதித்திருக்கிறார். அவரின் ஆர்வத்தை நானும் தூண்டி வழிப்படுத்தினேன் என்பது எனக்கும் மகிழ்ச்சி.

ஈழக்கவிதை வரலாற்றில் பல கவிஞர்களை தென்மராட்சி மண் தந்திருக்கிறது. கவிஞர் முருகையன், அவரது சகோதரர் சிவானந்தன், கவிஞர் தா.இராமலிங்கம், பண்டிதர் சு.வேலுப்பிள்ளை, கல்வயல் வே.குமாரசாமி ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவருமே தமிழ்க்கவிதை மரபை நன்கு பயின்று அறிந்ததோடல்லாமல் கால ஓட்டத்திற்கு ஏற்ப நவீன விடயங்களையும் தம் கவிதைகளில் புகுத்தியவர்கள். அவர்களின் தொடர்ச்சியாக அவர்கள் பிறந்த அதே தென்மராட்சியில் கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட வயலூரான் செல்வராஜா சுதாகரன் அவர்கள் தற்கால இளைய கவிதை மரபை சுமையென எண்ணும் நவீன இலக்கியங்களே தமிழ் இலக்கியங்கள் எனப் பேசித்திரியும் அறப்படித்த தலைமுறை முன் எமது கவிதை மரபைப் போற்றி அதன் உச்ச வடிவானதும் கற்ற கவிஞர், புலவர்களே அணுக அஞ்சும் வெண்பாவில் ஒரு பிடிபிடித்து ஆயிரம் நேரிசை வெண்பாக்கள் கொண்ட வெண்பாமாலையைத் தனது பன்னிரெண்டாவது நூலாக வெளிக்கொணருவது போற்றிப் புகழ வேண்டிய ஒன்று. வயலூரானின் கவிப்பணி மேலும் ஓங்கி உயர்ந்து ஒளிர்ந்து செழிக்க என் வாழ்த்துகள்.

அன்புரிமையுடன்

கவிஞர் த.ஜெயசீலன்

( பிரதேச செயலர், பச்சலைப்பள்ளி)

2024.02.28.

## அணிந்துரை

மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ னல்லார்க் கணியும்போல் - நாடிமுன்
ஐதுரையாநின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

என்கிறது நன்னூல்.

கட்டட வேலைப்பாடுகளுடன் மாளிகை அமைந்திருந்தாலும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியங்கள் இன்றியமையாததாகும். ஒருநகரம் மிகப்பெரியதாக விரிந்து பரந்து அமைந்திருந்தாலும் அந்நகருக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் தலைவாசல் அவசியமானது. இயற்கையிலேயே பெண்கள் அழகுடையவர்கள் என்றாலும் அவர்களுக்கு மேலும் எழிலூட்ட அணிகலன்கள் இன்றியமையாதது. அதுபோல ஒருநூல் சிறப்புடையதாக இருந்தாலும் அதற்கோர் அணிந்துரை அவசியமானது என்று அணிந்துரையின் இன்றியமையாமையை நன்னூல் விளக்கியுள்ளது.

வெற்றியின் பாதையை வெல்ல வயலூரான்
பெற்ற அறிவுடன் பேறாக – கற்றதையும்
நற்றமிழில் பாக்களால் நற்றாய்க்குச் சூட்டிய
வற்றாத ஆற்றுக்கென் வாழ்த்து

பொன்னான வெண்பா பொலிவுடன் நேரிசையான்
இன்சுவையால் என்வெண்பா ஈட்டிடும் - இன்பத்தை
அன்புடன் யானும் அணிந்துரை தந்திட
மன்றின் சிறப்புடைய மாண்பு.

வயலூரான் யாத்த வரிசையான பாக்கள்
இயலுடன் நாளும் இசையான் - மயங்கும்
வியப்புடை வெண்பா விரவிடும் ஞாலந்
தயங்கிடா வண்ணந் தரம்.

என்று வெண்பாவில் மனதார வாழ்த்தி என்னுடைய அணிந்துரையைத் தொடங்குகிறேன். அனைவரிடமும் அன்பும் பாசமும் ஒருங்கே கொண்டு பழகுகின்ற பண்பினைத் தன்னகத்தே கொண்டவராக இந்நூலின் ஆசிரியர் திரு.செல்வராஜா சுதாகரன்-வயலூரான் அவர்கள் இருக்கிறார் என்பதே இலக்கிய உலகிற்குக் கிடைத்த வரப்பிரசாதம். அவரைக் கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் திருச்சியில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. குறுகிய நேரச் சந்திப்பாக இருந்தாலும் அவரது எளிமையையும் பண்பையும் உணரக் கூடியதாக அச்சந்திப்பு அமைந்தது என்றால் அது மிகையில்லை.

இவரின் நூலுக்குள் உட்செல்கிறேன். எத்தனை அருமை! எத்தனை எளிமை! எத்தனை கவித்துவம்! உண்மையில் மலர்ச் சோலைக்குள் சென்றால் எத்துணை இன்பம் கிடைக்குமோ அதே அளவிற்கு இன்பத்தை என்னால் நுகர முடிந்தது. சில அழகான ரோஜா மலர்கள், சில மணந்தரும் மல்லிகை மலர்கள், சில இறைவனுக்குச் சூடும் அரளிமலர்கள், சில வண்ணவண்ண சாமந்தியும் தாமரையுமாக என்னை இன்பத்திற்குள்ளாக்கின.

நூலாசிரியர் செல்வராஜா சுதாகரன் என்கின்ற வயலூரான் ஆயிரம் வெண்பாக்களால் பாமாலையாக்கி அருந்தமிழ் அன்னைக்கு அணிகூட்டி இருக்கிறார். நூலின் தொடக்கமாக இறை வணக்கத்தைக் காப்புச் செய்யுள்களாக வைக்கிறார் ஆசிரியர். அப் பாடலை ஆசிரியரின் வெண்பா புனையும் ஆற்றலுக்கும் மரபின்பால் அவர்கொண்ட காதலுக்கும் சான்றாக்குகின்றேன்.

வேதவனம் தன்னில் விரும்பியுறை நாதனே

ஏதமின்றி என்றனது இம்முயற்சி – பூதலத்தில்

சாதனை படைத்திடத் தண்ணருளே தந்தெனக்குப்

பாதகம் வந்திடாமற் பார்.

என்கிறார். என்னவொரு வேண்டுதல்!

அன்னை ஓர் ஆலயம் என்னுந் தலைப்பில் தன்னுடைய தாயைப் போற்றுவதோடு மட்டுமல்லாமல் பொதுவிலும் அனைவரும் போற்ற

வேண்டும் என்ற நற்சிந்தையோடு வெண்பாக்களை ஆக்கித் தந்துள்ளார் நூலாசிரியர் வயலூரான் செல்வராஜா சுதாகரன் என்றால் அது மிகையில்லை. அதற்குச் சான்றாக,

சான்றோன் எனவே சகத்துளோர் போற்றிட
ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பாள் - தன்னை
உருக்கியே எங்கள் உயர்வுக்காய் வாழும்
திருமகள் தன்னைத் தெரி - 018

என்னும் வெண்பாவைச் சுட்டலாம்.

அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வம் என்பதற்கேற்ப அன்னையைத் தொடர்ந்து தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்னுந் தலைப்பில் வெண்பாக்களை வைக்கிறார் நூலாசிரியர்.

தந்தைசொல் மிக்கதாய் தாரணியில் வேறொரு
மந்திரம் தானில்லை மாற்றாக – சந்ததம்
எங்களது ஏற்றத்தை எண்ணி யுழைத்திடும்
தங்கமான தந்தையைத் தாங்கு - 040

என்கிறார்.

தந்தை தாய்க்குப் பின்னர் அறிவினைப் புகட்டும் ஆசானைப் போற்றல் அறம் என்கிறார் கவிஞர்.

எமக்கறிவு ஊட்டுதற்காய் என்றும் படித்து
தமதறிவை ஏத்திடுவார் தாமே – நமதறிவு
என்னாளும் ஏற இதயம் மகிழ்ந்தவர்
நன்றெமை வாழ்த்துவார் நாடு - 063

என்றும்

வேதனைகள் சூழ்ந்துநாம் வெந்துமிக வாடாமல்
சாதனைகள் செய்து சகமதில் - ஏதமின்றி
என்னாளும் வாழ்ந்தே எதிர்ப்போரை வென்றிட
அன்பாய்த் தருவார் அறிவு - 061

என்றும் கற்பித்த ஆசான்களைப் போற்றுகிறார் கவிஞர்.

இருமனம் இணையும் இல்லறம் என்னுந் தலைப்பில் இந்நிலவுலகிற்குத் தேவையான அறக்கருத்துகளைப் பதிய விட்டிருக்கிறார் நூலாசிரியர் என்பது கண்கூடு. உதாரணமாக

இனிக்கிற இல்லறம் ஈங்கியற்ற வேண்டில்
கனிவாய் மலரணும் காதல் - நனிபுகழ்
பெற்றுமே இந்தப் பெரும்புவி தன்னில்நீ
உற்றிடல் வேண்டும் உயர்வு - 076

என்ற பாடலைச் சுட்டலாம்.

கற்பீர் மரபுக்கவி என்னுந் தலைப்பில் வெண்பா, விருத்தம், கலிப்பா என அனைத்தையும் கற்கவேண்டும் என்ற ஆவலினை அகிலத்திற்கு முன்வைக்கிறார்.

வெண்பா விருத்தம் விரும்பும் கலிப்பாவாய்
மண்ணில் மலர்ந்து மணம்பரப்பும் - எண்ணிலாப்
பாக்கள் பலவிந்தப் பாரினில் உண்டாமே
ஆக்க முயல்வோம் அறிந்து - 096

என்னும் பாடல் இதற்குச் சான்றாகும்.

தழைத்தோங்கும் தங்கத் தமிழ் என்று தாய்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பினையும் தங்கத்தமிழ் தழைத்தோங்க வேண்டும் என்ற தீராக் காதலையும் வெண்பாக்கள் மூலமாக வெளிப்படுத்தி உள்ளார் கவிஞர்.

சங்கம் வளர்த்ததமிழ் சண்முகனார் தந்ததமிழ்
எங்கும் புகழ்பரப்பும் இன்றமிழ் - எங்களின்
மூச்சாய் இருந்திடும் முத்தமிழ் இங்கினி
வீச்சாய் வளரும் விளம்பு - 150

என்று தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

தான்வாழும் தென்மராட்சி மண்ணின் சிறப்பைச் சொல்லும் போழ்து

வந்தாரை வாழவைக்கும் வண்ணமுறு தென்மராட்சி
சொந்தங்கள் சூழ்ந்து சுடர்விட்டு – சிந்தை
குளிர்ந்திடச் செய்யும் குவலயந் தன்னில்
ஒளிர்ந்திடும் என்றும் உணர் - 225

என்று உரைக்கின்றார்.

இயற்கையைப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். நூலாசிரியர் மட்டும் விதிவிலக்கா என்ன. இயற்கை அழகே அழகு என்று அழகியல் வெண்பாக்கள் தந்திருக்கின்றார்.

ஆற்றோர ஆலமரம் ஆங்கிருக்கும் புள்ளினங்கள்
ஊற்றாகும் உள்ளன்பை ஊக்குவிக்கும் - வீற்றிருக்கும்
பிள்ளையார் அப்பனின் பேரழகும் தானிங்கு
கொள்ளை அழகோ அழகு. - 283

என்று விதந்துரைத்திருக்கின்றார்.

சமூகத்திற்காகப் பொல்லாத போதையைப் போக்கு என்று சீர்திருத்தம் நோக்கிய வகையில் விழிப்புணர்வுக் கருத்துகள் நிறைந்த வெண்பாக்களை வைக்கிறார். சான்றாக

பொல்லாத போதையைப் போக்குவோம் நாமிணைந்து
எல்லோரும் ஒன்றாக இப்புவியில் - பல்லாண்டாய்
பாழ்படுத்தும் போதையினைப் பாரில் அழித்திடவே
சூழுரைப்போம் என்றே சொல். - 316

என்றும் , போராட்டச் சூழலால் இடப்பெயர்வின் போது ஏற்பட்ட இன்னலினைச் சுட்டவும் தவறவில்லை.

வன்செயல்கள் தந்ததுயர் வாட்டுகின்ற வேளையில்
இன்னல் தவிர்க்க இடம்பெயர்ந்து – அன்னாளில்
கண்டதுயர் கொஞ்சமா காசினி தன்னிலே
எண்ண முடியுமா இங்கு. - 373

என்று சுட்டும் போழ்தே வேதனையின் உச்சம் நம்முள்ளும் தொற்றிக் கொள்ளத்தான் செய்கிறது.

அத்துடன் நல்லதோர் நண்பனென நம்பு என்று பல வெண்பாக்களை இந்தத் தலைப்பிலே தந்துள்ளார் நூலாசிரியர்.

கற்றோர் சபையிற் கலக்கமுறும் வேளையில்

தற்றுணிபாய் வந்துடன் தான்காப்பான் - இற்றரையில்

கல்விச் சிறப்பினைக் காட்டியே நிற்பவனே

நல்லதோர் நண்பனென நம்பு. - 600

என்றும் சொன்னவர் நல்லைக் கந்தனுக்குப் புகழ்மாலையும் சூட்டுகின்றார்.

நின்றனது தாளே நிதமுஞ் சரணமென

வன்மை அகற்றும் வடிவேலா – என்றனது

வாழ்வது தானுயர்ந்து வையத்தோர் ஏத்தவே

தாழ்வும் வராமல்நீ தாங்கு. - 799

என்றும்

நல்லூர்ப் பதியினிலே நல்லாட்சி செய்திடும்

வல்லோனே வேலா வருதுயரை - இல்லாமற்

செய்யும் அழகனே செவ்வேற் குமராநீ

உய்யும் வழியை உரை. - 803

என்றும் நல்லூர் வேலனைப் போற்றிப் புகழ்கிறார்.

முகநூலில் ''ஊலமுள'' குழுமத்தில் நடைபெற்றுவரும் பொன்மொழி வெண்பா போட்டிகளில் வெற்றிபெற்ற வெண்பாக்களையும் ஆயிரம் வெண்பா மாலை நூலிலே இணைத்திருப்பது மிகவும் சிறப்பு. அதிலிருந்து சான்றாக

உண்ணும் உணவை உலகோரும் உண்ணவே
எண்ணிப் பகிர்ந்து எடுத்தளித்து – உண்ணுகிற
பண்பாடு காத்திந்தப் பார்தனில் வாழ்வதே
மண்ணில் தமிழரின் மாண்பு. - 960

என்பதைச் சுட்டலாம்.

நிறைவாக நன்றி செலுத்துவேன் நான் என்னுந் தலைப்பில் தான் மரபிலே சாதிப்பதற்கான உந்துசக்தியாக இருந்து ஏற்றிவிட்ட ஏணிகளை மறக்காமல் பதினாறு வெண்பாக்களினால் நன்றி செலுத்தியுள்ள மேன்மைப் பண்பு போற்றுதற்குரியது.

இப்படியாக ஆசிரியர் தொடாத பக்கங்களே இல்லை எனலாம். அற்புதமான இந்த நூலுக்கு அணிந்துரை வழங்க நல்வாய்ப்பினைத் தந்த கவிஞர் அன்புச் சகோதரர் இந்நூலின் ஆசிரியர் திருமிகு செல்வராஜா சுதாகரன் - வயலூரான் அவர்கள் மேலும் மேலும் மரபிலே பற்பல நூல்களை யாத்து தமிழ்கூறும் நல்லுலகில் தனக்கெனத் தனியிடம் பிடித்துயர எல்லாம் வல்ல இறைமையை வேண்டி நெஞ்சம் நெகிழ்ந்த வகையிலே ஆசிரியரை வாழ்த்தி என் அணிந்துரையினை நிறைவு செய்கின்றேன்.

வாழ்க தமிழ்.

என்றும் பேரன்புடன்

பாவலர் , முனைவர் திருமதி சரஸ்வதி பாஸ்கரன்,

மரபிலக்கணப் பேராசிரியர்,

இலண்டன் பாமுகம் தொலைக்காட்சி மற்றும் நெதர்லாந்து சூரியத்தமிழ் தொலைக்காட்சி.

திருச்சி, தமிழ்நாடு

இந்தியா.

**என்னகத்திலிருந்து..............................**

தாய்மொழியாம் தமிழ்மொழியை வணங்கி எல்லாம் வல்ல இறைபரம்பொருளைப் பணிந்து என்னை இவ்வுலகில் பெற்றெடுத்து ஆளாக்கி வைத்த என்பெற்றோரடிகளைப் போற்றி மரபிலே நான்வளர எனக்கு வழிகாட்டிய என் குருநாதர்களின் ஆசிவேண்டித் தொடர்கின்றேன்.

என்னுடைய பன்னிரெண்டாவது நூலாக இந்நூல் மலர்ந்தாலும் மரபிலே மலர்கின்ற இரண்டாவது நூல் இதுவாகும். கடந்த 2019 ஆம் ஆண்டிலே வெளிவந்த "குருதிபடாக் காயங்கள்" மரபில் மலர்ந்த முதலாவது நூலாகும். அதற்கு கிடைத்த வரவேற்பும் ஆதரவும் எனது இப்படைப்பைக் கொணர்வதற்கு உந்துசக்தியாக இருந்தது என்றால் அது மிகையில்லை.

மொத்தமாக 56 வகையான மலர்களைக் கொண்டு அற்புதமாக , அழகாக இந்த வெண்பாமாலையைத் தொடுத்திருக்கின்றேன். அதில் சில மலர்களை அதிகமாகவும் சில மலர்களைக் குறைவாகவும் தேவைக்கேற்ப பயன்படுத்தியுள்ளேன். அம்மலர்களின் வாசனையை நுகர்ந்து அவற்றின் சுவைபற்றி எனக்குத் தெரிவிப்பீர்களாயின் மனமகிழ்வேன்.

சற்றே அசாத்தியத் துணிச்சலோடு இரண்டு மாத காலத்தினுள் இம்மாலையை அழகாகக் கோர்த்து வெளியிட்டுள்ளேன். தவறுகள் இருப்பின் அவற்றைச் சுட்டிக்காட்டி என்னை வழிப்படுத்துமாறு மரபினில் வல்லவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

இக்கவிமாலை மலர்வதற்கு எனக்கு ஊக்கமளித்த என்னுடைய பால்ய நண்பர்கள், முகநூலின் மூலம் இணைந்த

கவியுறவுகள், நண்பர்கள் இந்நூலினை வரவேற்கக் காத்திருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலிற்கான நயப்புரையை “வியப்புமிகு வெண்பாமாலை” என்னும் தலைப்பில் வழங்கிய பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் கவிஞரும் எனக்கு மரபிலக்கணம் கற்பித்த குருவுமான திருமிகு த.ஜெயசீலன் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய இந்தியா திருச்சியைச் சேர்ந்த பாவலர், முனைவர் திருமதி சரஸ்வதி பாஸ்கரன் அவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். திருமதி சரஸ்வதி பாஸ்கரன் அவர்கள் நள்ளிரவு பன்னிரெண்டு மணியிலிருந்து அதிகாலை ஐந்து மணிவரை என்னுடன் தொலைபேசி வழியாக இணைந்திருந்து எனது ஆயிரம் வெண்பாக்களையும் ஒரு எழுத்து விடாமல் வாசித்து அதிலிருந்த இலக்கணத் தவறுகள், புணர்ச்சித் தவறுகள், எழுத்துத் தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டி என் வெண்பாக்களைச் செம்மைப்படுத்தி இருந்தமை மனங்கொள்ளத்தக்கது.

மேலும் இந்நூலிற்கான அட்டைப் படத்தை வடிவமைத்த மட்டுவில் வடக்கு “வரோ கிரியேஷன்ஸ்” நிறுவனத்தினருக்கும் இந்நூலினை அழகுற அச்சிட்ட சாவகச்சேரி திருக்கணித பதிப்பகத்தினருக்கும் எனது இம்முயற்சி வெற்றிபெற ஊக்கமளித்த உறவுகட்கும் உள்ளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

என்றும் அன்புடன்

“வயலூரான்”

(செல்வராஜா சுதாகரன்)

இறைவணக்கம்-

## காப்புச் செய்யுள்கள்

**வேதவனப் பிள்ளையார் – கல்வயல்**

வேதவனம் தன்னில் விரும்பியுறை நாதனே
ஏதமின்றி என்றனது இம்முயற்சி – பூதலத்தில்
சாதனை செய்திடத் தண்ணருளே தந்தெனக்குப்
பாதகம் வந்திடாமற் பார். - 001

**ஏனைய பிள்ளையார்கள் – கல்வயல்**

நெல்வயல் சூழ்ந்து நிலையில் உயர்ந்துள்ள
கல்வயல் தன்னையே காத்திருந்து – எல்லோர்க்கும்
நல்லருளே நல்கிடும் நால்வகைப் பிள்ளையாரும்
வல்லமை தந்திடணும் வந்து. - 002

**வில்வத்து வைரவர் – கல்வயல்**

வில்வத்துச் சோலையில் வீற்றிருந்து எம்மவரை
நல்லபடி காத்திடும் நாதனே – சொல்வளம்
தந்தென் கவிநூல் தரணியில் ஓங்கிட
வந்தித்தேன் உன்னையே வாழ்த்து - 003

### கெருடாவிற் கந்தன்

கெருடாவிற் கந்தனே கீர்த்திபெறும் வேலா
வருவாயே என்றனை வாழ்த்த – அருள்தந்து
வாழ்த்துவாய் இந்த வயலூரான் தன்னைநீ
தாழ்வின்றி வாழ்ந்திடத் தான் - 004

**பன்றித் தலைச்சிக் கண்ணகை – மட்டுவில் வடக்கு**

மட்டுவிலூர் தன்னிலுறை மாதரசி கண்ணகையே
இட்டமுடன் ஏற்றினேன் இன்றமிழால் - திட்டமிட்ட
என்றனது இம்முயற்சி இப்புவியில் வெற்றிபெற
இன்னருள் தந்திடுவாய் இன்று - 005

**முத்துமாரி அம்பாள் - மட்டுவில் வடக்கு**

முத்துமா ரித்தாயார் முன்னின்று காத்திடுவாய்
இத்தரையில் என்றனின் இம்முயற்சி – சித்திபெற
நற்றமிழால் வாழ்த்திடு நாயகியே உன்னருளால்
பொற்புறட்டும் என்றனின் பா.

- 006

**மருதடி தான்தோன்றி விநாயகர்- மட்டுவில் வடக்கு**

மண்ணுளோர் போற்றும் மருதடிவி நாயகா
எண்ணிப் பணிந்தேன் இனிதுறவே – தண்ணார்
தமிழதனில் நானெழுதித் தந்திடும் இந்நூல்
அமிழ்தாய் இனிக்க அருள் - 007

**பனையடிப் பிள்ளையார்- மட்டுவில் வடக்கு**

பற்றுடனே போற்றிப் பணிந்தேன் பனையடியில்
உற்றிடும் பிள்ளையார் உன்றனை – நற்றுணையாய்
கொண்டுமே நானெழுதிக் கோத்திடும் இந்நூலைக்
கண்டவர் போற்றிடக் காட்டு - 008

**வல்லிபுர மாயவன்- துன்னாலை**

வல்லிபுர மாயவா வாழ்த்தி விடைதருவாய்
நல்லபடி நானெழுதும் நற்பாநூல் - நல்லுலகில்
எல்லோரும் போற்றிட என்றும் புகழினை
வெல்லட்டும் என்றே விளம்பு - 009

**ஆறுபடை முருகன்**

ஆறுபடை வீட்டிற் கதிபதியே வேலவா
வீறுடன் நானெழுதும் வெண்பாநூல் - ஊறின்றி
மக்கள் மனங்களில் மாண்பினைப் பெற்றிட
அக்கறையாய் நீயும் அருள் - 010

## அன்னை ஓர் ஆலயம்

இன்னமுதம் தந்தெமை இப்புவியில் காப்பவள்
தன்னலத்தைப் பாராமல் தாரணியில் - என்னாளும்
மன்னவராய் எம்மையிந்த மாநிலம் போற்றிடவே
தன்னை உருக்கிய தாய் - 011

நோய்நொடிகள் சூழ்ந்துநாம் நொந்துமே வாடாமல்
ஓய்வின்றி எங்களுக்காய் ஓடியும் - சாய்வின்றிச்
சேயெமைக் காக்கச் செகமதில் நல்லநல்ல
வாய்ப்புத் தருவாளே வாழ்ந்து - 012

அறிவுரைகள் சொல்வாள் அவனிமிசைக் காப்பாள்
நெறிமுறைகள் பேணியே நிற்கச் - செறிவுடைய
நல்வழிகள் காட்டியெமை நாநிலத்தோர் போற்றிட
வல்லமை தந்தாளே வலிந்து. - 013

ஊர்மெச்சும் வண்ணம் உயர்த்தியே வைத்திட
ஓர்மமாய் நின்றே யுழைத்திடுவாள் - பார்தனில்
என்னாளும் நாங்கள் இடரின்றி வாழ்ந்திட
தன்னாவி தந்திடும் தாய் - 014

சேட்டைகள் செய்யச் சினமேதும் கொள்ளாமல்
ஊட்டி மகிழ்வாள் உணவினை – நாட்டமுடன்
செய்யும் பணியால் சிறப்பினைப் பெற்றிடுவாள்
தெய்வம் அவளெனத் தேர் - 015

அறுசுவை உண்டியை ஆக்கியே ஊட்டி
பொறுமையும் காத்துப் புவியில் - உறுதியாய்
எங்களின் வாழ்வில் இனிமையும் கூட்டவே
சங்கடம் தீர்ப்பாளே தாய் - 016

உதரஞ் சுமந்தே உதிரத்தைப் பாலாய்
மதலை எமக்கு மகிழ்வாய் - நிதமும்
தருவாள் உணவாய் தரணியது தன்னில்
அருமையுறு தாயை அறி - 017

சான்றோன் எனவே சகத்துளோர் போற்றிட
ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பாள் - தன்னை
உருக்கியே எங்கள் உயர்வுக்காய் வாழும்
திருமகள் தன்னைத் தெரி - 018

மதலை மொழியை மகிழ்ந்து சுவைத்து
நிதமும் மகிழ்வுடன் நின்று – பதமாய்
எமதுடல் பேணி இடரின்றிக் காத்து
நமதுயிர் காப்பவளை நாடு - 019

நித்தமும் எம்மை நினைந்துமே வாழ்ந்திடுவாள்
சத்தம் இலாமலே தன்பணியை – மொத்தமாய்
செய்தே முடிப்பாள் செகத்தில் அவளையே
உய்யும் படியாய் உயர்த்து - 020

எத்தனை துன்பம் எதிர்வந்த போதிலும்
வித்துவம் காட்டி விலக்குவாள் - இத்தரையில்
என்னாளும் எங்களின் ஏற்றத்தை எண்ணிடும்
அன்னவள் பாதம் அடை - 021

ஆகாரம் ஊட்டுவாள் ஆசையாய் எங்களுக்கு
ஆகாத துன்பங்கள் அண்டாமல் - பாகாய்
இனிக்கும் அறிவுரைகள் ஏற்றபடி சொல்லி
தனிப்புகழ் பெற்றிடுவாள் தாய் - 022

நிந்தனை வந்திடாமல் நின்றெமைக் காப்பவளை
வந்தனை செய்து வழுத்தியே – சந்ததம்
அந்திபகல் அன்னாள் அடிகளைப் போற்றியே
வந்தனை செய்யணும் வா - 023

பாடுவாள் ஆடுவாள் பாசத்தைக் காட்டுவாள்
ஓடுவாள் எங்கள் உயர்வுக்காய் - நாடுவாள்
நல்லன தந்திட நண்ணிடும் அன்னையாம்
வல்லவள் தன்னை வழுத்து - 024

வண்ணக் கதைசொல்லி வாகாய் எமக்காக
உண்ணும் உணவினை ஊட்டுவாள் - மண்ணில்
வலியோர் எமையே வதைத்து விடாமல்
வலிமை தருவாளை வாழ்த்து - 025

பள்ளிப் படிப்புப் படித்து வரவெம்மை
அள்ளி எடுத்தே அணைத்திடுவாள்- துள்ளிக்
குதித்து மகிழும் குழந்தைகள் எம்மைக்
கதியென் பவளையே காண் - 026

கண்விழித் தெங்களைக் காத்துமே நின்றிடுவாள்
அண்டும் துயரை அகற்றியே – மண்ணுலகில்
எங்கள் நலனே எதிலும் உயர்வெனப்
பங்கம் விலக்குவாள் பார் - 027

நொந்து சுமந்தெம்மை நோகாமற் காத்தவள்
வந்தனை செய்தே வளர்த்தவள் - சந்ததம்
சேய்களை எண்ணிச் சிறப்புடன் நற்பணி
ஆய்ந்துமே செய்தாள் அறி - 028

பத்தியங் காப்பாள் பகலிரவு பாராமல்
நித்திரை இன்றியே நீடிப்பாள் - தொந்தரவாய்
எண்ணாமல் எங்களை என்னாளும் காப்பாளே
தண்ணார் மதிமுகத் தாய் - 029

அன்னையோர் ஆலயம் அன்பின் உறைவிடம்
அன்பாய் எமக்கே அறிவுரைகள் - என்னாளும்
சொல்லி வளர்ப்பாள் சுகத்தினைத் தந்திடுவாள்
அல்லல் தவிர்ப்பாள் அறி - 030

## தந்தைசொல் மிக்க மந்திரமில்லை

தன்துன்பம் பாரார் தரம்தாழ்த்த மாட்டாரே
அன்பினால் எம்மை அடக்குவார் - என்னாளும்
குற்றங் களைந்து குவலயத்தில் நாமுயர
நற்பணி செய்வார் நனி - 031

பேரறிஞர் வீற்றிருக்கும் பேரவை தன்னிலே
ஊரறிந்த உத்தமனென் றேத்திட – பாரதனில்
பக்குவமாய் நற்பணி பற்பலவாய்ச் செய்திடுவார்
எக்கணமும் போற்றுவோம் ஈங்கு - 032

சிந்தை முழுவதும் சேய்களெமை எண்ணிநிதம்
வந்தனை செய்துமே வாழ்ந்திடுவார் - முந்தியே
நற்றவம் செய்திட நல்வழி காட்டுவார்
இற்றரை போற்றும் இனி - 033

தன்குழந்தை தன்குடும்பம் தாரணியில் ஓங்கிட
என்னவழி என்றே எடுத்தாய்ந்து – நன்றே
எமக்குரைத்து நாளும் இனிதுயர வைப்பார்
நமதுயிர் காத்திடுவார் நம்பு - 034

ஆண்டவன் பாதம் அடியொற்றி நாளுமெமை
மாண்புறச் செய்தே மகிழ்ந்திருந்து – தீண்டிடும்
தீங்குகள் எல்லாம் செறிவிழந்து சென்றிடப்
பாங்காய் பணிசெய்வார் பார் - 035

கூடாத நண்பரொடு கூடாதே என்றுமனம்
வாடாமற் சொல்லி வழிப்படுத்திச் - சாடாமல்
நல்லுரை தந்தெமை நல்லவர் ஆக்கியே
வல்லவர் ஆக்குவார் வா - 036

தன்பிள்ளை தான்வளர்ந்து தாரணியில் நன்னிலையை
என்னாளும் பெற்றிட எண்ணியே – தன்னால்
இயன்றபணி பற்பலவும் இங்கிதமாய்ச் செய்து
நயம்பல நல்குவார் நாடு - 037

தன்புதல்வன் மேன்மைகண்டு தாரணியிற் தான்மகிழ்ந்து
என்புதல்வன் என்றுமே ஏத்திடுவார் - நன்றுலகில்
சிந்தை தனிலவரைத் தெய்வமாய்க் கொண்டுநாம்
வந்தித்து நின்றிடுவோம் வா - 038

வாடும் நிலையெமக்கு வந்திடாமற் தானென்றும்
பாடுபட்டுத் தானுழைத்துப் பாரினில் - தேடும்
நலவாழ்வில் எங்களை நண்ணிடச் செய்யப்
பலமாய் உழைத்திடுவார் பார் - 039

தந்தைசொல் மிக்கதாய் தாரணியில் வேறொரு
மந்திரம் தானில்லை மாற்றாக – சந்ததம்
எங்களது ஏற்றத்தை எண்ணி யுழைத்திடும்
தங்கமான தந்தையைத் தாங்கு - 040

ஓடியும் எங்களுக்காய் ஓடாய் உழைத்திட்டு
தேடிநல்ல வாழ்வினைத் தேர்ந்திடுவார் - நாடிநாம்
அன்னவர் பாதம் அடியொற்றி இப்புவியில்
என்னாளும் போற்றுவோம் ஈங்கு - 041

கண்டிப்புக் காட்டுவார் காசினியில் எம்மையே
தண்டிக்க மாட்டார் தயவுடன் - அண்டிநல்ல
ஆன்றோர்கள் கூறும் அறிவுரைகள் சொல்லியெமை
சான்றோனாய் ஆக்குவார் சாற்று - 042

ஆற்றுப் படுத்தி அவனியில் நாமுயரப்
போற்றும் பணிகள் புரிந்திடுவார் - ஏற்றுநாம்
மண்ணில் தினமும் மதித்து நடந்திட
விண்ணும் புகழும் விரும்பு - 043

கண்ணும் கருத்துமாய் காப்பாற்றி எங்களை
மண்ணில் தினமும் மகிழ்வித்து - விண்ணுளோர்
போற்றும் படியாய் புவியதில் வாழ்வித்தும்
ஏற்றம் தருவார் இயம்பு - 044

தந்தையின் பாசத்தைத் தாரணியில் ஈங்கெவரும்
சிந்தித்துப் பார்ப்பதில்லைச் சீர்தூக்கி – சந்ததம்
பிள்ளைகள் வாழ்வைப் பெரிதும் விரும்பியே
அள்ளிக் கொடுப்பார் அறிவு - 045

மண்ணுளோர் எம்மை மதித்திடும் வண்ணமாய்
எண்ணி யுழைத்திடுவார் என்றென்றும் - கண்ணின்
மணிபோல் இருந்து மகத்துவம் தந்தே
அணிபெறச் செய்வார் அறி - 046

இல்லையென என்னாளும் ஈங்குரைக்க மாட்டாரே
தொல்லையென எண்ணிச் சுருங்கிடார் - நல்லுலகில்
எப்போதும் எங்களின் ஏற்றத்தை எண்ணியே
தப்பின்றிக் காத்திடுவார் தான் - 047

நல்லறிவு தந்தெமை நாளும் உயர்த்தியே
வல்லவராய் வாழ வழிகாட்டி – நல்லுலகில்
அல்லல்கள் இன்றியெமக் கானந்தம் தந்திடுவார்
தொல்லைகள் நீக்கித் துணிந்து - 048

அப்பாவின் அன்பை அறிந்திட வேண்டில்நாம்
இப்பாரில் அப்பாவாய் இன்றாகி – எப்போதும்
சேய்களை எண்ணிச் செயலாற்றி வந்திட
வாய்ப்புப் பெறலாமே வா - 049

தந்தைக்கு மாற்றாய் தரணியில் வேறெவரும்
வந்திருக்க வாய்ப்பில்லை வையத்தில் - நொந்தாலும்
தன்துயர் காட்டாமல் தானென்றும் வாழ்ந்திடும்
அன்னவர் பாதம் அடை - 050

## ஆசானைப் போற்றல் அறம்

அறிவுப் பசியை அகற்றத் துடித்துப்
பொறிமுறை வைத்துப் புகட்டும் - அறிவுடை
ஆசான்கள் தம்மை அவனியில் நாங்களும்
கூசாமல் போற்றலாம் கூறு - 051

நல்லன எல்லாம் நமக்குத் தருதற்காய்
அல்லும் பகலும் அவருழைத்து – நல்விதமாய்
என்றும் பணியாற்றும் எங்களின் ஆசான்கள்
நன்றே யுயரணும் நாடு - 052

மற்றொரு தாயாய் மதிப்புறு தந்தையாய்
இற்றரை தன்னில் இனிதிருந்து – நற்பணி
செய்திடும் ஆசான் செகமது தன்னிலே
உய்யணும் என்றே உரை - 053

ஒழுக்க நெறிகள் உபதேசித் தென்றும்
வழுக்கள் தவிர்த்து வகையாய் - அழுத்தி
அறிவுரை சொல்லுவார் ஆற்றுப் படுத்தி
நெறிமுறை காத்திடுவார் நின்று - 054

அன்னை தமிழொடே ஆங்கிலப் பாடமும்
இன்னமுது போல இனிதாக – என்றும்
எமக்கே யுரைத்தெமை ஏற்றமுற வைப்பார்
தமதுபணி யென்றே தனித்து - 055

உலக நடப்பை உணர்ந்திடச் செய்வார்
உலகம் தனில்நாம் உயரப் - பலமான
ஒற்றுமை பேணி யுயர்வைத் தருவாரே
செற்றவர் தம்மையும் சேர்த்து - 056

மாணவர் தங்கள் மனங்கள் குளிர்வுற
வேணவாக் கொண்டு விளம்புவார் - ஆணவம்
கொள்ளாமல் இந்தக் குவலயம் தன்னிலே
அள்ளித் தருவார் அறிவு - 057

பாடநூல் மட்டுமவர் பாடமாய்த் தந்திடாமல்
பாடமாய் பல்துறையைப் பாங்குடன் - பாடமாய்
ஈங்கெமக்குத் தந்துமே இன்பமும் கண்டிடுவார்
நாங்கள் மகிழ்ந்திடத் தான். - 058

நல்லறிவு தந்தெமை நாளும் உயர்த்தியே
வல்லவர் ஆக வழிகாட்டி – தொல்லைகள்
எங்களை அண்டாமல் ஏற்றபடி வாழ்ந்திட
தங்களுரை தந்திடுவார் தாங்கு - 059

மண்புகழும் வண்ணம் மகத்துவம் பெற்றுநாம்
கண்ணியம் மிக்கோராய் காசினியில் - அண்டியவர்
நல்லபடி வாழ்ந்திட நல்வழி காட்டுவார்
அல்லலை நீக்குவார் ஆங்கு. - 060

வேதனைகள் சூழ்ந்துநாம் வெந்துமிக வாடாமல்
சாதனைகள் செய்து சகமதில் - ஏதமின்றி
என்னாளும் வாழ்ந்தே எதிர்ப்போரை வென்றிட
அன்பாய்த் தருவார் அறிவு - 061

கற்றார் நிறைந்த கவினார் சபைதனில்
பெற்றார் மகிழ்ந்து பெருமையுறப் - பற்றுடன்
எங்களுக்கு நல்லறிவு என்னாளும் தந்தவர்
சங்கடம் நீக்குவார் சாற்று - 062

எமக்கறிவு ஊட்டுதற்காய் என்றும் படித்து
தமதறிவை ஏத்திடுவார் தாமே – நமதறிவு
என்னாளும் ஏற இதயம் மகிழ்ந்தவர்
நன்றெமை வாழ்த்துவார் நாடு - 063

போற்றுவோம் ஆசானின் பொன்னடிகள் தம்மையே
ஏற்றுவோம் நாங்களும் என்னாளும் - சாற்றிடும்
நல்லறிவு தந்தவர் நானிலம் தன்னிலே
பல்லாண்டு வாழும் படி. - 064

நல்லறிவு பெற்றிட நாளும் கதைகளை
நல்லபடி கூறுவார் நாடியே – சொல்வளம்
கூட்டும் படியாய் குவலயம் தன்னிலே
காட்டுவார் நல்வழி காண் - 065

## இருமனம் இணையும் இல்லறம்

உள்ளம் இரண்டிங்கே ஒன்றுபட் டிவ்வுலகில்
கள்ளம் இலாதநற் காதலில் - துள்ளி
இணைந்தே யிருந்திட இன்பம் பெருகும்
பிணைப்பும் இறுகுமே பேண் - 066

அன்பைப் பொழிந்தே அகமதும் ஒன்றாகி
இன்பம் பெறுவரே என்னாளும் - மன்னுலகில்
தோன்றிய காதலால் தொல்லைகள் தீர்ந்துமே
வான்புகழ் காண்பரே வாழ்த்து - 067

வேற்றுமை காட்டாமல் வேதனை கொள்ளாமல்
ஏற்றுமே வாழும் இதயங்கள் - சாற்றிடும்
காதலால் இந்தநற் காசினி தன்னிலே
ஏதம் தவிர்ப்பர் இனி - 068

சாதி சமயமாய் சாற்றிடும் வேறுபாட்டை
ஆதி முதலாய் அகற்றிடும் - மோதியே
வெற்றியைப் பெற்றிடும் வீராப்பைக் கூட்டுமே
கற்றுளோர் காதலெனக் காட்டு - 069

இருமனம் ஒன்றாகி இப்புவி தன்னில்
வருமோர் உறவே வனப்பாம் - கருதிடும்
காதல் தடையெனில் காசினியில் என்னாளும்
மோதலே தோன்றும் முனிந்து - 070

வம்ச விருத்திக்காய் வையகம் தன்னிலே
தம்முணர்வு ஒன்றியே தானிணைந்து – அம்சமாய்
மக்களைப் பெற்று மகிழ்வை யடைந்திடச்
சிக்கல்கள் தீரும் தெளிந்து - 071

சாத்திரங்கள் சொன்னபடி சான்றோர் உரைத்தபடி
நேத்திரங்கள் சேர்ந்து நிலைத்திடக் - காத்திருந்து
இல்லறம் தன்னில் இணைந்திட நாளுமே
நல்லறம் ஓங்கும் நனி - 072

அற்றவர் தம்மையும் ஆதரித்து நாளுமினி
பற்றுடன் இல்லறம் பாரினில் - பொற்புடன்
என்றும் நடாத்திட இன்பம் பெருகுமே
நன்றே யுயரலாம் நம்பு - 073

வேதியர்கள் சேர்ந்துநல் வேதங்கள் ஓதிட
ஆதிரை நாதனை அண்டியே – கோதிலா
இல்லறம் தன்னில் இணைந்தே யுறவாடும்
வல்லவர் தம்மையே வாழ்த்து - 074

இனிதான இல்லறம் இப்புவி தன்னில்
நனிசுவை தந்திடும் நாளும் - இனியும்
கவர்ச்சியை நம்பிநீ காதலிக் காமல்
தவமது செய்வாய் தழைத்து - 075

இனிக்கிற இல்லறம் ஈங்கியற்ற வேண்டில்
கனிவாய் மலரணும் காதல் - நனிபுகழ்
பெற்றுமே இந்தப் பெரும்புவி தன்னில்நீ
உற்றிடல் வேண்டும் உயர்வு - 076

காதலர் தாமும் கருத்தொன்றி வாழ்ந்திட
ஏதங்கள் நீங்கிடும் என்னாளும் - ஆதரவாய்
நல்லோரின் நட்புமிந்த நானிலத் தோங்கிடும்
பல்லாண்டு வாழ்வர் பழுத்து - 077

மழலைகள் தம்மை மகிழ்வுடன் தந்தே
அழகிய இல்லறம் ஆற்றிப் - பழகிட
அல்லல் அகன்றிடும் ஆனந்தம் ஓங்கிடும்
பல்லாண்டு வாழலாம் பார் - 078

இல்வாழ்வார் எல்லாம் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்றிட்ட நற்றுணையாம் - நல்லுலகில்
இல்லார்க்கும் நல்லுதவி ஈந்துமே வாழ்ந்தவர்
நல்லறம் பேணுவர் நாடு - 079

ஆயுள் வரைதொடரும் ஆனந்த வாழ்வினில்
பாயும் பகைகள் பரவாமல் - தாயும்
தகப்பனெனத் தாரணியிற் தானிணைந்து வாழச்
சுகமினிக் கூடுமெனச் சொல் - 080

## வேடதாரி உறவுகள்

நல்லவர் போலிங்கு நாடகம் ஆடியே
அல்லல் கொடுத்தே யழித்திடுவார் - மெல்லவே
எம்மையும் ஏய்த்தே எமதுயிர் வாங்கிட
இம்மையில் செய்வர் இழிவு - 081

உள்ளத்தில் நஞ்சும் உதட்டிலே தேனுமாய்
மெள்ளவே வந்திந்த மேதினியில் - கள்ளமாய்
ஆங்கவர் செய்யும் அநியாயம் தன்னைநாம்
பாங்காய் அகற்றணும் பார் - 082

என்றும் எதிலும் எரிச்சல் பொறாமையும்
நின்று கெடுக்கும் நினைவதும் - ஒன்றி
அடுத்துக் கெடுத்திட ஆங்கே முயல்வர்
விடுத்தே விலக விரும்பு - 083

எங்கள் வளர்ச்சியை ஏற்றிட மாட்டாமல்
தங்கள் வெறுப்பைத் தரணியில் - எங்கும்
வலிந்து விதைத்தெமை வாட்ட முயல்வார்
நலியும் வரையென நம்பு - 084

கொஞ்சி யுறவாடிக் கோபமும் கொள்ளாமல்
வஞ்சகம் செய்வர் வலிந்துமே – அஞ்சி
ஒதுக்கி அவருடை ஒட்டுறவை நீக்கப்
பதுங்கி விலகுவர் பார். - 085

அண்டிப் பிழைப்பார் அருகினில் நின்றுமே
நண்பரைப் போல நடித்திடுவார் - மண்ணில்
அவமே இவர்போல் அடுத்துக் கெடுப்போர்
பவமே புரிவர் பகர் - 086

அழையா விருந்துக்கு ஆர்பாட்டஞ் செய்து
நுழைய முயன்றிடும் நுட்பம் - பிழைக்க
வழிகளைத் தேடியெம் வாழ்வினில் வந்தே
அழிவைத் தருவர் அறி - 087

எங்கள் வளத்தை எடுத்தே யுயர்த்திடத்
தங்கள் உழைப்பைத் தருவதாய் - எங்கும்
பரப்புரை செய்வாரிப் பாரில் அவரின்
குரல்வளை தன்னைக் குதறு - 088

கூடி யிருந்து குழிபறித் தெங்களை
வாடி வதங்கிட வைப்பரே – நாடிநிதம்
எங்களின் தாழ்வை எடுத்தவர் கொண்டாடிப்
பங்கம் விளைப்பரே பார் - 089

அஞ்சி நடப்பதாய் ஆசையும் காட்டியே
வஞ்சகம் செய்தே வதைத்திடுவார் - நஞ்சொத்த
அன்னவர் தம்மை அழிக்க முடிந்தாலே
இன்னல் விலகும் இனி - 090

## கற்பீர் மரபுக் கவி.

மரபுக் கவிதையின் மாண்பினை ஏற்றுத்
தரமான பாக்கள் தரலாம் - தரணியில்
பற்றுடன் யாப்பைப் படித்திட வந்திடுமே
நற்கவி யாற்றலும் நன்று - 091

நன்றாய் மரபினை நாமுமே கற்றிட
என்றும் கவிகள் எழுதலாம் - நன்றினிச்
சீர்களைப் பற்றித் தெரிந்திட வந்திடும்
பார்தனில் பாவெழுதும் பண்பு - 092

பண்புடன் தேமா புளிமா கருவிளம்
எண்ணிடும் கூவிளம் என்றுள – பண்பான
ஈரசைச் சீர்களை ஏற்றிட வந்திடும்
பாரதனிற் பாவெழுதும் பண்பு - 093

பண்புடன் காய்ச்சீர் கனிச்சீர்கள் எட்டையும்
வண்ணமாய்க் கற்றிட வந்திடும் - பண்புயர்
நற்பா வனைந்திடும் நல்லறி வோங்கிடும்
இற்றரை போற்றும் இனி - 094

இனிதான பாக்களை இன்றமிழில் நல்கி
நனிபுகழ் தன்னையே நண்ணக் - கனிவுடன்
நற்குரு தேடியே நல்லபடி நீவிரும்
கற்பீர் மரபுக் கவி - 095

வெண்பா விருத்தம் விரும்பும் கலிப்பாவாய்
மண்ணில் மலர்ந்து மணம்பரப்பும் - எண்ணிலாப்
பாக்கள் பலவிந்தப் பாரினில் உண்டாமே
ஆக்க முயல்வோம் அறிந்து - 096

நற்கவி யாப்பினை நாமுணர்ந்து கொண்டாலே
பற்றுடன் பாக்கள் படைக்கலாம் - கற்றிட
நற்குரு தேடிநீர் நன்கதனைக் கற்றிட
வெற்றி பெறலாம் விரைந்து - 097

பாட்டினில் ஓசையும் பாங்காய் கலந்திட
ஏட்டில் எழுதலாம் இன்கவி – நாட்டில்
மரபுக் கவிஞரும் மாண்பைப் பெறவே
தரணும் மதிப்புத் தக. - 098

ஒழுங்குடன் ஓசையும் ஒன்றித் திருந்தால்
பழுதின்றிப் பாக்கள் படைத்து – வழுவிலா
நற்கவி என்றிந்த நானிலந் தன்னிலே
பெற்றிடலாம் இன்பப் பெயர் - 099

மரபுக் கவியாக்கும் மாகவிஞர் மண்ணில்
வரணும் எனவே வணங்கி – மரபில்
வயலூரான் தந்திடும் வண்ணக் கவிநூல்
நயமாய் உயரட்டும் நன்று - 100

## செல்லிடப் பேசியின் சிறப்பும் சீரழிவும்

செல்லிடப் பேசியது செய்திடும் வேலையை
நல்விதம் நானும் நவில்வேனே – நல்லுகில்
நல்வாழ்த்தும் சொல்லலாம் நட்பினைக் கூட்டலாம்
நல்லநாள் தன்னிலென நம்பு - 101

உலகெலாம் வாழும் உறவினர் தங்கள்
நலமது கேட்டு நனிதே – பலமிக்க
நல்லுறவு பேணலாம் நாட்டின் நடப்பினை
நல்லபடி கூறலாம் நம்பு - 102

காலத்தைக் காட்டும் கடிகாரம் கொண்டது
ஞாலத் தவரோடு நட்புடன் - காலமெலாம்
நாங்கள் பழகிட நல்வாய்ப்புத் தந்திடுமே
பாங்குறு பேசியும் பார் - 103

அன்புடன் மற்றவர்க்கு ஆனநல்ல சேதிகளை
மின்னஞ்சல் செய்யலாம் மேலுமிங்கு – நன்றாய்
தகவல் பரப்பும் தனித்திறன் கொண்ட
தகவுடைச் சாதனம் தான் - 104

கடந்திடும் காட்சிகளைக் காணொளி ஆக்கி
உடனே உலகுக் குணர்த்தும் - படமாய்
நிகழ்வுகள் எல்லாம் நிலைபெற வைக்கும்
தகைமை யுடைத்தெனச் சாற்று - 105

கணிப்பொறி யுண்டதில் கல்வியும் கற்றுப்
பணிகளும் செய்யலாம் பாரில் - அணியாக
எங்களின் வாழ்வை இலகுவாக ஆக்கிடும்
எங்ஙனும் உண்டே இயம்பு. - 106

செல்லிடப் பேசியால் சீரழிவும் உண்டாமே
வல்லுறவுக் காட்சிகளை வாள்வெட்டை – துல்லியமாய்
காட்சிகள் ஆக்கியே காட்டுவார் செம்மையாய்
நாட்டமும் கொண்டே நமக்கு - 107

களவு கொலைக்குமே காரணம் ஆகும்
உளவுப் பணிக்கும் உதவும் - களத்தில்
தகவல் பரப்பிடத் தானுதவும் பேசி
தகர்க்குமே பொய்யினைத் தான் - 108

நல்லபடி பேசியினை நாமிங்கு கையாண்டால்
அல்லவை நீக்கிடும் ஆற்றலை – நல்லுலகில்
எங்களுக்குத் தந்திடும் ஏதங்கள் வாராமல்
எங்களைக் காக்கும் இனி - 109

நன்மையா தீமையா நாமதைக் கையாளும்
தன்மையால் வந்திடும் தானாமே – என்னாளும்
அல்லதை நீக்கி அறிவார்ந்த செய்திகளை
நல்விதம் தந்திடணும் நாம் - 110

பலவாய் வசதிகள் பல்கிப் பெருக
நலமாய் இருக்கும் நமக்கே – உலகினில்
அப்பேசி தன்னைநீ ஆசையாய் பெற்றிட
இப்பார் இனிக்கும் இனி - 111

தொலைவினில் உள்ளோர் தொடர்பும் கிடைக்கும்
அலைச்சல் அகலும் அறிவாய் - நிலையாய்
வளரும் தொழிநுட்பம் வாழ்வினில் தந்த
உளமகிழ் பேசி உணர் - 112

கடிதினிற் செய்திகளைக் காசினி எங்கும்
துடிப்பாய் பரப்பும் துலங்கி – நொடியில்
உலகம் முழுதும் உணர்ந்திடச் செய்யும்
பலமிகு பேசியெனப் பற்று - 113

காதலர் வாழ்வில் களிப்பினைத் தந்திடும்
மோதலை நீக்கிடும் முன்னின்று – ஏதம்
அகன்றிடச் செய்துமே ஆனந்தம் நல்கும்
தகவுற பேசியெனச் சாற்று - 114

கரத்திற் கடக்கமாய் காசினி தன்னில்
பரவி இருக்குமிப் பேசி – வரமாய்
மனிதர் தமக்கிங்கு மாண்பினைத் தந்து
தனிப்புகழ் பெற்றிடும் தான் - 115

## பாசத்தாற் கூடும் பரிவு

மாசில்லா அன்பை மனத்தினிற் கொண்டுமே
நேசித்து வாழ்ந்திடும் நெஞ்சங்கள் - காசினியில்
காசற்றுக் காட்டிடும் காதலால் தோன்றிடும்
பாசத்தாற் கூடும் பரிவு - 116

உண்மை உறவுகளின் உள்ளம் இணைந்திட
மண்ணில் மலரும் மகிழ்வினை – எண்ணியே
என்னாளும் வாழ்ந்திட இப்புவி தன்னிலே
இன்பம் பெருகும் இனி - 117

கூட்டுக் குடும்பமாய்க் கூடியே வாழ்ந்திட
வாட்டும் துயரெலாம் வாடுமே – நாட்டினில்
நேச உறவுகள் நெஞ்சாரக் காட்டிடும்
பாசத்தாற் கூடும் பரிவு - 118

எத்தனை துன்பம் எதிர்வந்த போதிலும்
அத்தனை துன்பமும் ஆய்ந்துமே - இத்தரையில்
நாசனம் பண்ணி நலிவடையச் செய்திடும்
பாசத்தாற் கூடும் பரிவு - 119

வஞ்சகம் கொண்டு வழிப்பறி செய்திடும்
கஞ்சரின் நட்பைக் கழித்துமே – அஞ்சாமல்
நட்பினைக் காத்திட நாட்டினில் என்றுமினி
நட்டமும் வாராது நம்பு - 120

உள்ளொன்று வைத்தே உறவாடி நின்றெமைப்
பள்ளத்தில் தள்ளிடப் பார்ப்பவரைத் - தள்ளியே
துண்டித்து நிற்கும் துணிவான பாசத்தால்
மண்ணிற் பெறலாமே மாண்பு - 121

நரம்பிலா நாக்கினால் நாலையும் பேசி
வரம்பிலாத் துன்பம் வழங்கிடும் - பரிவுடன்
வாழ்வதாய்க் காட்டிடும் வஞ்சகர் தாமழியத்
தாழ்வைத் தவிர்க்கலாம் தான் - 122

பெற்றவர் தங்களின் பிள்ளைகள் தம்மேலே
உற்றிடும் பாசம் உயர்வாமே - இற்றரையில்
அத்தனை பேரும் அடிபணிந்து வாழ்வரே
நித்தம் மகிழ்வாய் நினை - 123

இப்புவி தன்னில் இருக்கும் விலங்கினங்கள்
முப்போதும் அன்பினையே மூச்சாக - இப்பாரில்
கொண்டுமே வாழ்வதால் கூட்டமாய் வாழுமே
கண்டிடு நீயும் கனிந்து - 124

பாசமும் நேசமும் பாரினில் கூடினால்
நாசம் தவிர்க்கலாம் நாமிங்கு – தாசனாய்
என்னாளும் வாழ்ந்திட இன்பம் பெருகுமே
இன்னாளில் இங்கே இயம்பு - 125

பெற்றெடுத்த தாயாரும் பேணிடும் தந்தையரும்
பற்றுடன் காட்டிடும் பாசத்தால் - இற்றரையில்
நல்லதோர் பண்பாளன் நாளுமிங்குத் தோன்றுவான்
அல்லல் அழிப்பான் அறி. - 126

அன்புடைப் பெற்றோர்மேல் ஆதரவைக் காட்டிநின்று
என்னாளும் காக்கும் இளையோர்கள் - இன்பமாய்
இப்புவியில் என்றும் இருந்திடுவர் என்றுநீ
தப்பாமற் சாற்றிடுவாய் தான். - 127

உடன்பிறந்த சோதரர்கள் உற்றிடும் பாசம்
தடம்பதிக்கும் தானே உலகில் - விடமற்றும்
அன்னவர் காட்டிடும் அன்பினால் தானிந்த
மன்னுலகு வாழும் மதி. - 128

பாசமும் நேசமும் பாருளோர் தம்மையே
மாசற்ற வாழ்வில் மகிழ்விக்கும் - தேசத்தில்
எவ்விடர் வந்தாலும் ஏதென்று தானிணைந்து
அவ்விடர் தீர்ப்பர் அறி. - 129

எல்லோரும் நல்லபடி இப்புவியில் தான்வாழ
நல்லபடி எண்ணிடும் நற்பண்பால் –அல்லலை
இல்லாமற் செய்திடும் இங்குள்ள எல்லோரும்
பல்லாண்டு வாழலாம் பாடு. - 130

தன்னுயிர் போலவே தாரணியில் மற்றுயிர்மேல்
அன்பினைக் காட்ட அகமகிழும் - துன்பமே
இல்லாமல் வாழலாம் என்றுமே எண்ணிடு
பல்லாண்டு வாழலாம் பார். - 131

கொல்லாமல் நீயும் குறைசொல்லி வாழாமல்
அல்லாத செய்கையை ஆற்றாமல் - நல்லுலகில்
பாசத்தைக் காட்டினால் பல்லாண்டு வாழ்ந்திடுவாய்
நேசமுடன் நீயிங்கு நின்று. - 132

தன்குடும்பம் தன்பிள்ளை தானென்று வாழாமல்
மன்னுலகில் எல்லோரும் மாந்தரே – என்றெண்ணி
நேசத்தைக் காட்டி நிலவுலகில் வாழ்ந்திட
மாசற்றுப் போகும் மதி. - 133

பெற்றோரும் பிள்ளைகளும் பேசியொன்றாய் வாழ்ந்திட
உற்றதுயர் ஓடும் உலகினில் - பற்றுடனே
நேசமும் கூடிட நெஞ்சார்ந்த அன்போடு
பாசமாய் வாழலாம் பார். - 134

## ஊழல் மலிந்த உலகு

காசுபணம் சேர்த்துக் கனவானாய் ஆயினால்
வீசுபுகழ் கொண்டு விருப்பமாய் - காசினியில்
வாழல் முடியுமோ வையகத்தோர் யாவரும்
ஊழல் மலிந்த உலகு - 135

அரசபணி கொண்டே அனைவர் இடமும்
தரகுப் பணமின்றித் தாண்டா – விரவியே
ஆழப் புதைந்துள்ள அக்கிரமம் ஓங்குமிது
ஊழல் மலிந்த உலகு - 136

பணத்தினைக் காட்டினால் பட்டென எல்லாம்
இணங்கி நடக்குமே இங்கு – பணமின்றேல்
நீதியும் வாராது நீள்புவியில் நீயுந்தான்
நாதியற்றுப் போவாய் நம்பு - 137

சில்லறைகள் காட்டினால் சீருடன் வாழலாம்
நல்லபயன் கிட்டும் நமக்கிங்கே - இல்லையேல்
எப்பணியும் இங்கே இயல்பாய் நடவாது
தப்பாகிப் போகுமே தான் - 138

ஊழல் மலிந்த உலகினில் நாமின்று
வாழலும் கூடுமோ வண்ணமாய் - பாழடைந்து
தாழ்வினைக் கண்டுமே தாரணியில் வாடுதல்
ஊழ்வினை என்றே உணர் - 139

வள்ளுவனும் வாரானோ வாரிக் கொடுத்திட்ட
வள்ளலாம் பாரியும் வாரானோ – கள்ளமாம்
ஊழலைப் போக்கிட உற்சாகம் கொண்டுமே
வாழவே நீயும் வழுத்து - 140

கலப்படம் செய்வாரிக் காசினி தன்னில்
நலச்செயல் தன்னையவர் நாடார் - உலகினில்
எல்லாம் தமக்கே யுரித்தாதல் வேண்டுமெனத்
தொல்லை தருவார் தொடர்ந்து - 141

உணவினில் மட்டுமா உள்ளாடை தன்னில்
பணத்துக்காய் செய்கின்றார் பாவம் - குணமின்றி
அன்னவர் செய்யும் அநியாயச் செய்கையால்
மன்னுலகில் இல்லையே மாண்பு - 142

எங்கும் எதிலும் இருக்கிறது போலியாய்
தங்கும் பொருட்களும் தானாமே - இங்குள்ள
அத்தனைச் செல்வமும் ஆராய்ந்து பார்த்திட
இத்தரை தாங்குமா ஈங்கு - 143

ஊழல் புரிந்தே உலகில் வளமுடன்
வாழப் பழகிய மாந்தரை – ஆழமாய்
ஆய்ந்தே யறிந்தும் அகற்றிடல் வேண்டும்தான்
சாய்ந்திட முன்னராய்த் தான் - 144

வாக்குப் பெறவும் வழங்குவார் லஞ்சமதை
ஊக்கம் எனவே யுரைத்திடுவார் - தேக்கியே
வாக்கினைப் பெற்று வசதியாய் ஆனவுடன்
தாக்கத் தொடங்குவார் தான் - 145

ஒப்பந்த வேலைகளில் ஊழலும் செய்திட்டுத்
தப்பான வேலைகளைத் தந்துமே - இப்பாரில்
நல்லவர் போலவே நாடகம் ஆடிடும்
வல்லவர் தம்மைநீ வாட்டு - 146

கொள்வனவு செய்திடக் கூறுவிலை கோரியே
கொள்வனவு செய்வதாய்க் கூறுவார் - கொள்வனவில்
மோசடி செய்தவர் முன்னின்று செல்வத்தை
நாசனம் செய்வரே நம்பு - 147

உணவில் தொடங்கி உறையுள் வரைக்கும்
பணத்துக்காய் செய்திடும் பாவம் - வணங்கும்
கடவுளர் கூடக் கணக்கெடுக்க மாட்டார்
இடரும் பெருகும் இனி - 148

ஆண்டவன் பூசையிலும் ஆங்காங்கே மோசடி
ஆண்டாண்டு காலம் அரங்கேறி – மாண்பிலாப்
பூசைகள் செய்கின்றார் புண்ணியம் வேண்டிடாத்
தாசனாய் உள்ளோருந் தான் - 149

## தழைத்தோங்கும் தங்கத் தமிழ்

சங்கம் வளர்த்ததமிழ் சண்முகனார் தந்ததமிழ்
எங்கும் புகழ்பரப்பும் இன்றமிழ் - எங்களின்
மூச்சாய் இருந்திடும் முத்தமிழ் இங்கினி
வீச்சாய் வளரும் விளம்பு - 150

முத்தமிழ் என்றுமே முன்னோர் வளர்த்ததமிழ்
இத்தரை தன்னில் இனிதோங்கி – நித்திலமாய்
என்றும் வளரணும் என்றே இறையடியை
நன்றே வழுத்துவோம் நாம் - 151

காப்பியம் பற்பலவும் காசினியிற் தந்தது
மூப்பிலா எங்களின் முத்தமிழே – யாப்பின்
வரைமுறை தந்துமே வண்டமிழ்ப் பாக்கள்
தரையினிற் தந்ததே தான் - 152

இயலிசை நாடகம் என்றிடு மூன்றாய்
நயமாய் எழுந்தது நாட்டில் - வியப்புடை
அம்மொழி கண்ட அருவளர்ச்சி போற்றியே
செம்மொழி என்பார் சிறந்து - 153

இலக்கணம் உண்டாம் இலக்கியம் தானும்
நலமாய் நிறைந்ததே நன்றாய் - பலமொடு
பல்கிப் பெருகிடும் பாரது தன்னிலே
அல்லல் அறுக்கும் அறி - 154

தங்கத் தமிழும் தரணியில் ஓங்கிடச்
சங்கம் அமைத்தனர் சான்றோர்கள் - எங்கும்
தமிழைப் பரப்பித் தரமுயரச் செய்யத்
தமிழும் தழைத்தது தான் - 155

பாட்டுக்கோர் பாவலன் பாரதியார் தானிங்கு
நாட்டிலே நின்றிட நற்றமிழைப் - பாட்டினில்
செந்தமிழ் தன்னின் சிறப்பினைச் செப்பினான்
நிந்தனை இல்லாமல் நின்று - 156

கம்பனுடன் காளிதா சன்காள மேகமும்
தம்மரிய பாவால் தமிழினை - இம்மண்ணில்
ஏற்றமுறச் செய்தனரே இப்பாரில் எம்தமிழும்
வீற்றிருக்கும் என்றே விளம்பு - 157

நன்னூலும் காரிகையும் நற்றமிழிற் தோன்றிய
தொன்னூல் எனவே துலங்கிடும் - மன்னுலகில்
தொல்காப் பியமெனும் தொன்னூல் தானுண்டு
நல்லுலகில் என்றே நவில் - 158

அறநூல் பலவுண்டாம் ஆற்றுப் படுத்தப்
பிறநூல் தானுண்டு பின்னும் - பிறவியில்
நாம்தமிழர் என்றே நவின்றிடல் மேன்மையென
நாம்மகிழ்வு கொள்ளலாம் நன்று - 159

ஐம்பெரும் காப்பியம் ஐங்குறுங் காப்பியம்
இம்மண்ணில் தானுண்டாம் இன்றமிழில் - நம்முடைய
தொன்மையைக் காட்டித் துலங்கிடும் இந்நூல்கள்
என்றுமே வாழும் இனிது - 160

இயற்கை மருத்துவத்தை இங்கெமக்குத் தந்து
நயத்தினை நல்கிடும் நன்னூல் - முயன்றுமே
முன்னோர் படைத்திட்ட முத்தமிழ் நூல்களால்
மன்றிலே பெற்றிடும் மாண்பு - 161

நுணுகிப் பொருளினை நூலோர் விளக்க
அணுகிப் பெருகுமே ஆற்றல் - அணியாய்
கிடைக்கும் அறநூல்கள் கீழ்மை அகற்றிப்
படைக்கும் பெரும்புகழ் பார் - 162

பாரெலாம் எங்களின் பைந்தமிழ் தானுமே
சீரெலாம் பெற்றுச் சிறப்புற்றுத் - தாரெலாம்
சூடியே என்றும் சுபிட்சத்தைப் பெற்றிடும்
தேடிடும் பேறெனத் தேற்று - 163

அகத்தியர் தன்னொடும் ஆன்றோர் பலரும்
செகத்தில் வளர்த்த தமிழும் - அகன்று
பரவிப் பெருகியிப் பாரது தன்னில்
விரவி யிருக்கும் விளம்பு - 164

கலைகளின் பெட்டகமாய் காசினியில் உள்ள
தலைமொழி எங்களின் தாயாம் - விலையிலாத்
தங்கத் தமிழினித் தானுயர்வு கண்டுமே
எங்கும் மிளிரும் இயம்பு - 165

பயனுடைச் சொற்கள் பசுந்தமிழ் தன்னில்
நயமாய் வளருது நாளும் - சுயமாய்
இனிய தமிழும் இச்சகம் தன்னில்
நனிபுகழ் பெற்றிடும் நம்பு - 166

பாலையும் முல்லையும் பாங்குறு நெய்தலும்
கோலக் குறிஞ்சி மருதமும் - ஞாலத்தில்
ஐந்தாய் வகுத்தனர் ஆன்றோர் நிலத்தினைப்
பைந்தமிழ் தன்னிலெனப் பாடு - 167

அமிழ்தில் இனிதென ஆன்றோர் புகழும்
தமிழின் சுவையைத் தனித்தே – அமிழ்தென
எண்ணிச் சுவைத்திட எண்ணுவோர் வாழ்வினி
வண்ணமாய் மாறுமென வாழ்த்து - 168

சங்கம் வளர்த்துத் தலைநிமிரச் செய்திட்ட
எங்கள் தமிழும் எழுச்சியுற - இங்கு
விழைந்திட மண்ணிலினி வெற்றிகள் பெற்றுத்
தழைத்தோங்கும் தங்கத் தமிழ் - 169

## நல்லாரும் கெட்டாரும்

நல்லார் யாரென நானிங்கு சொல்வேனே
இல்லாள் ஒருத்தியை இன்முகமாய் - பல்லாண்டு
வாழ்க்கைத் துணையாய் வரித்துமே கொண்டிங்கு
வாழ்பவன் என்றே வழங்கு - 170

கெட்டவர் யாரென்று கேட்பீரே யாமாகில்
திட்டமாய் நானுரை செய்வேனே – கட்டழகு
மங்கை ஒருத்தி மனையாளாய் இங்கிருக்க
திங்களொன்று தேடுபவன் தான் - 171

அடுத்தவன் சொத்தினில் ஆசைப் படாமல்
எடுத்துக் கெடுத்தும் இராதே - தொடுத்தும்
இனிதாய்ப் பிறரோடும் இல்வாழ் பவனே
நனிபுகழ் பெற்றிடுவான் நம்பு - 172

அடுத்தவன் சொத்தை அபகரிக்க எண்ணித்
தொடுத்துத் துயரினைத் தந்து – பிடுங்கியே
தன்பொருள் போலவே தானாக்கி வைப்பவன்
இன்னொரு கெட்டவன் தான் - 173

கலப்படம் செய்யாமல் காசினியை ஏய்த்தே
உலவும் உயர்வைப் பெறாமல்- தலமிதனில்
நல்வாழ்வு வாழ்பவன் நாளுமின்பம் பெற்றிங்கு
பல்லாண்டு வாழ்வான் பணிந்து - 174

கலப்படம் செய்துமே காசுபணம் சேர்த்து
நலம்பெற எண்ணியே நாளும் - தலமிதனில்
எண்ணிக் கருமம் இயற்றுவோர் என்னாளும்
மண்ணினிற் கெட்டார் மதி - 175

தேர்தல் வருங்காலைத் தேடியே வந்தெமக்கு
வார்த்தைகள் கூறியே வாகாகத் - தேர்தலில்
வாக்கினைப் பெற்றவர் வாகையும் சூடியபின்
நீக்குவார் எம்மை நினை - 176

வாக்கை யளித்தவர் வாழ்வை யுயர்த்திட
ஆக்க வழிகளை ஆய்ந்துமே – ஊக்கமாய்
நல்லன செய்துமே நம்மவர் வாழ்வினை
வல்லதாய் ஆக்குவானை வாழ்த்து - 177

அன்னையைத் தந்தையை ஆசானைத் தானிங்கு
என்றும் மதியா திருப்பவன் - நின்றுலகில்
வன்மத்தைத் தூண்டி வழிப்பறி செய்பவன்
என்றும் இழிந்தவன் தான் - 178

பெற்றவர் தம்மையும் பேணியே காத்துயர்
நற்றவ ஆசானை நாளுமே - இற்றரையில்
போற்றி இருப்பவனைப் பொல்லாங்கு செய்யானை
ஏற்றிப் புகழணும் இங்கு - 179

போதைப் பொருட்களிங்கு பொல்லாங்கு செய்யுமென
மேதைகள் சொல்லியும் மேவாமல் - காதையே
என்றதை ஏற்காமல் என்றும் குடிப்பவன்
என்றுமே கெட்டவன் தான் - 180

போதையை நாடாமல் பொல்லாங்கு செய்யாமல்
மேதைகள் பேச்சினை மெச்சியே – காதையாய்
எண்ணி இகழாமல் என்றுமேத்தி வாழ்பவன்
நண்ணுவான் பேறென நம்பு - 181

நல்லவரும் கெட்டவரும் நானிலத்தில் தானுண்டாம்
அல்லவை செய்வாரை அண்டியே – நல்லறம்
சொல்லியே நாமினிச் சூழ்புவி தன்னிலே
நல்லவர் ஆக்குதல் நன்று - 182

ஆண்டவன் தன்னை அடிபணிந் தேத்திட
மாண்புடன் வாழலாம் மண்ணிலே – வேண்டாப்
பழக்கங்கள் தன்னைப் பழகாது விட்டால்
இழப்பே வராதே இயம்பு - 183

போதனை செய்தல் புவியிற் சுலபமாம்
ஏதம் தவிர்த்திட எண்ணினால் - சாதகமாய்
என்றுமே எண்ணி இருப்பீரே யாமாகில்
நன்றுமே வாழலாம் நம்பு - 184

## இகழ்வோர் அடைவர் இடர்

மிடியே பெருகி மிகவே வருத்தி
இடிந்தே நொறுங்கி இராமல் - துடித்தே
என்றும் இறையடி ஏத்தியே போற்றிட
இன்பம் பெருகும் இனி - 185

அடிமைப் பழக்கம் அடுத்துப் பெருகி
விடிவை விரட்டி விடினும் - குடியின்
அருமை பெருமை அகன்று விடாமல்
திருவுடன் வாழ்தல் சிறப்பு - 186

பெருமை நிலையைப் பெறவே முயன்று
கருமம் புரியக் கருதி – அருமையாய்
என்றும் முயற்சி எடுத்தே யிருந்திட
நன்றே புகழுமுனை நாடு - 187

குடியின் பெருமை குறைந்தே விடாமல்
மிடியை விலக்கிட வேண்டும் - அடிமை
விலங்கை அறுத்திட்டு வில்லங்கம் தாண்ட
நலமே பெறுவாய் நனி - 188

எத்துயர் வந்தாலும் ஏங்கி இராமல்நீ
இத்தரை தன்னில் இருந்திட – நித்தம்
புகழதும் ஓங்கும் புவியினில் உன்னை
இகழ்வோர் அடைவர் இடர் - 189

கெடுத்தே யழித்திடக் கீழோர் முயல்வர்
தொடுத்தே பணிகள் புரிவர் - தடுத்துமே
அன்னவர் நோக்கம் அடைந்து விடாமல்நீ
என்றும் இரும்பாய் இரு - 190

கூடிடும் கூட்டமுனைக் கூட்டாய் கெடுத்திடும்
நாடிடும் உன்னை நசுக்கவே – வாடி
வதங்கி விடாமல்நீ வஞ்சகர் தம்மை
இதமாய் தடுத்திடுவாய் இன்று - 191

குலத்தின் பெருமை குறைந்து விடாமல்
நலப்பணி யாற்றனும் நன்றே – தலமிதில்
மற்றவர் எப்படி மாண்பிழந்து போனாலும்
பெற்றிடு நீயின்பப் பேறு - 192

நல்லவர் தம்மோடு நாடியே சேர்ந்திடுவாய்
அல்லாரை என்றும் அகற்றிடுவாய் - இல்லாமை
இல்லாமற் போய்விடும் இப்புவி தன்னிலே
நல்வாழ்வு வாழலாம் நம்பு - 193

கற்றவர் தாமுனைக் காமுறும் வண்ணமாய்
பெற்றிடு நீயினிப் பேரறிவு - இற்றரையில்
நல்லறிவு ஒன்றே நனிதுயர்வு தந்திடும்
வெல்வாய் பகையை விளம்பு - 194

முன்னோர் எமக்காய் முகிழ்த்த முதுமொழிகள்
என்னாளும் காக்குமே எம்மையும் - இன்னாளில்
ஆங்கதை எண்ணி அதற்கேற்ப வாழ்ந்திட
ஈங்கு வராதே இடர் - 195

கொல்லாதே நீயும் குடிப்பழக்கம் கொள்ளாதே
சொல்லாதே பாபச்சொல் சோடித்து – நில்லாதே
அல்வழி தன்னில் அழிந்துமே போயிடுவாய்
நல்வழி தன்னையே நாடு - 196

அடுத்துக் கெடுத்தும் அழிக்க முனைந்து
கொடுமை புரிதல் குறையாம் - விடுத்தே
அடுத்தவர் தம்மையும் ஆதரித்து நின்றால்
வடுவின்றி வாழலாம் வா - 197

எல்லோரும் மாந்தரென எண்ணி யிருந்திட
நல்வாழ்வு வாழலாம் நாமுமிங்கு - இல்லையேல்
அல்லாடிப் போவோம் அவனியில் நாமெனவே
எல்லோரும் சொல்லுவர் இங்கு - 198

குணத்தால் உயர்ந்து குவலயம் போற்றின்
இணங்கியே வாழ்தல் இலகு – பிணக்குகள்
வந்தெமை வாட்டினும் வாகாய் அகற்றிட
நிந்தனை வாட்டாது நின்று - 199

## கடன்படக் கூடாது காண்

கடனில்லாக் கஞ்சி கவலையை நீக்கும்
மடமயிலே நீயும் மதிப்பாய் - திடமாய்
உடனிருந்தே எம்மை உலகில் ஒடுக்கும்
கடன்படக் கூடாது காண் - 200

செலவுக்கே போதச் செகத்தில் வரவு
நிலவுமே ஆனால் நிறைவே- தலத்தில்
வரவைச் செலவது விஞ்சுமே ஆனால்
கரங்களில் சேருமே கடன் - 201

செய்தொழில் தன்னிலே சீராக லாபமும்
எய்திடின் என்றும் இனிதாமே – பொய்யாகிக்
கையிலே நட்டமும் காணுமே யாமாகில்
பையிலே நிறையும் கடன் - 202

வட்டிக் கடன்வாங்கி வையத்தில் வாழ்ந்திட
முட்டிக் கடனெமை மூழ்கடிக்கும் - வட்டியும்
குட்டிமேல் குட்டிபோட்டுக் கூடியே எம்மையும்
பட்டென்று வீழ்த்துமே பார் - 203

கடன்பட்டு வாழ்ந்திடல் காசினியில் தீங்காய்
இடரினைத் தந்திடும் என்றும் - முடமாக்கி
மூச்சைப் பறித்தெமை மூளியாய் ஆக்கிடும்
தீச்சுவாலை என்றே தெரி - 204

வாழ்ந்திடப் போதும் வளங்களும் இல்லையெனில்
தாழ்ந்திடல் வேண்டும் தரணியில் - ஆழ்ந்து
கடன்தனை வாங்கியே கட்ட முனைந்தும்
இடர்பட்டுப் போவாய் இனி - 205

கடன்பட்டார் நெஞ்சம்போல் கண்கலங்கி நின்றான்
திடங்கொண்ட ராவணனும் தானே – உடனெமக்கு
நன்றே உணர்த்தினார் நற்கவிஞர் கம்பரும்
என்றே உணர்வாய் இனி - 206

கடன்பட்டுக் காசினியில் காணாமற் போனோர்
விடமுண்டு தம்முயிரை விட்டோர் - இடர்படும்
தன்மையைக் கண்டினித் தாரணியில் உள்ளோரும்
ஒன்றிடல் வேண்டும் உணர்ந்து - 207

அடுத்தவரைப் போல அவனியில் வாழ
எடுக்கும் முயற்சியால் இன்னல் - தொடுத்தே
வருமென்றே எண்ணிநீர் வாழ்ந்தால் இனியும்
பெருமிடர் வாராது பேசு - 208



உ

விரலுக்குத் தக்கதாய் வீக்கம் இருந்தால்
கரத்தில் வராதே கடனும் - தரணியில்
ஆசையைத் தானடக்க ஆனந்தம் பொங்கிடும்
மோசமும் வாராது முன் - 209

## பணம்பத்தும் செய்யும் பாதாளம்வரை பாயும்

பணமிந்தப் பாரினிற் பத்தையும் செய்யும்
கணத்தினில் உன்னைக் கவிழ்க்கும் - இணங்கும்
குணமிருந்த போதிலும் கோடியாய் என்றும்
பணமில்லான் வாழ்வுமே பாழ் - 210

பாழ்பட்டுப் போயிந்தப் பாரிற் பலபேரும்
வாழ்விழந்து போயினர் வாடியே – தாழ்வைக்
கவிழ்க்க விரும்பின் கரத்தில் பணமும்
குவிந்திடல் வேண்டும் குறி - 211

பதவியை வெல்லப் பணமிங்கு வேண்டும்
உதவியும் செய்யும் உனக்கே – நிதமும்
பணத்தினைத் தேடியே பாரினைச் சுற்றின்
கணத்தில் உயர்வாயே காண் - 212

குற்றஞ் செயினும் குவலயந் தன்னிலே
வெற்றி வருமே விரைவாக - இற்றரையில்
பாதாளம் மட்டுமே பாயும் பணத்தினால்
ஆதாயம் பொங்கும் அறி - 213

கெட்டவர் ஆயினும் கீழோரே ஆயினும்
பெட்டி நிறையப் பணமிருந்தால் - கட்டி
அணைத்தே யுறவாடி ஆனந்தம் காண்பர்
பிணைப்பும் பெருகுமே பேசு - 214

தேவைக்கு மேலாகச் செல்வமும் சேர்ந்திட்டால்
சேவையும் செய்யணும் சேர்ந்திங்கு – நாவை
அடக்கியே தானிருந்து அற்றார்க் குதவும்
கடமையைச் செய்யணும் காண். - 215

அறப்பணி செய்திட ஆர்வமும் இன்றேல்
மறப்பணி செய்துமே மாள்வீர் - திறமாய்
நலப்பணி செய்திட நன்குமே வாழ்வும்
நலம்பெறும் என்றே நவில் - 216

சொத்துகள் சேர்ந்திடச் சொல்லியே நின்றிடும்
இத்தரை தன்னில் இழிசெயலை – நித்தமும்
செய்திடத் தூண்டும் செகத்தினில் உன்னையும்
உய்ய விடாதே உணர் - 21

போதைப் பழக்கமும் பொங்கி எழுந்திடும்
பேதையர் வாழ்வைப் பிறழ்விக்கும் - ஏதம்
புரிந்திடத் தூண்டும் புவியினில் உன்னை
எரித்திடச் செய்யும் இனி. - 218

பணத்தினது தேவையால் பாருளோர் தாமும்
குணத்தை இழந்து கொதித்துப் - பணத்தினைத்
தேடிடச் சென்றுமே சேற்றினில் வீழ்கிறார்
பாடிடல் வேண்டுமே பா. - 219

பணத்தினைக் கண்டிடப் பாடையில் தூங்கும்
பிணமும் எழுந்து பிதற்றும் - குணமெல்லாம்
தேவையே இல்லையித் தேசத்தில் என்றுனது
நாவையே ஆட்டி நவில். - 220

பணமது வந்திட்டால் பாரினில் எல்லாம்
கணப்போதில் செய்துமே காட்டிப் - பணத்தினால்
ஆகாத ஒன்றில்லை ஆன்றோரே கேளுமென
வாகாகச் சொல்வர் வலிந்து. - 221

சில்லறைகள் தானிங்குச் சீராய்ச் சிலபேர்க்கு
நல்லபடி தந்தால் நலமாகும் - இல்லையேல்
ஒன்றும் நடவாதே ஒண்டொடிநீ கேட்டிடுவாய்
துன்பம் பெருகும் தொடர்ந்து - 222

ஆண்டவன் நாடும் அறப்பணி செய்திட
வேண்டிய செல்வம் விளையுமே – மாண்பிழந்து
அல்லவை செய்யின் அழிந்துநீ போயிடுவாய்
செல்லாதே உன்செல்வம் தான். - 223

நல்லனவும் செய்திடும் நானிலந் தன்னிலே
அல்லனவும் செய்யும் அறிவோமே – நல்லுலகில்
பாழும் பணமதும் பாடாய்ப் படுத்துமென
நாளும் உணர்த்திடுவேன் நான். - 224

## தென்மராட்சி மண்ணின் சிறப்பு.

வந்தாரை வாழவைக்கும் வண்ணமுறு தென்மராட்சி
சொந்தங்கள் சூழ்ந்து சுடர்விட்டு – சிந்தை
குளிர்ந்திடச் செய்யும் குவலயந் தன்னில்
ஒளிர்ந்திடும் என்றும் உணர் - 225

இல்லிடம் வந்தாரை இன்முகமாய் நின்றுமே
நல்வரவு சொல்லியே நாளுமவர் - நல்லுணவு
தந்துமே எம்மைத் தரணியிற் தாங்குவர்
சிந்தை மகிழ்ந்திடத் தான் - 226

வாசலிலே கோலமிட்டு வாழையிலை தானிட்டு
நேசமுடன் எம்மோடு நின்றுமே – பாசமுடன்
நல்லுணவு தானிட்டு நாளும் உபசரிப்பர்
நல்லவழி சொல்வர் நமக்கு - 227

கனிதரும் சோலை கவினுறும் பூங்கா
நனிமிகை யாகவே நிற்கும் - தனியாளும்
தன்னுடைய வீட்டினில் தானியங்கள் சேமித்தே
என்னாளும் வைத்திருப்பர் இங்கு - 228

கோர்க்காலி மீதில் குரக்கனொடு தானியங்கள்
போர்க்கால வேளையிலும் பொங்கிடும் - ஏர்பிடித்து
என்றும் வயலுழுது ஏற்றமும் கண்டிடுவர்
என்றும் வராதே இடர். - 229

கூடி யுணவுண்டு கொண்டாடி என்றுமெமை
நாடி யுபசரிப்பர் நன்றிங்கு – தேடியே
தென்மராட்சி வந்தெம் சிறப்பினைக் காண்பீரே
என்றும் வராதே இடர். - 230

அன்பாய் அரவணைத்து ஆதரித்து நின்றிடுவர்
என்றுமுயர் பண்பாலே ஏற்றத்தை – நன்றெமக்குத்
தந்திடுவர் என்றுமே தாரணியோர் போற்றுவர்
நிந்தனை வாட்டாதே நின்று. - 231

நன்குயர்ந்த நற்றமிழில் நாளும் உரையாடி
இன்பமாய் என்றும் இருப்பரே – மன்னுலகில்
தென்மராட்சி மண்ணும் சிறப்புடன் ஓங்கவே
என்னாளும் வாழ்த்துவோம் ஈங்கு. - 232

சீரிலங்கை தன்னின் சிரமெனவே ஓங்கிடும்
நேரிய யாழ்நகரின் தென்பாலில் - பாரிய
நெற்காணி சூழ்ந்து நிறைவுடன் ஓங்கியே
பொற்புறும் எங்கள் புவி. - 233

சுற்றிவர நீரேரி சூழ்ந்துள்ள மண்ணிங்கு
பெற்றுள்ள நல்வளத்தால் பேரோங்கும் - இற்றரையில்
தற்றுணிபு கொண்டே தழைத்திடும் மண்ணிதனைப்
பொற்புடன் போற்றும் புவி. - 234

நாற்றிசையும் ஆலயங்கள் நல்லபடி வாழ்விக்கும்
ஆற்றுவர் எல்லோரும் ஆன்மீகம் - போற்றியே
தேற்றுவர் மற்றோரைத் தெவ்வரும் வந்திடார்
கூற்றுவனும் வாரான் குறி. - 235

செந்தமிழர் தான்நிறைந்து செம்மையுறும் தென்மராட்சி
நிந்தனையும் காணாது நிற்குமே – சந்ததம்
வந்தனை செய்துமே வாழ்ந்திடுவர் மக்களிங்கு
சொந்தமென மற்றாரைச் சூழ்ந்து. - 236

நற்றமிழ்ப் பண்டிதர் நல்லறிஞர் தாமெல்லாம்
பற்றுடனே வாழ்கின்ற பான்மையினால் - இற்றரையில்
தென்மராட்சி தானும் சிறப்புறும் என்னாளும்
மன்னுலகில் என்றே மதி. - 237

நற்றமிழ்ப் பண்பாட்டை நாளுமிங்கு பேணியே
இற்றரை தன்னில் இனிதாகப் - பற்றுடனே
அற்றவர் தங்கட்கும் ஆதரவு நல்கியே
பொற்புடன் வாழும் புவி. - 238

ஆலயங்கள் பற்பலவாய் ஆங்காங்கே தோன்றிடும்
சாலவும் நற்பணி யாற்றியே – ஞாலமதில்
தஞ்சமென வந்தாரைத் தானென்றும் தாங்கியே
அஞ்சலெனக் காப்பர் அறி. - 239

செந்நெல் விளையும் செழித்த வயல்நிலங்கள்
இந்நிலந் தன்னில் இனிதிருக்கும் - சந்ததம்
அற்றார் தமக்கும் அதிகம் உதவியே
பெற்றிடுவர் வெற்றியின் பேறு - 240

கற்றாரும் மற்றாரும் காதலுடன் சேர்ந்திங்கு
பற்றுடன் வாழ்வரே பாங்காக - இற்றரையில்
வந்தாரை வாழ்விக்கும் வாண்மையுறு தென்மராட்சி
நிந்தனை நீக்குமே நின்று. - 241

முக்கனிச் சோலைகள் முத்தான செய்நிலங்கள்
தக்கபடி இம்மண்ணைத் தானுயர்த்தும் - பக்குவமாய்
இங்குள்ளோர் வாழ்வர் இனிதுவளம் சேர்த்திடுவர்
சங்கடங்கள் தீர்த்துமே தான். - 242

கோயில்கள் கூடுதலாய்க் கொண்டதெம் தென்மராட்சி
வாயில்கள் தோறும் வணங்கிடலாம் - தாயினும்
கூடிய அன்பால் குவலயத் துள்ளோரை
நாடியே காத்திடுவர் நம்பு. - 243

நாம்பிறந்த மண்ணின் நனிசிறந்த தன்மையினை
ஓம்பிடச் செய்வோம் உலகினில் - நாமினிமேல்
போற்றியே பாடுவோம் புண்ணிய பூமியென
ஏற்றியே வைப்போம் இனி. - 244

# பாரினில் உள்ள பாகுபாடு

பாகுபாடு பற்றிநான் பாங்குடன் சொல்லிடுவேன்
ஆகுபயன் என்ன அறினேன் - வேகுகின்ற
எம்முடல் இங்கே இருக்கும் வரைக்கும்
இம்மண்ணில் ஓங்கும் இது - 245

பாரினில் பற்பலவாய் பாகுபாடும் உண்டிவை
பேரிடர் தந்திடும் பேராறே – பாரிய
பாகுபாட்டை நீக்கிடப் பாரினில் நம்மினம்
போகுமே உச்சிக்குத் தான் - 246

செய்யும் தொழிலினைச் சொல்லியோர் பாகுபாடு
மெய்யாய் இருக்குது மேதினியில் - உய்யும்
வழிகளைப் போக்கி வருத்திட வைக்கும்
தொழில்சார்ந்த பாகுபாடு தான். - 247

ஏழை பணக்காரன் என்றொரு பாகுபாடு
ஆளை அடிமையாய் ஆக்கும் - கோழையாய்
இப்புவி தன்னிலுள்ள இவ்வேறு பாட்டினால்
தப்பாகிப் போனதே வாழ்வு. - 248

ஆண்பெண் அலியென ஆன்றோர் வகுத்தனர்
பேண்தகும் பாலியல் வேறுபாடு – ஆண்டான்
அடிமையென மண்ணிலே ஆகுமோர் தன்மை
மிடியைத் தருமே மிகுந்து - 249

நிறத்தினை வைத்தோர் நெடும்பிரிவு காட்டி
திறமையைக் கொண்டொன்றும் சேர்த்தார் - முறையற்ற
பாகுபாடு தன்னாலே பாழ்பட்டுப் போயிங்கு
வேகுதே இம்மண்ணும் வீழ்ந்து. - 250

மதங்களை வைத்திங்கு மாந்தர் தமையும்
இதமாய் பிரித்தனர் இங்கு – நிதமும்
பிரிவினைப் போரைப் பெரிதாய் நடாத்தி
உரிமை பறிப்பர் உணர். - 251

கற்றார் உயர்வென்றும் கல்லாதார் தாழ்வென்றும்
மற்றொரு பாகுபாடு மண்ணுலகில் - சற்றும்
நயந்திட வொண்ணாத நாச நிலையால்
இயங்க மறுக்கும் உலகு. - 252

சாதிமத பேதங்கள் சாய்ந்தழிய வேண்டும்
போதிக்க வேண்டும் புவியினில் - சாதிக்க
எண்ணும் இளையோர்க்கும் ஏற்றவழி காட்டிடத்
திண்ணமாய்ச் சேர்வோம் சிறந்து. - 253

ஒற்றுமை கொண்டிட ஓங்கலாம் நாமெனப்
பற்றுடன் காட்டணும் பாரினில் - கற்றுள்ள
நல்லோர் சமுதாயம் நாட்டினில் உண்டென
எல்லோரும் போற்றணும் இங்கு. - 254

வேற்றுமை காட்டாமல் வேண்டிப் பணிந்திடுவோம்
ஊற்றெடுக்கும் அன்பால் உயர்ந்திடுவோம் - நாற்றிசையும்
போற்றிப் புகழ்ந்திடப் புண்ணியம் செய்திடுவோம்
ஏற்றிடும் எம்மை யுலகு. - 255

அரசியல் செய்வோரும் ஆதாயம் தேடிப்
பரவிட வைத்தனர் பாரில் - உரமுடன்
பாகுபாட்டை ஏய்த்துமே பாழாக்கி வைத்திட
ஆகும் உயர்வும் அறி. - 256

மண்ணிற் பிறந்தவர் மாந்தரென எண்ணியே
திண்ணமாய் ஈங்குச் செயற்பட்டு – வண்ணமாய்
இவ்வுலகில் வாழ்ந்திடும் ஏதுநிலை கண்டிட
தெவ்வர் அழிவரே தேய்ந்து. - 257

எல்லோரும் இம்மண்ணில் இன்பமாய் வாழ்ந்திட
நல்வழிகள் தேடணும் நாமே - இல்லையேல்
இங்குள்ளோர் வாழ்வினில் இன்னல்கள் சூழ்ந்துமே
பங்கப் படுவரே பார். - 258

பாகுபாடு காட்டாமல் பற்றிழந்து போகாமல்
போகும் வழியெங்கும் புண்ணியம் - வாகுடன்
செய்யணும் இந்தச் செகத்தினில் நாமதனால்
உய்வோம் உலகில் உணர் - 259

ஆன்றோர்கள் கூறும் அறிவுரை கேட்டுமே
சான்றோராய் ஆகணும் சார்ந்துமே - ஈன்றவர்
தம்பெருமை காத்துத் தாரணியில் நாமிருந்து
எம்பெருமை யேத்தணும் இன்று. - 260

## மறையும் பண்பாடும் மாந்தர் வாழ்வும்.

நல்லநாள் பார்க்கும் நடைமுறை போயாச்சு
நல்லுலகில் தானென நானுரைப்பேன் - எல்லோரும்
காலினில் சக்கரத்தைக் கட்டியவர் போலின்றே
ஆலாய்ப் பறக்கிறார் ஈங்கு. - 261

நாள்பார்த்து நெல்விதைப்பார் நாட்டினில் இல்லையே
தாள்பணிந்து போற்றிடும் தன்மையில்லை – கோள்களின்
தாக்கமோ என்னவோ தாரணியில் வந்ததென
ஏக்கமுடன் பார்த்துமனம் ஏங்கு. - 262

கூடிப் பணிசெய்து கும்மாளம் போட்டவர்கள்
பாடிப் பரவிட்ட பாங்கியர்கள் - தேடினாலும்
காண முடியாதிக் காசினியில் தானுமே
வேணவாக் கொண்டேன் விரைந்து - 263

பாட்டுகள் பாடிப் பணிசெய்யும் பண்பில்லை
கூட்டாய்ப் பணியாற்றக் கூடலில்லை – நாட்டமாய்
தங்கள் நலத்தினைத் தானென்றும் எண்ணியே
பங்கப் படுகிறார் பார். - 264

தக்க கறிகளுடன் தட்டுவத்தில் தானுண்டு
மிக்க மகிழ்வோர் மிகையில்லை – பக்குவமாய்
தட்டுகளில் தானேந்தித் தம்முணவை உண்கின்றார்
எட்டநின்றே எம்மவர் தான். - 265

வளரும் தொழினுட்பம் வாய்ப்பைப் பெருக்கத்
தளர்கிறது எங்களின் தன்மை – குழம்பி
இயந்திரம் போல இருக்கிறார் இங்கே
நயமில்லா வாழ்வில் நனைந்து. - 266

அம்மியும் இங்கில்லை ஆட்டுரல் தானில்லை
நம்மரிய பாத்திரங்கள் நாட்டிலில்லை – எம்மரிய
முன்னோர்கள் சொல்லும் முறையான பண்பின்று
பின்னோக்கிப் போனதே பேசு. - 267

உடலுழைப்பு இங்கில்லை ஒற்றுமையும் இல்லை
உடலெங்கும் நோயோ டுழன்று – திடமற்றும்
இவ்வுலகில் வாழ்கிறார் இன்பத்தைத் தள்ளுகிறார்
எவ்வுயிர்க்கும் தீங்கை இழைத்து - 268

பனங்கிழங்கு தானெடுத்துப் பக்குவம் செய்து
மனமகிழத் தானுண்ணும் மாந்தர் - பனம்பழச்
சாற்றினைத் தானெடுத்துச் சார்ந்தநற் பானம்செய்
ஆற்றலுள்ளோர் இல்லை அறி. - 269

அன்பாய் அழைத்தே அமரவைத்து நல்லுணவை
இன்பமாய் ஊட்டுவோர் இங்கில்லை – தன்னாலே
தட்டெடுத்துக் கையேந்தித் தானெடுத்து உண்கின்றோம்
இட்டமுடன் நம்முணவை இன்று. - 270

வாசலிலே வந்துநின்று வாருங்கள் என்றுசொல்லி
நேசமுடன் எம்மை நெருங்கிடார் - வாசலிலே
மின்சாரப் பொம்மை மெதுவாய்க் கரங்கூப்பி
நன்றே வரவேற்கும் தான். - 271

மங்கலம் பொங்கும் மணநாளும் தானிங்கு
தங்களின் இல்லத்தில் தானின்றி – எங்கும்
நிறைந்துள்ள மண்டபத்தில் நேர்த்தியாய் செய்து
கறைபட்டுப் போகிறார் காண். - 272

இல்லத்தில் தாலிகட்டி இல்லாளும் தானிருக்க
நல்லறம் செய்திடல் நன்றாமே – நல்லுலகில்
பல்லோரும் வந்தேகும் பண்பற்ற மண்டபத்தில்
இல்லறம் ஏற்றல் இழிவு - 273

பொதிசெய்து விற்கின்ற பொல்லா உணவை
அதிவிரும்பி உண்டுமே ஆங்கு – கதிகலங்கி
நோயில் விழுந்துமே நொந்துமனம் வாடுகிறார்
பாயில் படுத்திருந்து பார். - 274

அருகும் பழக்கங்கள் அற்றுமே போனால்
பெருகிடும் நோய்களைப் பெற்று – பெருஞ்செலவு
செய்திடல் வேண்டும் செகத்தோர் இதையுணரச்
செய்யவே வேண்டும் தெரி. - 275

## இயற்கை அழகே அழகு.

வண்டினங்கள் சோலையிலே வாகாய் சிறகடித்து
எண்டிசையும் சென்றின்பத் தேனருந்த – மண்ணில்
நயந்துமே பார்த்திருந்து நாங்கள் மகிழும்
இயற்கை அழகே அழகு. - 276

பூக்கள் மலர்ந்து பொழிகின்ற தேனமுதை
ஈக்கள் புகுந்தே இனிதுண்ணும் - ஏக்கமாய்
நாமதைப் பார்த்து நனிமகிழ்வு காண்போமே
தாமதஞ் செய்யாமற் தான். - 277

சேற்றிலே கால்வைத்துச் செந்நெல்லைத் தான்விதைத்துச்
சோற்றினை நாமுண்ணச் சோர்ந்துழைத்து – நாற்றிசையும்
தன்புகழ் தந்திடும் தாளாளர் தம்முடைய
இன்முகம் தானே எழில். - 278

தென்றல் மிதந்துவரும் தீங்கனிச் சோலையிலே
அன்பாய் அமர்ந்தே யளவளாவ- இன்பம்
இயல்பாகப் பொங்கிடும் இன்னலும் நீங்கும்
இயற்கை அதனின் இயல்பு. - 279

பட்டணத்து வாழ்க்கை பகராதே இன்பத்தைத்
தொட்டதற்கும் காசே தொலைந்திடும் - நட்டம்
கிராமத்து வாழ்க்கையில் கிஞ்சித்தும் வாரா
தராதிடர் தானே தனி. - 280

காலையிலே காகம் கரைதலும் பேரழகு
மாலையிலே புட்கள் மகிழ்ந்திருந்து – சோலையிலே
கானங்கள் பாடுவதும் காசினியிற் பேரழகு
ஞானத்தைத் தந்திடும் நம்பு - 281

வட்டநிலா வந்துநிற்கும் வண்ணவெழில் முற்றத்தில்
தட்டினில் சோற்றோடு தாரமவள் - இட்டமுடன்
வந்திருந்து ஊட்டிடும் வாகான காட்சியது
சிந்தை இனிக்கும் சிறந்து. - 282

ஆற்றோர ஆலமரம் ஆங்கிருக்கும் புள்ளினங்கள்
ஊற்றாகும் உள்ளன்பை ஊக்குவிக்கும் - வீற்றிருக்கும்
பிள்ளையார் அப்பனின் பேரழகும் தானிங்கு
கொள்ளை அழகோ அழகு. - 283

செயற்கைதரு சாதனங்கள் தேக அழகை
உயர்த்திட மாட்டா துணர்வீர் - நயந்தே
இயற்கைப் பொருட்களால் ஈங்குவரும் உங்கள்
இயற்கை அழகே அழகு. - 284

உண்ணும் உணவில் உடுக்கும் உடையினில்
மண்ணிலே எல்லாம் மருந்தாமே – எண்ணி
வியந்து ருசித்திட விண்ணகம் ஏக
செயற்கை உணவெனத் தேர் - 285

## சோதனையும் வேதனையும்

சோதனைமேற் சோதனை சொல்லியழ யாருமில்லை
வேதனையில் வாடிநிதம் வெம்பியே- நாதனவன்
தன்னடியை வேண்டித் தலைவணங்கி வாழ்கிறோம்
என்னென்று சொல்வோம் இனி. - 286

தொற்றிடா நோய்களௌமைத் துன்புறுத்தும் என்னாளும்
வற்றாத நீர்நிலையாய் வந்துநின்று - இற்றரையில்
பெற்ற கடன்களும் பேரிடர் தந்திடுதே
சுற்றியே நிற்குது சூழ்ந்து. - 287

வரவும் வரவில்லை வந்தவிடர் போக
இரங்குவார் யாருமில்லை ஈங்கே- அரனின்
அடியிணைகள் போற்றியும் ஆறுமோ எங்கள்
மிடியதும் தானே மொழி. - 288

மிடியகன்று வாழ்வினில் மேனிலை காணா
இடிவிழுந்த மாமரமாய் ஈங்கே – துடித்தேன்
குடியிருக்க வீடும் குவலயத்தில் இல்லை
குடிமகனாய் என்னைக் குறி - 289

சுற்றியே வந்துநின்ற சொந்தங்கள் எல்லாரும்
வற்றும் பணங்கண்டு வாராமல் - இற்றரையில்
எட்டியே நிற்கிறார் என்னென்று நான்சொல்ல
எட்டுமோ இன்பமும் ஈங்கு. - 290

மாடாய் உழைத்தாலும் மண்ணில் வருஞ்செல்வம்
ஈடாகா தெங்களின் இயல்புக்கும் –ஓடாகத்
தேய்ந்தாலும் இவ்விடர் தேயாதே என்றெண்ணி
ஓய்ந்துமே போகிறேன் நான். - 291

கற்றகல்வி தானிந்தக் காசினியில் ஒன்றையும்
பெற்றிடச் செய்யவில்லைப் பேணியே – செற்றவர்
வாட்டி வதைக்கிறார் வந்துநின் றெம்மையும்
ஆட்டிப் படைக்கிறார் ஆங்கு. - 292

வாழ்க்கைச் செலவது வானளாவச் செல்கிறது
தாழ்ந்துமே செல்லும் தனவரவால் - வீழ்ந்துநாம்
வெம்பியழக் கண்டும் விரும்பி யுதவிடுவார்
அம்புவியில் இல்லை அறி. - 293

அரனும் உதவவில்லை ஆட்சியில் உள்ள
அரசினர் தானும் அறியார் - கரங்களில்
வந்துமே நிற்கும் வரவெமக்குப் போதாதே
இந்தநிலை யாரறிவார் ஈங்கு. - 294'

அரச பணியென்றே ஆங்கெமைத் தள்ளித்
தரவும் மறுக்கிறார் தானே – மிரட்டும்
செலவினைத் தள்ளச் செகத்தில் இனியும்
நலமின்றி வாடுவதா நாம் - 295

அதிகார வர்க்கம் அடக்கிடப் பார்த்துச்
சதிசெய்து சாய்க்கும் சகத்தில் - விதியென்றும்
எண்ணியே நாமிருந்து இன்னாளில் வாடுவதா
கண்ணிலே நீருடன் காண். - 296

இரட்டைத் தொழிலினை இப்புவியில் செய்தால்
விரட்டலாம் ஏழ்மையென வெண்ணி - இரவுபகல்
எங்கெங்கு தேடினும் எத்தொழிலும் சிக்கவில்லை
எங்கள் இடர்தீரத் தான் - 297

நாளும் பொழுதுமாய் நாட்டில் விலையேறும்
வீழும் வரவிங்கு மேலெழாதே – தாழும்
நிலையைத் தவிர்த்திட நீள்புவியில் நாமும்
தலைகீழாய் நிற்கிறோம் தான். - 298

செலவுகள் தானிச் செகத்தில் உயர
நலமிழந்து வாடுகிறோம் நாமே – பலமான
வாழ்வெமக்கு வேண்டில் வரவிங் குயரணும்
தாழ்வும் தொலையுமே தான். - 299

வந்துள்ள சோதனைகள் வாழ்வினிற் போயகன்று
சிந்தை இனிக்கும் சிறப்பினை - இந்நிலத்தில்
என்னாளிற் காண்போம் இறைவா உனதருளை
என்னாளிற் காட்டுவாய் ஈங்கு. - 300

## பொல்லாத போதையைப் போக்கு

போதைக் கடிமையாய் பூமிதனில் வாழ்கின்ற
பேதையரே கேண்மினிப் பேர்புவியில் - போதையால்
என்னென்ன ஆகும் எடுத்துரைப்பேன் நானுமிதை
இன்னாளிற் கேட்பீர் இனிது. - 301

வீணான பேச்சதும் வீணர்கள் கூட்டமும்
வீணாக்கும் உன்றனின் வாழ்வினைக் – காணாத
துன்பங்கள் எல்லாம் தொடர்ந்திடும் உன்னையே
மின்னாமற் சேரும் மிடி - 302

காண்போர்கள் உன்னைக் கரித்துமே கொட்டுவர்
மாண்பிழந்து வாடுவாய் மண்ணுலகில் - பேண்தகும்
நல்வாழ்வு தானிந்த நானிலத்தில் வேண்டுமெனில்
பொல்லாத போதையைப் போக்கு. - 303

நம்பிவந்த இல்லாளை நட்டாற்றில் விட்டிடுவாய்
உம்பரும் வந்தே உறுத்திடுவார் - அம்புவியில்
உன்புதல்வர் கூடவினி ஊதாரி ஆயிடுவார்
இன்னிலை வேண்டுமா ஈங்கு. - 304

நோய்நிலைகள் முற்றிநீ நொந்தே யழுதிடுவாய்
பாய்தனில் நீயும் படுத்துமே – நோய்நிலையால்
வாடியே போவாய் வறுமையும் கூடியிங்கு
தேடியுனை வாட்டும் தெரி. - 305

பெற்றுள்ள செல்வம் பிரிந்தே யழிந்திடும்
உற்ற உறவும் உனைப்பிரியும் - இற்றரையில்
நற்றுணை யாளின் நலமதும் போயகலும்
செற்றவர் வாட்டுவர் சேர்ந்து - 306

விற்பவன் நாளும் மிகவுயரச் சென்றிடுவான்
பெற்றவன் நீயுமிப் பேர்புவியில் - செற்றவர்கள்
சேர்ந்தே யழிக்கச் செயலிழந்து போயிடுவாய்
ஊர்ந்தே யழிவாய் உறுதி. - 307

போதைக்கு வேண்டும் பொன்னான செல்வமும்
வாதையைத் தந்திடுமே வாழ்வினில் - காதையென்று
எண்ணியே நீயிருந்தால் எப்பயனும் நேராது
மண்ணில் உனக்கில்லை மாண்பு. - 308

உட்செல்லும் போதையால் உன்னை யிழந்துமே
நட்டம் அடைந்திடுவாய் நாட்டினில் - இட்டமுடன்
பெற்றிட்ட வாழ்வதும் பேரழிவைக் காணுமே
உற்றிடுவாய் துன்பம் உணர். - 309

கட்டுடல் தானழிந்து காசினியில் வாடுவாய்
விட்டுடல் தன்னை விரைந்துயிரும் - பட்டென்று
பாரினை விட்டகலும் பாழ்நிலை வந்திடும்
பேரிடர் வந்திடும் பேசு. - 310

குற்றங்கள் செய்வாய் குவலயந் தன்னிலே
பெற்றுள்ள போதைப் பெருங்கேட்டால் - மற்றோரின்
மாண்பினை நீக்க மனங்கொண்டு வாழ்வாய்நீ
ஆண்டான் அழிப்பான் அறி. - 311

கொற்றவன் தானுனைக் கூண்டினில் ஏற்றியே
உற்றுள்ள தண்டம் உனக்களிப்பான் - இற்றரையில்
என்னாளும் நீயிருந்து ஏதங்கள் செய்திடாமல்
நன்மைகள் செய்வாய் நனி. - 312

கொலையுடன் கொள்ளையும் கூடவே செய்யும்
நிலையுனக்கு வந்து நெருக்கும் - அலைந்தே
பணத்தினைத் தேடிநீ பாழாகிப் போவாய்
குணத்தை இழந்தெனக் கூறு. - 313

கொண்டவள் வாழ்வும் குதூகலம் கண்டிட
மண்டலம் உன்னை மகிழ்ந்தேத்த – கொண்டுள்ள
போதைப் பழக்கத்தைப் போக்கிடுவாய் நீயதனால்
ஏதமின்றி வாழ்வாய் இனி. - 314

குடியினை விட்டுன் குலத்தினைக் காப்பாய்
மிடியும் அழியும் மெதுவாய் - அடியொற்றி
என்னாளும் செய்திட ஏதங்கள் தானழிந்து
நன்மை பெறுவாய் நனி. - 315

பொல்லாத போதையைப் போக்குவோம் நாமிணைந்து
எல்லோரும் ஒன்றாக இப்புவியில் - பல்லாண்டாய்
பாழ்படுத்தும் போதையினைப் பாரில் அழித்திடவே
சூழுரைப்போம் என்றே சொல். - 316

போதையை வேண்டாத பொன்னான வாழ்வென்று
கோதையர் கூறக் குவலயத்தில் - ஏதங்கள்
இல்லாமற் போயிடும் இன்னல்கள் அற்றிடும்
வெல்லலாம் வாழ்வை விளம்பு. - 317

சுந்தரியர் வாழ்வில் சுகத்தினைப் பெற்றிட
இந்தமண் தானினி இன்பமுறும் - சந்ததம்
போதையில் ஆழ்வோர்கள் போயகன்று விட்டிடவே
தீதை விரட்டலாம் சேர்ந்து. - 318

சந்ததியும் இல்லாமற் சந்தோசம் காணாமல்
இந்தப் பிறப்பில் இழிவடைவாய் - இந்நிலத்தில்
இன்பமாய் வாழ்ந்திட எண்ணமும் உண்டெனில்
வென்றிடு போதையை விட்டு. - 319

மாற்றத்தைக் கண்டிந்த மண்ணுலகம் வாழணும்
ஏற்றத்தைப் பெற்றிடணும் இங்கெனப் – போற்றியே
ஆண்டவன் தாளினை ஆழமாய்ப் பற்றணும்
மாண்பும் பெருகும் மகிழ்ந்து. - 320

## காதல் கீதங்கள் – காதலன் கூற்று

கன்னக் குழியழகிற் காணாமற் போனேனே
மின்னும் இடையழகில் மேதினியை - என்னாளும்
துள்ளிட வைப்பவளே தூயவளே நீயென்னை
அள்ளி அணைத்துமே ஆறு - 321

கருவிழிப் பார்வையிற் காதலைக் கண்டேன்
திருமகள் உன்னோடு சேரும் - விருப்புடன்
உள்ளேனே நானும் உனதன்பால் என்னையும்
அள்ளி அணைத்துமே ஆறு. - 322

எந்தம் நினைவில் எனையாளும் என்றனின்
சிந்தை மகிழ்ந்திடச் செய்யவே – வந்திடுவாய்
அன்னப் பெடையே அனுதினமும் உன்னினைவால்
என்னை இழக்கிறேன் நான். - 323

கன்னக் குழிகண்டு காணாமற் போனேனே
மின்னும் இடையழகில் மேதினியுன் - பின்னால்
இழுபட்டுப் பேருவகை காண்கிறதே என்னை
வழுவின்றிக் காத்திட வா - 324

கன்னியுன் கட்டழகிற் காளைநான் வீழ்ந்தேனே
என்னை மறந்தே இருக்கிறேன் - என்னைத்
துணையாக ஏற்பாயா சுந்தரியே நீயும்
இணையாய் வருவாய் எனக்கு. - 325

தஞ்சமென உன்னடியைச் சார்ந்துமே நானிருக்க
அஞ்சலென என்னை அணைப்பாயா – பஞ்சணையில்
உன்னை அணைத்தே உயரின்பம் நான்காண
அன்பைப் பொழிந்துநீ ஆற்று - 326

ஊர்போற்றும் உத்தமியே உன்னழகில் வீழ்ந்தேனே
பார்தனில் என்றனது பாதியாகி - ஆர்வமாய்
என்னோடு வந்திடுவாய் ஏந்திழையே நீயுந்தான்
மன்னுலகில் மாண்புறுவோம் நாம் - 327

சின்ன இடையசையச் சிங்காரம் காட்டுகிறாய்
அன்ன நடையழகால் ஆணினத்தைப் - பின்னாடி
சுற்றவே வைக்கிறாய் சுந்தரியே நீயென்னைப்
பற்றியே வாழ்ந்திடப் பார். - 328

மின்னுகிற உன்விழிகள் மீன்தானோ என்றெண்ணி
என்மனம் ஏங்குதடி ஏந்திழையே – உன்னழகால்
அத்தானை வாட்டுகிறாய் ஆரணங்கே நீயென்னை
இத்தரையில் ஏற்பாய் இணை. - 329

கன்னிமனச் சோலையிலே காளையிவன் சேர்ந்திட
என்னபணி செய்யணும் ஏந்திழையே – உன்னையிந்த
நல்லுலகில் நானுமே நற்கவிப் பாக்களால்
சொல்லவா சுந்தரியே சொல். - 330

இனிவரும் காலங்கள் இன்பம் தரவே
இனியவள் நீயும் இணைந்து – நனிசுகம்
தந்திடுவாய் என்றனுக்குத் தையலே என்றுனை
வந்தனை செய்யவே வா. - 331

தாவணியைச் சுற்றியே தங்கமே நீநடக்கப்
பாவடிக்கத் தோன்றுதடி பாவையே – ஆவலுடன்
அத்தானைச் சேர்த்தணைத்து ஆறுதலும் தாராயோ
இத்தரை இன்புறத் தான். - 332

ஓரக்கண் பார்வையால் ஒய்யாரம் காட்டுறியே
தாரமென வந்திடடி தங்கமே – தாரணியில்
பாரமென உன்னைநான் பார்க்காமல் விடமாட்டேன்
தாரமாய் ஆக்குவேன் தான். - 333

தடுமாறிச் செல்லும் தருணனென் வாழ்வைத்
தடுத்தாண்டு கொண்டிடத் தானே – எடுத்தாண்டு
கொஞ்சி மகிழ்ந்து குலாவி இருந்திட
அஞ்சுகமே நீயென்னை ஆள். - 334

நெத்தியில குங்குமத்தை நித்திலமாய் நானிடவா
அத்தமக ரத்தினமே ஆரணங்கே - இத்தரையில்
முத்தமிட்டு நான்மகிழ மோகமும் கொண்டேனே
சித்தம் மகிழ்ந்திடச் செய். - 335

கன்னியுன் கண்களிற் காதலைத் தேக்கிவைத்து
என்னை வதைக்கிறியே ஏந்திழையே – உன்னையென்
தாரமாய் நானாக்கித் தாரணியில் வாழ்ந்திட
ஊரவர் வாழ்த்திட வா. - 336

வஞ்சிமகள் உன்மேலே வற்றாத காதலுற்றேன்
தஞ்சமென நீயென்னைச் சார்ந்துவிடு – அஞ்சுகமே
வஞ்சனை செய்யாமல் வாழ்வெனக்குத் தந்துவிடு
தஞ்சமென என்னையுஞ் சார்ந்து - 337

முத்துநிகர் பல்லழகி முந்தானை வீச்சழகி
அத்தான் எனவே அழைக்காயோ - நித்தமும்
முத்தாடி நாம்மகிழ்ந்து முன்னோர்கள் வாழ்த்திட
இத்தரையில் வாழ்வோம் இனி. - 338

மல்லிப்பூச் சூடி மயக்குகிறாய் என்னையே
செல்லமே உன்றனது செவ்வாயால் - சொல்லுவாய்
உன்றனது சம்மதத்தை ஊர்போற்ற நாமிருவர்
என்னாளும் வாழ்வோம் இனிது. - 339

முந்தானைச் சேலையால் முக்காடு போட்டவளே
சொந்தமென வந்திடடி சுந்தரியே – சிந்திய
முத்துச் சிரிப்பினில் மூழ்கிட வைத்தவளே
இத்தரை தன்னில் இருந்து - 340

கார்குழலிற் பூச்சூடிக் கன்னிநீ செல்கையிலே
பார்வையால் உன்னழகைப் பாருளோர் - சேர்ந்திருந்து
எண்ணி மகிழ்கிறார் ஏந்திழையே நீயுந்தான்
கண்ணாலே என்னையும் காண். - 341

உன்னழகைக் கண்டுநான் உன்மத்தன் ஆயினேன்
என்னைத் துணையாக ஏற்பாயா – மின்னும்
புதுவாழ்வை நாங்கள் புவியில் தொடங்கப்
புதுமகிழ்வு தோன்றும் புரி. - 342

பெற்றுள்ள பேரழகைப் பேணிநீ காத்திடப்
பற்றுடன் என்னையுன் பாதியாக்கி - இற்றரையில்
இல்லறமாம் நல்லறத்தை ஈங்கினிச் செய்திடு
நல்லோர்கள் வாழ்த்துவர் நன்று. - 343

என்னோடு நீயிணைந்தால் இன்பமும் காண்பேனே
என்னாளும் உன்னோ டிருப்பேனே – அன்னமே
உன்னுயிராய் நானிருப்பேன் உன்னையும் காத்திடுவேன்
என்னோடு வாழ்ந்திட வா. - 344

காதலர் நாமிருவர் காசினியில் அன்புடன்
ஏதங்கள் இன்றி இணைவோமே – ஆதரவாய்
இல்லறமாம் நல்லறத்தை இப்புவியில் கண்டுநாம்
பல்லாண்டு வாழ்வோம் பழுத்து. - 345

## காதல் கீதங்கள் – காதலி கூற்று

வெட்டருவா மீசையால வீழ்த்திவிட்டாய் என்னையே
கட்டி அணைத்துக் களிப்பினை - இட்டமுடன்
தாராயோ நீயென்று தையல்நான் வாடுகிறேன்
வாராயோ நீயென் வழிக்கு. - 346

மாமனே என்றனை மன்றிலே சேர்ந்துவிடு
காமன் கணையால கன்னிநான் - வாமமுறும்
என்னுடலும் சோர இருந்திங்கு வாடுகிறேன்
என்னுடன் வாழ்ந்திட வா. - 347

முறுக்கிய மீசையும் முண்டாசுக் கட்டும்
இறுகிய உன்னுடலும் இங்கே – உறுமின்பம்
தந்தெனை வாட்டுதே தாரமாய் ஆக்கிநீ
சொந்தமென என்னையும் சூடு. - 348

வாய்க்கால் வரப்போரம் வஞ்சிநான் போகையில
பார்வையால் என்னைப் படர்ந்தவரே – பார்தனில்
உன்றனின் பாதியாய் உன்னவள் ஆகும்நாள்
என்னாள் எனவே இயம்பு. - 349

தண்ணிக் குடங்கொண்டு தையல்நான் போகையில
வண்ண மகளென வாயாரப் - பண்ணுடன்
பாடியே என்னையும் பார்வையால் வீழ்த்தினையே
கூடி மகிழ்ந்திடக் கூறு. - 350

ஆசையோடு காத்திருந்தேன் அத்தானே உன்றனது
மீசையில நான்மயங்கி மேதினியில் - நேசமுடன்
உன்வரவை எண்ணி உலகை மறந்துமே
நின்றவளை நீயும் நினை. - 351

பூச்சூடிக் காத்திருப்பேன் புண்ணியனே என்னையுன்
பேச்சால் கவிழ்த்தாயே பேரழகா – பேச்சியம்மன்
பேரருளால் நாமிணைந்து பேரின்பம் கண்டிடத்
தாரமென என்னையும் தாங்கு. - 352

வேடங்கள் பூண்டென்னை வீழ்த்தியே விட்டாயே
மாடத்தில் தான்மறைந்து மாயமாய் - பாடல்கள்
பாடிக் கவிழ்த்தவரே பாவையிவள் என்னோடு
கூடிக் களித்திடக் கூடு. - 353

மல்லுவேட்டி கட்டியிந்த மங்கை மயங்கிட
மெல்லவே வந்தென்றன் மேனியை – மெல்லிதழால்
முத்தமிட்டு நீயும் முழுமகிழ்வு தாராயோ
இத்தரையிற் காத்திருப்பேன் இன்று. - 354

கண்ணால சாடைகாட்டிக் காதலை வீசினாயே
பெண்ணிவளை ஏற்றிட்டால் பேரின்பம் - மண்ணினில்
கண்டுமே நான்மகிழ்வேன் கண்ணாளா நீயென்னை
வண்ணமாய் ஏற்றிட வா. - 355

நல்லோர்கள் வாழ்த்துரைக்க நாமிருவர் ஒன்றாகி
இல்லறமாம் நல்லறம் ஈங்கியற்ற – நல்லுலகில்
தாமதஞ் செய்யாமல் தாரமாய் ஆக்கியே
வாமமுறும் என்னோடு வாழ் - 356

ஈருடல் ஓருயிராய் இங்குநாம் ஒன்றாகிப்
பேரிடர் வேளையிலும் பேணியே – நேரிய
இல்லறம் தன்னில் இணைந்துமே வாழ்ந்திடப்
பல்லோரும் போற்றுவர் பார் - 357

மல்லிப்பூ மாலைசூடி மச்சான் வரவெண்ணி
அல்லிக் குளத்தருகில் ஆரணங்கு – நல்விதமாய்
காத்திருக்கும் வேளையில காளையாம் நீவந்தே
ஆத்திரம் கொள்ளாமல் ஆற்று - 358

உற்றார் மறுத்தாலும் உன்னையே நானெண்ணி
இற்றரையில் வாழ்வேன் இனியவனே – பெற்றவர்
சம்மதம் பெற்றுமே சார்ந்திடுக என்னையும்
அம்புவி தன்னில் அணை. - 359

ஆலமரந் தன்னில் அமைத்திட்ட ஊஞ்சலில்
சீலமாய் நானாடச் செல்கையில் – ஞாலமதில்
என்னோடு நீயிணைந்து இன்பமாய் ஆடிவிடு
இன்னாளில் இன்புறத் தான். - 360

ஊடலும் கொள்ளாதே உத்தமனே நீயென்னை
நாடவும் செய்திடு நானிலத்தில் - கூடவே
வந்திடுவேன் நானுமிந்த வையகத்தில் உன்னோடு
சந்ததமும் வாழ்ந்திடத் தான். - 361

கண்ணுக்கு மையிட்டுக் கார்குழலிற் பூச்சூடிப்
பெண்ணிவள் காத்திருக்கேன் பேரழகா – மண்ணிலென்
பக்கத்தில் நீவந்தென் பாதியென ஆகியே
அக்கறையாய் என்னை அணை. - 362

அத்தானே என்றுனை ஆரணங்கு நானழைக்க
சொத்தாக வந்துவிடு சுந்தரனே - இத்தரையில்
பித்தாகி உன்பின்னால் பேதையிவள் சுற்றுகிறேன்
சித்திரமாய் என்னோடு சேர். - 363

உனதழகை எண்ணியென் உள்ளமும் துள்ள
மனத்துக்குள் பூட்டிவைத்து மண்ணில் - தினமும்நான்
எண்ணியே வாழ்கிறேன் என்னவனாய் நீவந்தால்
பெண்ணாய் மகிழ்வேனே பேசு. - 364

தேசமெங்கும் சென்றுமே தேடினாலும் உன்போல
நேசமுள்ள மச்சானை நேரடியாய்ப் - பாசமுடன்
காத்திடும் உன்னையே காணலாம் என்றெந்தன்
நேத்திரங்கள் எண்ணவில்லை நேர் - 365

உள்ளம் மகிழ்ந்திட உன்னோடு நானிணைந்து
துள்ளி விளையாடத் தூயவனே – அள்ளிட
வந்தென்னைச் சேர்ந்துவிடு வஞ்சிமகள் என்னோடு
நிந்தனை வாராது நேர். - 366

காளையர்கள் என்மீது கண்வைத்துச் சுற்றுகிறார்
வேளையெலாம் என்பின்னால் வேண்டியே – ஊளையிட்டு
வந்தென்னை வாட்டுகிறார் வந்தென் துணையாகி
சந்ததமும் என்னைநீ தாங்கு. - 367

நற்றமிழ்ப் பண்பாட்டை நாடிநான் காத்திடுவேன்
பற்றுடன் உன்றனது பாதியானால் - இற்றரையில்
என்னாளும் உன்னடியில் இன்பமாய் நானிருப்பேன்
மன்னவன் உன்னை மணந்து. - 368

எத்துன்பம் வந்தாலும் ஏந்திழையாள் என்னைநீ
இத்தரையிற் காப்பாய் எனவெண்ணி – நித்தமும்
உன்றன் நினைவில் உயிர்வாழும் என்றனுக்கு
அன்பைப் பொழிந்துநீ ஆற்று. - 369

சூடிடுவோம் மாலைநாம் சுந்தரனே இப்புவியில்
நாடியே செய்திடுவோம் நல்லறமும் - தேடியே
என்னோடு வந்துவிடு இல்லறமாம் நல்லறத்தில்
என்னாளும் வாழ்வோம் இனிது. - 370.

## இடப்பெயர்வின் இன்னல்கள்.

கயவர் கொடுமையினால் காசினியில் நாங்கள்
நயமிழந்து வாடியதை நானே - இயற்றிய
வெண்பாக்கள் தானியம்பும் வேதனையைச் சொல்லுமே
உண்மையை நீயும் உணர் -371

சொந்தவிடம் விட்டகன்று சொத்துசுகம் தான்துறந்து
பந்தங்கள் விட்டுமே பட்டதுயர் - செந்தமிழால்
நல்லபடி நானுரைப்பேன் நற்றமிழால் தானுமே
வல்ல இறைவனே வாழ்த்து - 372

வன்செயல்கள் தந்ததுயர் வாட்டுகின்ற வேளையில்
இன்னல் தவிர்க்க இடம்பெயர்ந்து – அன்னாளில்
கண்டதுயர் கொஞ்சமா காசினி தன்னிலே
எண்ண முடியுமா இங்கு. - 373

வீடுவாசல் எல்லாமே வீழ்ந்தழிந்து போனதுவே
காடுபோல எம்மூரும் காசினியில் - பீடிழந்து
எங்களது தேசத்தில் இன்னல் பெருகிடவே
பங்கம் அடைந்தோமே பார். - 374

துப்பாக்கிச் சன்னம் துளைத்திட்ட எம்முடலை
இப்பார் தனிலகற்ற ஏதின்றி – அப்படியே
விட்டுமே சென்றவர்கள் விம்முகின்ற காட்சியைப்
பட்டென நீயும் பகர். - 375

எறிகணை வீச்சால் எரிந்த உடல்கள்
பொறிமுறை அற்றுப் புதைத்தே – தறிகெட்டும்
எங்களவர் ஓடியே இன்னலும் தானடைந்து
சங்கடப் பட்டதனைச் சாற்று. - 376

யாழ்நகர் முற்றிலும் நாசகாரச் செய்கையினால்
பாழ்பட்டுப் போவதனைப் பார்த்துமே – வீழ்ந்திடாமல்
தங்களுயிர் காத்திடத் தாரணியில் தான்நகர்ந்து
சங்கடப் பட்டதனைச் சாற்று - 377

வீடுவாசல் சொத்தெல்லாம் வீழ்ந்தழிந்து போயிங்குப்
பாடுபட்டுச் சேர்த்த பணமிழந்து – ஓடுகையில்
உன்மனம் பட்டதுயர் ஊரறிந்து கொள்ளுமா
என்னென்று சொல்வாய் இனி. - 378

பயறுழுந்து தானியங்கள் பானையிலே தானும்
இயன்றளவு உள்ளதெங்கள் இல்லம் - பயமதனால்
அத்தனையும் விட்டகன்று ஆனோமே ஏதிலியாய்
சொத்துசுகம் எல்லாம் துறந்து. - 379

கஞ்சிக்கும் தண்ணிக்கும் கால்கடுக்க நின்றுநாம்
அஞ்சியே பட்டதுயர் ஆரறிவார் - கிஞ்சித்தும்
கண்டுகொள்ளாக் காடையர்கள் காசினியில் எம்மையும்
தண்டித்து நின்றனரே தான். - 380

ஓடோடத் தான்விரட்டி ஓரிடத்தில் சேர்த்தெமை
வாடவிட்டு வஞ்சகர் தான்வதைக்க – பீடழிந்து
இப்புவியில் நாங்கள் இடருற்று வாழ்ந்ததனை
எப்படிச் சொல்வேன் இனி. - 381

குண்டுவீசி எங்கள் குடிசைகள் எல்லாமும்
விண்டழியச் செய்த விமானங்கள் - மண்ணிலெமை
மாண்பிழக்கச் செய்திட்ட மாகதை தன்னையே
தோண்டி எடுத்தால் துயர். - 382

பால்தந்து எம்மையும் பார்த்த பசுவோடு
கால்நடைகள் எல்லாம் கருகிடச் - சால்பிழந்து
எல்லோரும் சென்றிங்கே ஏதிலிகள் ஆனோமே
நல்லபடி இல்லையே நாடு - 383

செல்பட்டுத் தானழிந்து சீரிழந்து போனவெங்கள்
நல்லுடல் தன்னையும் நானிலத்தில் - நல்லபடி
நாமழிக்க மாட்டாமல் நாளெல்லாம் பட்டதுயர்
பாமகள் பாடுவாள் பார். - 384

வான்படை தானும் வகையாகக் குண்டுவீச
ஏனென்று கேட்பார் எவருமின்றி - ஈனர்கள்
செய்கையால் நாமும் சிறப்பிழந்து வாடியதைப்
பொய்யென்று சொல்லும் புவி. - 385

ஆட்சியில் உள்ளோர் அடக்கியே ஆண்டிட
மாட்சிமை பெற்றுள்ள மண்ணினில் - நாட்டமும்
கொண்டதன் காரணத்தால் கூட்டி அழித்தனர்
மண்ணுலகில் எம்மை மறித்து. - 386

போட்டிகள் போட்டுப் புவியுள்ள நாடெல்லாம்
நாட்டமும் கொண்டே நசுக்கிட – ஓட்டமாய்
ஓடியே நாமும் உலகை வலம்வந்தோம்
தேடினோம் இன்பமெனச் செப்பு. - 387

காசினியில் உள்ளவர்கள் கண்டுகொள்ள வில்லையே
பேசிடத் தானும் பெயரவில்லை – தேசிழந்து
நாங்களிங்கு பட்டதுயர் நானிலம் காணுமா
பாங்குடன் தீர்க்குமா பார். - 388

முள்வேலிக் கூண்டினுள் முள்ளிவாய்க் காலினில்
அள்ளி அடைத்தனர் ஆங்கெமைக் - கிள்ளியே
கஞ்சியும் கூழுமெனக் கால்வயிறு தான்நிரம்ப
அஞ்சிநாம் உண்டோம் அறி. - 389

தந்தையைத் தாயினைத் தானிழந்து வாடியோர்
முந்தி யுறவிழந்த மூத்தோர்கள் - இந்நிலத்தில்
குந்தி இருந்து குழறி அழுவதனை
செந்தமிழால் நீயினிச் செப்பு. - 390

மகனை மகளினை மாண்புறும் சொந்தம்
இகமதில் தானிழந்து இங்கே – அகத்தில்
துயரோடு வாழுகின்ற துன்பநிலை தன்னையே
இயம்பிடு நீயும் இனி. - 391

முகாம்கள் தனிலடைத்து மூச்சிழக்க வைத்துத்
தகாத செயல்களால் தானே – அகாலத்தில்
நாமழிய வேண்டுமென நம்பினோர் மத்தியில்
சேமமுற வாழ்வோம் செழித்து - 392

எத்தனை இன்னல்கள் எமக்கிங்கு வந்தாலும்
அத்தனையும் தாண்டியே ஆனந்தம் - இத்தரையில்
பெற்றுநாம் வாழ்வோம் பெருமை பெறுவோமே
உற்ற துயரை உடைத்து. - 393

நந்தமிழர் வாழ்வும் நலமோங்கிச் சென்றிட
வந்திருந்து நாமும் வணங்குவோம் - சுந்தரமாய்
எங்களவர் தானும் எழிலார்ந்த நாடொன்றை
இங்கே பெறுவர் இனிது. - 394

கற்பிழந்த நங்கையர் காசினியிற் தானினிமேல்
பொற்புடன் வாழ்ந்து பொலிவுறணும் - இற்றரையில்
வஞ்சகர் தானழிந்து வாழ்வும் வளம்பெறணும்
பஞ்சமின்றித் தானெனப் பகர். - 395

உக்கிரப் போரால் உறுப்பிழந்த எம்மவரை
அக்கறை கொண்டுமே ஆதரித்து – தக்கநல்ல
வாழ்வினைத் தானளித்து வாழவைக்க வேண்டுமே
ஊழ்வினை தன்னை ஒறுத்து. - 396

மாற்றுத் துணியின்றி மானத்தைக் காத்திட
வேற்று வழியின்றி வெம்பியே – தேற்றுவார்
யாருமின்றி எங்களது நங்கையர்கள் பட்டதுயர்
யாருரைப்பார் இங்கே நமக்கு. - 397

மடியிற் சுமந்த மழலை தமக்குக்
குடித்திடப் பாலூட்டக் குன்றி – மிடியுடன்
தாய்மார்கள் பட்டதுயர் தானிங்கு கொஞ்சமில்லைத்
தாய்மண் அறியுமா சாற்று. - 398

இறந்தோர் நினைவை இதயத்தில் எண்ணிச்
சிறப்பாய்க் கடமைகள் செய்ய – உறவினர்
ஏதுவழி என்றிங்கே இன்னலுற்று வாடினர்
போதும் பிறப்பினிப் போ. - 399

விடிவொன்று வாராதோ வீடுவந்து சேர
மிடியகன்று போகாதோ மேலே – குடிமக்கள்
இன்னல் இழந்தினி இன்பமாய் வாழ்ந்திட
என்றெண்ணி நீயிறையை ஏத்து. - 400

## இன்பரசம் என்னாளும் பருகவேண்டும்

காவிற் குயிலோசை காதாரக் கேட்டிங்கு
நாவிற் கவிவடித்து நானிலத்தோர் - கூவிக்
களித்திட வேண்டும் கடிதினில் இன்பம்
அளித்திட வேண்டும் அறை - 401

அஞ்சுகத்தின் ஆசைமொழி ஆவலாய்க் கேட்டுநாம்
துஞ்சிட வேண்டும் துயரின்றிப் - பஞ்சணையில்
என்னாளும் இன்பரசம் ஈங்குப் பருகியே
இன்பமுற வேண்டும் இனி - 402

நந்தமிழர் பண்பாடு நன்றோங்க வேண்டுமினிச்
செந்தமிழும் ஓங்கிச் செகத்தினில் - முந்தியே
நன்னிலை பெற்றுமே நல்லறிஞர் போற்றிட
இன்புற்றே ஓங்கணும் இன்று - 403

நாரியர்கள் நன்னடத்தை நன்றோங்க வேண்டுமினிப்
போரிடர் தான்மறந்து போகணும் - பூரித்தே
எம்மவர் வாழ்வினி இன்பமாய் மாறணும்
தம்மிடர் தன்னையே சாய்த்து - 404

தனித்தமிழின் ஓசையினித் தாரணியில் ஓங்கி
இனிக்கணும் என்றே இயம்பி – மனிதர்கள்
எல்லோரும் இங்கினி இன்றமிழைப் பேசணும்
நல்லோர்கள் வாழ்த்தணும் நாடு - 405

பாவலர்கள் பாக்களினைப் பாடிடல் வேண்டும்
நாவல்ல நல்லறிஞர் நானிலத்தில் - ஆவலுடன்
நந்தமிழைத் தான்பரப்பி நன்றுயர வைக்கணும்
செந்தமிழும் பெற்றிடணும் சீர் - 406

சாதிமத பேதங்கள் சாய்ந்தே யழிந்திங்கு
நீதிநெறி என்றும் நிலைத்திட – ஓதியே
எல்லோர்க்கும் நன்றாக எம்மவர் தானுரைக்க
நல்லபடி வாழலாம் நம்பு - 407

திருடிப் பிழைப்போர் திருந்திட வேண்டும்
உருகும் தமிழும் உயர்ந்தே – அருகிடும்
நற்கலைகள் எல்லாம் நனிதுயர்ந்து செல்லணும்
பெற்றிடும் தாய்மொழி பேறு - 408

கலைஞர்கள் வாழ்வும் கவினுற வேண்டும்
அலையும் நிலையும் அகன்று – நிலையுயர்ந்து
என்னாளும் இன்பமாய் இங்கவர் வாழணும்
என்றுமே நீயினி ஏத்து - 409

ஊழல்கள் இல்லா உலகொன்று தோன்றியிங்குப்
பாழடையும் பண்பாட்டைப் பாரினில் - தாழவே
செய்யாமற் காத்துச் சிறப்புறச் செய்யணும்
உய்யும் தமிழும் உணர். - 410

நங்கையர்கள் கற்புநெறி நானிலத் தோங்கணும்
பங்கமின்றிப் பார்க்கணும் பாரினில் - எங்களது
பண்பாடு தானோங்கிப் பாரிற் புகழுறப்
பண்ணோடு பாவொன்று பாடு - 411

மண்ணுலகில் இன்று மதுபோதை தான்கூடப்
பண்ணுகிற பாவங்கள் பார்த்துமே – கண்களில்
ஆத்திரம் பொங்க அழிக்க முயன்றாலும்
சாத்தியம் ஆகலைச் சாற்று - 412

வன்செயல் தானழிந்து வஞ்சகர் போயகன்று
இன்பம் பெருகணும் இங்கென – நன்றிறையை
என்னாளும் பாடுகிறேன் இங்கிருந்து நானுந்தான்
மன்றாடிக் கேட்டேன் மகிழ்ந்து - 413

அதிகாரம் செய்வோர் அழிந்துமே இங்குச்
சதிகாரர் இல்லாமல் சாய்ந்தே - அதியின்பம்
எல்லோரும் பெற்றிட இன்புற்று வாழ்ந்திட
நல்லபடி நீயுமே நாடு - 414

பிரிவினைகள் இல்லாமல் பேர்புவியில் நாங்கள்
உரிமையுடன் ஒன்றாய் இருந்து – விரிவாக
உள்ளம் மகிழ்ந்தே உயர்வையும் கண்டிடத்
துள்ளி அகலும் துயர் - 415

ஆலயம் எங்கும் அறநெறிப் பாடங்கள்
சீலமாய் கற்பித்தால் சீருறும் - ஞாலமதில்
வன்செயல் இல்லாது வாழ்வும் உயர்ந்திடும்
என்றுமே நீயும் இயம்பு. - 416

ஒற்றுமை ஓங்கி உலகினில் எல்லோரும்
பற்றுடன் வாழப் பழகணும் - செற்றவரைச்
சேர்த்தணைத்து வாழ்ந்து சிறப்பினைப் பெற்றிட
ஆர்வமும் கொண்டால் அழகு. - 417

அடுத்தவர் சொத்துக்கே ஆசையும் கொண்டால்
இடுக்கண் பெருகிடும் இங்கே – தொடுத்துமே
நற்செயல் செய்திட நானிலம் ஓங்குமே
பெற்றிடும் பேறெனப் பேசு. - 418

களவுகள் கொள்ளைகள் காணாமற் போயே
வளம்பெற வேண்டுமிவ் வையம் - தளம்பாமல்
என்னாளும் இன்பம் இருந்திடல் வேண்டுமே
நன்றே வளருமிந்த நாடு - 419

பக்குவம் மிக்கோர் பதவிக்கு வந்தெமை
அக்கறை கொண்டுமே ஆளணும் - எக்கணமும்
மக்கள் நலனை மனத்தில் இருத்தியே
சிக்கல்கள் தீர்த்துச் சிறந்து - 420

நித்தம் அமைதி நிலவிட வேண்டுமே
சத்தம் அகன்று சகமீதில் - யுத்தமும்
இல்லையே என்றினி எம்மவர் எண்ணிட
அல்லல் அகலும் அறி. - 421

வந்துள்ள துன்பங்கள் வாகாய் அகன்றிட
சிந்தித்துச் செய்கைகள் செய்திடணும் - முந்தியே
நந்தமிழர் வாழ்விந்த நானிலந் தன்னிலோங்க
சிந்தித்து நீயுமே செய். - 422

இத்தனையும் இம்மண்ணில் இன்றோங்க வேண்டுமினி
நித்தம் மகிழ்விங்கு நேரணும் - சித்தம்
மகிழணும் என்றே மனமதும் ஏங்க
அகிலம் தழைக்கும் அறி. - 423

என்னாசை இத்தனையும் இங்கே நிறைவேறி
நன்றுமே வாழணும் நானிலத்தோர் - என்றுமினித்
துன்பமே இல்லைத் தொடர்வோம் புதுவாழ்வை
என்றுமே நீயினி ஏத்து. - 424

இன்பரசம் என்னாளும் எம்மவர்கள் வாழ்வினில்
நன்றே பரவணும் நானிலத்தில் - என்றுமினித்
துன்பமே இல்லாமல் தொடர்வோம் புதுவாழ்வை
என்றுமே இங்கென ஏத்து. - 425

## முகநூல் தளம் - நன்மையும் தீமையும்

கணனி யுகமிங்குக் காட்டிய நட்பும்
இணங்கியே உள்ளம் இணைய – கணத்தினில்
அன்பைப் பரிமாறி ஆனந்தம் கண்டிட
என்றும் உதவும் இனிது - 426

காலத்தின் கோலத்தாற் காணாமற் போயிந்த
ஞாலத்தில் எங்கோ நகர்ந்துள்ள – சீலமுறு
நட்புகள் தம்மை நலமுடன் சேர்த்திட
முட்டிடும் அன்பும் மொழி. - 427

ஞாலத்தில் எங்குமுள நட்புகள் ஓங்கிடும்
ஆலமரம் போலே அகன்றிடும் - காலமெலாம்
புத்துணர்வு பொங்கிடும் பூரிப்பும் வந்திடும்
இத்தரையிற் தானே இயம்பு - 428

இளவயது நண்பர் இணையினையும் தேடலாம்
களமிதில் காதல் கசிய – உளமகிழ்ந்து
இல்லறம் செய்யலாம் இப்புவி தன்னிலே
நல்ல வழியென்று நாடு. - 429

உலகெங்கும் வாழும் உறவுகட் கெல்லாம்
நலமது சொல்லலாம் நாளும் - விலகியே
சென்றுள்ள சொந்தத்தை சேர்க்க உதவிடும்
என்றும் முகநூல் இயம்பு - 430

செய்திகள் எல்லாம் சிதறும் உலகெங்கும்
உய்யும் வழிகள் உணர்ந்துமே – பொய்யைப்
புகலா திருந்தால் புகழும் பெருகும்
இகழ்ச்சி வராதே இனி. - 431

நாட்டில் நடந்திடும் நல்லன கெட்டன
ஓட்டமாய்ச் செல்லும் உலகெலாம் - நாட்டமுடன்
நல்லபடி இத்தளத்தை நாமும் இயக்கினால்
நல்லறம் ஓங்கும் நனி. - 432

நாசச் செயல்களும் நாடியிதிற் செய்யலாம்
வேசம் புனைந்து விளையாடி – மோசச்
செயல்கள் புரிந்து செகத்தை அழித்துப்
பயத்தைக் கொடுக்கலாம் பார் - 433

முறையற்று நாமும் முகநூலில் வந்தால்
கறைபட்டுப் போகும் களிப்பு – நறையுண்ட
வண்டுகள் போல வலம்வந்து சென்றிட
உண்டாகும் துன்பம் உணர். - 434

நன்மையும் உண்டிதில் நட்டமும் உண்டாமே
நன்மையை மட்டுமே நாடினால் - என்றுமிதில்
இன்பம் பெறலாம் இலக்கை அடையலாம்
என்றினி நீயும் இயம்பு - 435

பாலையும் நீரையும் பாங்காய் பிரித்தறிந்து
நாலையும் பார்த்ததில் நல்லதை - மாலையென
ஆசையும் கொண்டே அணிந்தாற் புவியில்
நீசம் வராது நினை. - 436

இன்னல் தருகின்ற ஈனர்கள் நீங்கிட
நன்மை பெருகுமே நானிலத்தில் - என்றினி
எல்லோரும் எண்ணி இனிதாய் இயக்கிட
நல்லன ஓங்கும் நனி. - 437

தொல்லை தராமல் துயரினை நீக்கிடும்
நல்லதோர் நட்பினை நானிலத்தில் - எல்லோரும்
பேணியே வந்தாற் பெரும்புகழ் ஓங்கிடும்
வீணிழப்பு வந்திடாமல் வெல். - 438

முகநூல் தளத்தை முறையாக நாளும்
இகத்தினில் உள்ளோர் இயக்க – தகவல்
உலகெலாம் செல்ல உதவிடும் தானே
நிலத்தினில் என்றும் நிலைத்து - 439

நல்லதற்கு மட்டுமிதை நாமும் இயக்கணும்
அல்லது செய்தால் அவமானம் - நல்லுலகில்
நல்லதோர் நட்பை நமக்கென ஆக்கினால்
அல்லல் விலகும் அறி. - 440

## மறைமுக எதிரிகள்.

முகமலர்ந்து பார்ப்பார் முறுவலும் செய்வார்
அகமலர்ந்து எம்மை அவர்கள் - சுகதுக்கம்
கேட்டே இருந்திடுவார் கேண்மையும் காட்டியே
வீட்டுவார் எம்மை விரைந்து - 441

உள்ளொன்று வைத்தும் உரைப்பார் புறமொன்று
கள்ளமுடை நெஞ்சக் கயவரிவர் - உள்ளத்தில்
நஞ்சினைக் கொள்வார் நயமாய் உரையாடி
வஞ்சகம் செய்வார் வதைத்து - 442

நம்மிடையே வந்தமர்ந்து நட்பாகப் பேசிடுவார்
தம்மினிய பேச்சாலே சாய்த்திடுவார் - எம்முள்
முரண்பாட்டை ஏற்படுத்தி மூழ்கிட வைப்பார்
தரங்கெட்ட மாந்தரிவர் தான். - 443

ஆதரவு காட்டி அழிந்திடச் செய்துமே
வேதனைகள் தந்து விரட்டுவார் - பாதகம்
செய்யுமிப் பாதகர் சேர்ந்தழிய வேண்டுமிதே
உய்யும் வழியாம் உணர். - 444

ஏதங்கள் செய்துமே எம்மவரைச் சாய்த்திடும்
பாதகர் தம்மையிப் பாரினில் - சாதகமாய்
மாற்றிட வேண்டும் மனிதர்கள் வாழ்வினில்
ஏற்றமும் வேண்டும் இனி. - 445

நட்பினர் போலவே நாடகம் ஆடிநிதம்
கெட்டன செய்திடுவார் கேண்மினே – திட்டமாய்
அன்னவர் தம்மை அழித்திடல் வேண்டுமே
நன்றோங்கும் எங்களின் நாடு - 446

தன்குற்றம் காணாமல் தாரணியில் மற்றோரின்
மென்குற்றம் தன்னையும் மேலாக்கி – என்றுமே
நல்லவர் போலவர் நாடகம் ஆடிடுவார்
கொல்லாமற் கொல்வாரே கூறு. - 447

தன்வீட்டில் என்னென்ன தப்புகள் உண்டாமோ
தன்பிள்ளை செய்திடும் தப்பென்ன – என்றவர்
எண்ணார் பிறர்செய்யும் ஏதங்கள் கண்டுமே
மண்ணில் உயர்த்துவார் மாசு. - 448

அன்புள்ளோர் போன்றிவர் ஆதரவாய் பேசுவார்
நன்றெமக்கு செய்வதாய் நாடகத்தை - என்றுமே
நம்பிட ஆடி நனிதுயர் தந்திடுவார்
எம்மையும் ஏய்ப்பார் இனி. - 449

அடுத்தவர் குற்றம் அறிந்திட முன்னர்
எடுத்துமே நோக்கணும் எம்மில் - தொடுத்துமே
அக்குறை இல்லையென ஆராய்தல் வேண்டுமே
சிக்கல்கள் தீரும் சிறந்து. - 450

## அருகிவரும் விளையாட்டுகள்.

அம்மானை ஊஞ்சல் அருங்கும்மி தன்னோடு
நம்தமிழ் நாரியர்கள் நாடியே – தம்மிளமைக்
காலத்தில் ஆடும் கவினார் விளையாட்டு
ஞாலத்தில் இன்றில்லை நம்பு. - 451

மட்டை எடுத்து மகிழ்வாய் வளையத்தை
தட்டியே தானுருட்டல் தாரணியில் - எட்டியே
போனதே இப்புவியில் பொய்யில்லைத் தானாமே
ஆனதே இங்கே அழிவு - 452

கூடிக் குலவையிட்டுக் கும்மாளம் போட்டுமே
நாடி மகிழ்ந்திடும் நங்கையர்கள் - தேடினாலும்
காண முடியவில்லைக் காசினியில் தானின்று
வேணவாக் கொண்டேன் விரைந்து - 453

பண்டிகை நாள்களில் பற்பலவாய் பாரினிலே
தண்டமிழர் தங்கள் தனித்துவம் – எண்டிசை
போற்றிட ஆடும் புதுப்புது ஆட்டங்கள்
காற்றினிற் போனதெனக் காட்டு - 454

கிட்டியும் புள்ளும் கிளித்தட்டும் தானிங்கே
எட்டியே போனதும் இன்னலே – வட்டமாய்
சுற்றியே தானிருந்து சுந்தரியர் தானாடும்
பற்றதும் போனதே பார். - 455

தாச்சி மறித்தலும் தையலர் கூடியே
பேசி மருதாணி பூசுதலும் - போச்சுதே
அந்நியர் தங்களின் ஆகாத ஆட்டங்கள்
இந்நிலம் வந்ததே இன்று. - 456

பூவரசம் கொப்பினிற் புத்திலை தானெடுத்து
நாவசைத்துப் பாடிட நற்குழலை – ஆவலாய்
வாசித்தே இன்புறும் வஞ்சியரை எல்லோரும்
நேசிக்க வேண்டும் நினை. - 457

முட்டி யுடைத்தலும் முன்னின்று மங்கையர்
கட்டியே சிற்றில் களித்தலும் - விட்டிங்கு
சென்றதிசை காணாமற் தேடுகிறோம் நாமிங்கே
என்றிவை மீளும் இனி. - 458

பண்டைத் தமிழரின் பண்பான ஆட்டங்கள்
விண்டுமே போனதோ வீழ்ந்தென – மண்ணினில்
எல்லோரும் எண்ணி இருந்திங்கு வாடுகிறார்
நல்லபடி காண்போமோ நாம். - 459

கூடியே மங்கையர் கோலாட்டம் ஆடிநிதம்
பாடி மகிழ்ந்தாடும் பாண்டியும் - ஓடி
மறைந்ததே இன்றிந்த மண்ணினை விட்டுக்
கறைபட்டுப் போனோமே காண். - 460

பல்லாங் குழியாடிப் பாங்குடன் தாயமும்
எல்லோரும் கூடியே யாடுவர் - நல்லுலகில்
இன்றிவை இல்லா இழிநிலை தானாச்சே
என்றிவை மீளும் இனிது. - 461

உடலுடன் உள்ளமும் உற்சாகம் காணும்
விடமுள்ள நோய்கள் விலகும் - திடமுடன்
நல்வாழ்வு வாழலாம் நானிலத்தில் தானாமே
அல்லல் விலகும் அறி. - 462

காலங் கடந்த கவின்மிகும் ஆட்டங்கள்
ஞாலத்தில் மீளுமா நன்றென – காலமெலாம்
எண்ணி வருந்திட இப்புவி தன்னிலவை
கண்டிடக் கூடும் கருது. - 463

விஞ்சுபுகழ் கொண்டநல் வீர விளையாட்டை
அஞ்சாது மண்ணுலகில் ஆடிட – எஞ்ஞான்றும்
நம்புகழ் ஓங்கிடும் நானிலம் போற்றிடும்
இம்மண் இலங்கும் இனி. - 464

பண்டை விளையாட்டைப் பாழென்று தள்ளியே
அண்டியுள்ள நாட்டாரின் ஆட்டத்தைக் - கொண்டாடி
இங்குளோர் கூடியே இன்முகமாய் ஆடிநிதம்
பங்கப் படுகிறார் பார். - 465

## பணமில்லா வாழ்க்கை பாடாய்ப் படுத்தும்.

சட்டையின் பையினுள் சற்றும் பணமின்றேல்
எட்டியும் பார்த்தே இளித்திடும் - முட்டச்
செலவுகள் வந்தெமைச் சீரழித்து நிற்கும்
நலமும் கெடுமே நனி. - 466

அட்டில் தனிலே அடுப்பும் உடைந்திடும்
வட்டிக் கடனும் வதைக்குமே – எட்டநின்று
சொந்தங்கள் எல்லாம் சுழற்றி அடிக்குமே
விந்தை உலகே விளம்பு. - 467

அடுக்களை தன்னில் அரிசி முடியும்
அடுக்காய் உறவும் அகலும் - மிடுக்குடன்
வாழ்ந்திட்ட வாழ்வதும் வற்றியே போயிடும்
தாழ்வும் வருமே தழைத்து. - 468

வளர்த்தநம் நாய்க்கும் வருத்தம் வருமே
அளவிலாத் துன்பம் அடுக்க – தளர்ந்திடும்
நெஞ்சமது தானும் நிலைகுலைந்து போகுமே
எஞ்சிடும் துன்பமென்று எண்ணு. - 469

கொண்டாட்டம் பற்பல கூடியே வந்தெமைத்
திண்டாட வைக்கும் திணறியே – மண்ணுலகில்
ஏக்கம் பெருகிட எம்மவர் வாழ்வினில்
தாக்கம் வருமே தனித்து. - 470

தேறுதல் சொல்லத் தெரிந்தவர் வந்திடார்
ஆறுதல் நல்கவே ஆருமிரார் - மாறுதல்
வேண்டுமிப் பூமியில் வேதனை தீரவே
ஆண்டவன் நீக்கணும் ஆசு. - 471

நோய்கள் பெருகிட நொந்துமனம் வாடியே
சாய்ந்திடல் வேண்டும் சகத்தினில் - நோய்களிற்கு
வைத்தியம் பார்த்திட வைத்தியரை நாடிடக்
கைத்தொகை போதாதே காண். - 472

களனியில் வேலைகளின் காலம் வரவே
தளர்ந்துமே நெஞ்சம் தயங்கும் - அளவின்றி
வந்தெமை வாட்டும் வகையான தேவையால்
சிந்தையும் சோரும் தெரி. - 473

மீண்டெழும் இத்துயர் மேதினியில் வேண்டாமே
ஆண்டவா இத்துயர் ஆற்றிடு – மீண்டிங்கு
வேண்டாம் துயரென விண்ணப்பம் செய்கின்றேன்
ஆண்டவா நீயும் அருள். - 474

கல்விச் செலவும் கடிதில் உயர்ந்திடும்
மெல்ல மனமும் மிரளுமே - இல்லாத
தேவைகள் கூடித் தெருவுக்குத் தள்ளுமே
பாவையே நீயும் பகர். - 475

ஆறுதல் வார்த்தை அகத்தினைச் சுட்டிடும்
மாறுதல் இன்றி மனம்வெதும்பி – வீறுடன்
செல்வத்தைத் தேடிச் செகமெலாம் சென்றிட
நல்மனம் ஏங்கிடும் நம்பு. - 476

மனையாளின் மாங்கல்யம் மண்ணில் மறையும்
வினைப்பயன் கூடி விரட்டும் - அனைவரும்
ஏளனஞ் செய்வர் எதிரிபோல் பார்த்திடுவார்
தாளவே மாட்டாய் தனித்து. - 477

தந்த கடனைத் தருமாறு கோரியே
வந்துமுன் நின்று வதைப்பரே - இந்தநிலை
சிந்தையை வாட்டும் செகத்தினில் நாளுமே
நிந்தனை செய்யும் நினை. - 478

கூறிடும் செல்வமும் கூடவே இல்லையெனில்
நாறியே போயிடும் நம்வாழ்வு – தேறிட
நல்வழி சொல்வார் நாட்டினில் இல்லாமல்
அல்லாடிப் போவோம் அறி. - 479

வாழ்வில் வளமும் வளர்ந்திட வேண்டுமெனில்
தாழ்வும் வராமலே தாங்கணும் - வீழ்கின்ற
ஏழ்மை நிலையதும் எம்மை வருத்திட
தாழ்வை அடைந்திடுவோம் சாற்று. - 480

துன்பங்கள் என்றும் தொடர்ந்தே வருத்திடும்
இன்பங்கள் என்றும் இருந்திடாதே – என்றுமிதை
நாங்கள் உணர்ந்தால் நலங்கள் பெறலாமே
தீங்கும் வராது திளை. - 481

மீள முடியாமல் மீண்டும் வந்தெமை
ஆழப் புதைத்தே அவனியில் - தாழவைத்து
ஆட்டிப் படைத்திடும் ஆனந்தம் நீக்கிடும்
வீட்டி அழிக்கும் விரைந்து. - 482

இன்பம் வருமென இங்கிருந்து வாடினாலும்
துன்பம் தொடர்ந்து துரத்துதே – என்றினி
இந்நிலை மாறுமென ஏங்கித் தவித்துநாம்
சந்ததம் வாடுகிறோம் சாற்று. - 483

மாடாய் உழைத்துநாம் மண்ணுலகில் வாடிநிதம்
ஓடாய் உருகி உடைகின்றோம் - பாடாய்ப்
படுத்துமித் துன்பங்கள் பாரினில் ஓங்கித்
தொடுத்துத் துரத்துதே சொல். - 484

துன்பந் தொடர்ந்து துவண்டுநாம் போனாலும்
நன்றே இறையடி நாமேத்த - இன்னல்
அகன்றே உலகினில் ஆனந்தம் பொங்கும்
சுகமும் பெருகிடும் சொல் - 485

செய்தொழில் தானும் சிறப்பிழந்து போயிடும்
மெய்யும் தளர்ந்திடும் மேதினியில் - உய்யும்
வழிகள் பலவும் வரட்சியைக் காணும்
பழியும் தொடருமே பார். - 486

சொத்துகள் எல்லாம் தொடர்ந்தே யழிந்திடும்
வித்துவத் தன்மையும் விட்டழியும் - இத்தரையில்
செல்வம் கரைந்தால் சிறகிழந்த புட்கள்போல்
அல்லாடிப் போவோம் அறி. - 487

தொடர்ந்து துயரம் துரத்தி வரவே
இடறி விழுந்தே இடிந்து – முடமாகி
இத்தரை தன்னில் இருந்துமே வாடியெம்
சித்தம் கலங்கும் தெரி. - 488

எல்லாம் தெரிந்த இறைவன் கருணையும்
நல்லபடி பெற்றால் நலமாமே - இல்லையேல்
அல்லல் பெருகி அலைச்சல் அடைந்துமே
இல்லாமற் போவோம் இழிந்து. - 489

பொய்யைப் புகல்தல் புறங்கூறிச் சென்றிடல்
மெய்யை வருத்திடும் மேதினியில் - பொய்நீக்கி
மெய்யினைப் பேசிட மேலோரும் வாழ்த்துவர்
உய்யும் வழியை உணர் - 490

# அங்காடிகளாகும் ஆலயங்கள்.

ஆலயங்கள் யாவுமிங்கு அங்காடி ஆயின
ஞாலத்தில் பக்தியும் லாபநோக்காய் - காலமெலாம்
ஆனதால் தானிங்கே ஆலயங்கள் எல்லாமே
தானழிந்து போகிறதே சாற்று - 491

சீலமுறும் அந்தணர்கள் செல்வத்தை நோக்கமாய்
காலமெலாம் கொள்வதால் காசினியில் - ஆலயங்கள்
சீலத்தைத் தானிழந்து தேய்ந்தே அழிகின்ற
கோலத்தை என்னவென்று கூறு. - 492

எங்களின் ஆலயத்தில் இவ்வாண்டுக் கட்டணங்கள்
இங்கிவை தானே எனவெழுதித் - தொங்கவிட்டு
காட்சிப் படுத்துவார் காரணங்கள் சொல்லிடுவார்
ஏட்டிக்குப் போட்டியாய் இங்கு. - 493

ஆலயங்கள் தானமைத்து ஆளத் துடிக்கிறார்
ஞாலத்தில் ஈங்கிதோர் நற்றொழிலே – காலத்தின்
மாற்றங்கள் காரணமாய் மண்ணிற் கடவுளரும்
தோற்றுமே போயினர் தான் - 494

திருவிழாக்கள் வந்துவிட்டால் திண்டாட்டம் தானே
பெருந்தொகை எங்களிடம் பேசிக் - குருமார்கள்
தட்சணையாய் வாங்குவார் தாங்கவே மாட்டாமல்
விட்டுமே போகும் விழா - 495

பட்டோலை என்றொரு பட்டயம் தந்துமே
தட்டாமல் இங்கிதனைத் தந்திடுங்கள் - திட்டமாய்
நின்றே யுரைப்பார் நிகழும் பணச்செலவை
என்னென்று ஈடுசெய்வோம் இங்கு. - 496

பாதிப் பொருட்களில் பாங்காய் நடாத்தியே
மீதிப் பொருட்களும் வீட்டிற்கே – பாதித்
தலங்களில் இன்றிவை தாராளம் காணீர்
பலரும் புரிந்திடப் பார் - 497

நிர்வாகச் சிக்கலுக்கு நீதிமன்றம் சென்றிடுவார்
சர்வமும் தங்கட்காய் சாதிப்பார் - கர்வமாய்
நின்றுமே கட்டணத்தை நீட்டிப் பெறுவரே
என்றிது நீங்கிடும் ஈங்கு. - 498

ஆலயங்கள் தம்மை அரசாங்கம் ஏற்கணும்
காலமும் நின்றவற்றைக் காக்கணும் - ஞாலத்தில்
அந்தணர் தங்கட்கே ஆகுநல் ஊதியத்தை
தந்துமே பேணணும் தான். - 499

அரச விதிமுறையில் ஆலயங்கள் தம்மை
தரமாய் நடாத்தணும் தானே – வரன்முறை
காட்டியே ஆலயத்தைக் காலமும் காப்பாற்றி
நாட்டணும் நல்லறம் நாடு. - 500

அங்காடி போலெங்கும் ஆலயங்கள் தோன்றிட
இங்கே அனுமதி இல்லையென – எங்கள்
அரசும் இயற்றணும் ஆணையைத் தானே
வரமாய் வரணுமே வாழ்த்து. - 501

ஒவ்வோர் தலங்களில் ஒவ்வொரு கட்டணம்
எவ்வாறு வந்திடும் என்றுமே – ஒவ்வொருவர்
கேள்விகள் கேட்கணும் கேட்டிடத் தோன்றுமே
வாழ்வில் இதற்கோர் வழி. - 502

ஏட்டிக்குப் போட்டியாய் இங்குளோர் ஆலயத்தை
நாட்டமுடன் ஆக்கல் நலமல்ல – நாட்டினில்
நல்லதோர் திட்டத்தை நாடியே தீட்டினால்
எல்லோரும் வாழலாம் இங்கு. - 503

தரமிகும் பூசைகள் தானங்கே செய்து
வரன்முறை நன்றாய் வகுத்து – முரணின்றி
ஆலயப் பூசைகள் ஆங்கே நடந்திட
சீலமும் வந்திடுமே செப்பு - 504

அறநெறிக் கல்வியை ஆலயங்கள் தன்னில்
முறையாய்ச் செய்யணும் முன்னே – திறனுள்ள
ஆசிரியர் தாமும் அறநெறி போதித்தால்
நேசிப்பர் எம்மதத்தை நின்று. - 505

பட்டியல் போட்டுப் பணத்தைக் கறந்திடவே
திட்டங்கள் பற்பலவும் தீட்டுவார் - எட்டிச்
செலவுகள் வந்திடச் செய்யவும் நாணி
நலத்தை இழக்கிறோம் நாம். - 506

வானளாவும் வண்ணம் வகையாகக் கோபுரங்கள்
தானமைக்க இங்கே தயங்கிடார் - ஞானமே
இல்லாமல் செய்கின்ற இச்செயல்கள் தன்னாலே
அல்லாடிப் போவோம் அறி. - 507

கட்டணங்கள் கூட்டிக் காசினியில் நாங்களும்
நட்டத்தைக் கண்டே நசிந்திங்கு – பட்டதுயர்
எப்படிக் கூறி இறையைப் பணியலாம்
இப்பாரில் என்றே இயம்பு - 508

எல்லோரும் வந்திங்கே இன்பத்தைப் பெற்றிட
நல்லவழி காட்டியே நாட்டினில் - நல்லறம்
செய்திடும் ஆலயங்கள் சேர்புவியில் தோன்றிடல்
உய்யும் வழியாம் உணர். - 509

நிர்வாகம் செய்வோர் நிலையான கட்டணத்தை
தர்மமாய் வாங்கித் தலங்களை - நிர்வாகம்
செய்திடல் வேண்டும் செகத்தில் அதுவேநாம்
உய்யும் வழியாம் உணர். - 510

ஆண்டு முழுதுமாய் ஆலயங்கள் தன்னிலே
மீண்டும் விழாக்கள் மிகையாக்கி – ஆண்டவனை
வந்திக்க வேண்டுமென வாகாகச் செய்திடுவார்
முந்திப் பணமுழைக்கத் தான். - 511

கட்டணங்கள் தானெல்லாம் காசினி தன்னிலே
எட்டும் நிலையில் இருக்கணும் - எட்டாமல்
உச்சத்தில் சென்றால் உலகினில் ஆலயத்தை
நச்சிட மாட்டார் நனி. - 512

ஆலயங்கள் எல்லாம் அறப்பணி மன்றமாய்
ஞாலத்தில் மாறணும் நன்றினிக் - கோலத்தை
மாற்றி அறப்பணி மண்ணுலகில் செய்யணும்
ஏற்றமுறும் எங்கள் மதம். - 513

வானளாவக் கட்டடங்கள் வண்ணமாய் ஆக்குதலால்
தானதர்மம் ஓங்காது தாரணியில் - ஞானமுடன்
நல்லறம் செய்திட நானிலம் தன்னிலே
நல்லபடி ஓங்கிடும் நாடு. - 514

அந்தணர் எல்லாம் அறக்கருத்து தன்னையே
பற்றுடன் செப்பணும் பாரினில் - குற்றங்கள்
அற்றுமே போயிட ஆற்றணும் நற்பணி
இற்றரை ஓங்கும் இனி. - 515

## நல்லவை நவில்வேன் நான்

அன்னையைத் தந்தையை ஆசானை ஏத்திநிதம்
நன்றே தொழுதிட நானிலத்தில் - என்னாளும்
இன்பமே பெற்றிட இன்னல் தவிர்த்திட
நன்றிங்கு வாழலாம் நம்பு. - 516

கற்றுத் தெளிந்துமே கற்றாங் கொழுகிடின்
இற்றரை தன்னில் இனிதாகப் - பற்றுடன்
நற்பணி செய்துமே நன்மைகள் பெற்றுயர்ந்து
பொற்புடன் வாழ்வினைப் போற்று - 517

மற்றவரை வீழ்த்தி மனமகிழ்வு கொள்ளாமல்
சுற்றத்தை ஏத்திச் சுகமாக - இற்றரையில்
பெற்றவர் தம்மையும் பேணியே காத்திடல்
நற்றவம் என்றுநீ நம்பு - 518

செய்யும் தொழிலையே தெய்வமாய் எண்ணினால்
உய்யும் வழிகள் உயருமே – பொய்யைப்
புவியினிற் பேசினால் புண்ணியம் போகும்
தவிப்பும் தொடருமே தான் - 519

அற்றவர் தம்மையும் ஆதரித்து ஏத்தினால்
இற்றரை தன்னிலே இன்பத்தைப் - பெற்றுநீர்
நல்வாழ்வு வாழலாம் நானிலம் தன்னிலே
பல்லோரும் போற்றும் படி - 520

மதுபோதை தானுன்னை மண்ணுலகில் வீழ்த்தும்
அதிதுயர் தந்தே அழிக்கும் - மதிகெட்டும்
இன்பம் இழக்க இடர்களைப் பெற்றுநீ
என்றும் பெறுவாய் இழிவு. - 521

பஞ்சமா பாதகங்கள் பாரினிற் செய்யாமல்
அஞ்சி இறையடியில் ஆழ்ந்துமே – வஞ்சமின்றி
எல்லோர்க்கும் நல்லதை இன்முகமாய் செய்திடப்
பல்லாண்டு வாழலாம் பாடு. - 522

பொய்யுரை சொல்லாமல் பொல்லாங் குரையாமல்
உய்யும் வழிகள் உணர்ந்துமே – செய்யும்
நலப்பணி தன்னாலே நன்மைகள் பெற்றும்
இலங்குவீர் இம்மண்ணில் தான். - 523

மூத்தோர் தமையே முறையாகப் பேணினால்
ஏத்தியே வைப்பருமை இவ்வுலகில் - காத்திரமாய்
நன்மைகள் பெற்றே நனியின்பம் கண்டுநீர்
என்றுமே வாழலாம் இங்கு. - 524

தாய்நாடு தன்னைநீ தாயெனப் பேணினால்
ஆய்ந்துயரும் உன்றன் அறிவாமே – தேய்ந்தே
இழிசெயல் எல்லாம் இழிந்தழிந்து போகும்
பழியும் விலகுமே பார் - 525

பொல்லா வினையெல்லாம் போயகலும் புண்ணியம்
எல்லாம் கொழிக்கும் இயல்பாக – நல்லார்
தொடர்பினைப் பேணிநீ தொல்லைகள் நீக்கத்
திடமாய் உயர்வாய் தெரி. - 526

அன்புடன் மற்றோரை ஆதரித்து வந்தாலே
இன்பமாய் வாழலாம் என்னாளும் - நன்றே
தருமச் செயல்கள் தரணியிற் செய்யப்
பெரும்பே றடையலாம் பேசு. - 527

குற்றச் செயல்கள் குவலயத்திற் செய்யாமல்
கற்றுளோர் தம்முடன் காமுற்றுப் - பற்றுடன்
இப்புவி தன்னிலே இன்செயல்கள் செய்திடத்
தப்பின்றி வாழலாம் தான். - 528

நல்லாரைச் சேர்ந்தால் நலமோங்கும் நல்லுலகில்
அல்லாரைச் சேர்ந்தால் அழிவாமே – நல்லார்
தொடர்பினை நீயும் தொடர்ந்தே இருந்தால்
இடர்கள் விலகும் இனி. - 529

எடுத்த கருமங்கள் எண்ணித் துணிவாய்
அடுத்து முடித்திடும் ஆற்றல் - தொடுத்துமே
பெற்றிட்டால் நல்ல பெரும்புகழ் உண்டாகும்
இற்றரை ஏத்தும் இனிது. - 530

ஆலயங்கள் சென்றே அடியருடன் கூடிநீ
சீலமிகும் வாழ்வும் செழிக்கவே – ஞாலத்தில்
வாழ்நாள் முழுதும் வணங்கி யெழுந்திட
வீழ்ச்சி வராது விளம்பு. - 531

நேர்மை நிதானம் நிறைய இருந்தாலே
சீர்மை பெருகும் சிறப்பாக – பார்தனில்
யாரும் இகழ்ந்திடார் நன்மை பெருகுமே
சேரும் மகிழ்வெனச் செப்பு. - 532

சொல்பேச்சுக் கேளாமல் சுற்றித் திரிந்தாக்கால்
அல்லாடிப் போவாய் அகிலத்தில் - பொல்லாத
தீங்குகள் சேர்ந்துன்னைத் தீய்க்கும் உலகினில்
ஏங்குவாய் நீயும் இருந்து - 533

ஆன்றோர் வழங்கும் அறிவுரை தன்னையே
சான்றாகக் கொண்டு சகத்தினில் - ஊன்றி
உணர்ந்து செயற்பட உத்தமர் எல்லாம்
இணங்கி வருவர் இனிது. - 534

இருந்திடும் நாள்களில் எல்லோரும் வாழ
உருகியே மண்ணில் உழைத்தால் - வருமுயர்
துன்பங்கள் எல்லாம் தொலைந்தே யகன்றிடும்
இன்பம் பெருகுமே ஈங்கு. - 535

மற்றுயிரைக் கொல்லாமல் மாமிசத்தை உண்ணாமல்
இற்றரையில் வாழ்தல் இனிதாமே – வற்றாத
அன்புடன் மற்றுயிரை ஆதரித்துக் காத்திட
நன்மைகள் ஓங்கும் நனி - 536

எல்லோரும் இப்புவியில் இன்பமாய் வாழ்ந்திட
நல்வழி காட்டணும் நாமிங்கே – பொல்லாத
தீங்குகள் செய்யாமல் தெய்வத்தின் தாள்பணிந்து
ஓங்குவாய் நீயும் உணர் - 537

கற்றோர்கள் உன்மேலே காமுறும் வண்ணமாய்
நற்பணி செய்திடு நாளுமே – வெற்றிகள்
தேடியே வந்திடும் தெவ்வரும் உன்னோடு
கூடி மகிழ்வர் குறி. - 538

கருத்துகள் சொல்லிடக் கற்றவன் அல்ல
விருப்புடன் நானும் விளம்ப – திருத்தமாய்
ஏற்றிட்டு நீரும் இருப்பீரே யாமாகில்
போற்றிப் புகழும் புவி. - 539

என்கவி சொல்லும் இனிய கருத்துகளை
நன்றுமே இங்குளோர் நாடியே – நின்றிங்கே
ஏற்று மகிழ்ந்திட இப்புவி தன்னிலே
வேற்றுமை நீங்கும் விளம்பு. - 540

## ஔவையாரின் அருஞ்சுவைப் பாடல்கள்.

மண்ணுலகில் வாழ்கின்ற மாந்தர்க்கு நல்லுரைகள்
பெண்புலவர் ஆயிருந்து பேசினாரே – எண்ணியதை
நாங்கள் புரிந்திட நன்மைகள் ஓங்கிடும்
தேங்கிடும் இன்பம் தெளி - 541

நன்றி யறிதலை நாசூக்காய் கூறியவர்
நின்று மொழிந்த நிறைமொழிகள் - என்னாளும்
எங்களின் வாழ்வினை ஏத்தியே வைத்திடும்
சங்கடம் வாராது சாற்று - 542

ஆத்திசூடி நல்வழி ஆனநல்ல மூதுரை
காத்திரமாய் தந்தாரே காசினியில் - ஏத்திநிதம்
போற்றிப் படிக்கப் புகழும் பெருகிடும்
ஏற்றியே வைப்போம் இனி. - 543

அன்னை பிதாவை அகிலத்திற் தெய்வமென
அன்றே யுரைத்தார் அறநெறி – என்றும்
அவருரை கேட்டிட ஆனந்தம் ஓங்கும்
கவலையும் நீங்குமே காண். - 544

இல்லற வாழ்வின் இனிமைகள் தன்னையே
நல்விதம் ஆகவே நன்றுரைத்தார் - எல்லோரும்
இன்பமாய் வாழ்ந்திட எண்ணியவர் இங்குமே
சொன்னார் வழிகளெனச் சொல். - 545

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி யிருக்கலாம் - இத்தரையில்
ஒவ்வாத் துணையோடும் ஒன்றாகி வாழ்தலும்
இவ்வுலகு தன்னில் இழிவு - 546

சொன்னாரே அன்றவர் சுந்தரத் தாய்மொழியில்
நன்குமே நாமதை நாடியேற்றால் என்னாளும்
இன்பமாய் வாழலாம் இப்புவியில் என்றதனை
நன்குமே ஏத்துவோம் நாம். - 547

நல்லார் இருந்திட நாட்டில் மழைபொழியும்
அல்லார் இருந்தால் அழிவாமே – நல்லுலகில்
நல்வழி தன்னில் நவின்றார் அவருரையை
எல்லோரும் ஏற்றால் இனிது. - 548

கம்பருடன் மோதிக் கன்னித் தமிழ்வளர்த்து
உம்பர் மகிழ உரைதந்தார் - இம்மண்ணில்
நன்றி மறத்தலும் நல்லோரைக் காய்தலும்
நன்றன்றே என்றவர் நம்பு. - 549

தனிப்பாடல் பற்பல தானெழுதித் தள்ளி
இனித்திடத் தந்தாரே இங்கு – நனிசுவை
தந்திடும் பாடல்கள் தாரணியிற் தானவர்
முந்தியே தந்தார் முனைந்து - 550

கந்தக் கடவுளிடம் கன்னித் தமிழுரைத்து
வந்தித் திருந்து வரம்பெற்றுச் - சந்ததம்
மண்ணிற் பற்பல மாகவி தந்தாரே
எண்ணிப் பணிவோம் இனிது. - 551

பாலர்கள் எல்லோரும் பாங்குடன் ஓதிட
ஞாலத்தில் தந்தாரே நல்லுரைகள் - வேலவன்
சுட்டபழம் தந்து சுவைத்திடச் சொல்லவே
இட்டமுடன் உண்டார் இனிது. - 552

அருஞ்சுவை நெல்லிக்காய் ஆசையாய் பெற்றார்
அருளும் ஔவைப் பிராட்டி - இருந்துநல்ல
நற்சுவைப் பாக்களை நாட்டினிற் தந்தாரே
இற்றரை போற்ற இனிது. - 553

அருந்தமிழ் தன்னில் ஔவையார் தந்த
பெருஞ்சுவைப் பாடலைப் பேசி - இருந்திங்கு
நல்வாழ்வு வாழலாம் நானிலம் போற்றிட
அல்லல் அகலும் அறி. - 554

நந்தமிழ் தன்னிலே நாளாந்தம் தோன்றியே
சந்தமுடன் பாக்கள் தருவோரில் - முந்தியே
தோன்றும் ஔவையின் சுந்தரப் பாக்களை
ஊன்றிப் படித்தால் உயர்வு. - 555

## ஊழ்வினை நீங்க உயர்வு.

வாழ்வினில் வந்தெமை வாட்டும் துயர்களில்
ஆழ்ந்துள்ள அல்லல் அகற்றிடச் - சூழ்ந்துள்ள
ஏழ்மை நிலையும் எமைவிட் டகலுமே
ஊழ்வினை நீங்க உயர்வு. - 556

நல்லுலகு தன்னிலே நாமொன்றாய் வாழ்ந்திட
அல்லல் அகலும் அறிவாயே – அல்லலினால்
தாழ்வும் வராமலே தாங்கிட வேண்டுமெம்
ஊழ்வினை நீங்க உயர்வு. - 557

வஞ்சகம் சூதுடன் வாட்டும் பொறாமையும்
விஞ்சியே போனால் விபரீதம் - நெஞ்சினில்
காழ்ப்புணர்ச்சி கொள்வோரும் காணாமற் போகவே
ஊழ்வினை நீங்க உயர்வு - 558

முற்பிறவி தன்னில் முறைதவறிச் செய்திட்ட
குற்றங்கள் எல்லாமும் கூடியே - இற்றரையில்
வாழ்ந்திடும் போதினில் வந்தே வருத்திடும்
ஊழ்வினை நீங்க உயர்வு. - 559

மண்ணினில் வாழும் மகத்தான வாழ்வினை
எண்ணியே பார்த்திட ஏற்றமே – புண்பட்டு
வீழ்ந்திடும் போதெலாம் வேண்டித் தொழுதிட
ஊழ்வினை நீங்க உயர்வு. - 560

செய்வினை சூனியம் செய்ததாய்க் கூறியே
பொய்யுரை சொல்லும் புரோகிதரை – மெய்யாகப்
பாழ்படச் செய்துமே பாதகத்தை நீக்கிட
ஊழ்வினை நீங்க உயர்வு. - 561

சங்கடங்கள் வந்தாலும் சாய்ந்துமே போகாது
தங்களின் வாழ்வைத் தரமாக்கி – எங்ஙனும்
ஊழ்வினை தானென உள்ளி யிருந்தாலும்
ஊழ்வினை நீங்க உயர்வு. - 562

மற்றவர் நாளும் மகிழ்வாக வாழ்தலை
இற்றரை தன்னில் இனிதாகப் - பற்றாது
சூழ்ச்சிகள் செய்தாலும் சுந்தர வாழ்வினில்
ஊழ்வினை நீங்க உயர்வு - 563

தாழ்வும் உயர்வும் தரணியில் உண்டாமே
வீழ்ந்தால் எழுதல் வியப்பன்று - வாழ்வினில்
ஏழ்மை தொடரினும் ஈகை புரிந்திட
ஊழ்வினை நீங்க உயர்வு. - 564

நாளுடன் கோள்கள் நமையென்ன செய்யுமே
பாழும் உடலும் பதங்கெடுமே –நாளுமே
கீழ்மை அகற்றிடக் கீர்த்தியும் பெற்றிட
ஊழ்வினை நீங்க உயர்வு. - 565

## நன்றென நீயும் நவில்.

பெற்றோரைப் பேணலும் பேரறிஞர் தம்மையே
பற்றுடன் பின்பற்றிப் போதலும் - இற்றரையில்
இன்னலை நீக்கிடும் இன்பமும் தந்திடும்
நன்றென நீயும் நவில் - 566

கற்றே உயர்தலும் கற்றாங் கொழுகலும்
பற்றி இறையைப் பணிதலும் - வற்றாத
அன்பைப் பொழிந்தே அயலாரைப் போற்றலும்
நன்றென நீயும் நவில். - 567

மற்றுயிரைக் கொல்லாமல் மாகுற்றம் செய்யாமல்
நற்றவம் செய்திந்த நானிலத்தில் - செற்றவர்மேல்
அன்பினைக் காட்டியே யாதரித்து வாழ்தலும்
நன்றென நீயும் நவில். - 568

கடமை தனிலே கரிசனையும் காட்டி
மடமை அகற்றியே மண்ணில் - உடனுடன்
நன்றல்ல தெல்லாமும் நாடி யகற்றிடல்
நன்றென நீயும் நவில். - 569

வஞ்சகம் செய்திடல் வார்த்தையால் கொல்லுதல்
தஞ்சமென வந்தாரைத் தாங்காமல் - நெஞ்சினில்
என்னாளும் நஞ்சுடன் இங்கிருந்து வாழாமை
நன்றென நீயும் நவில். - 570

ஆண்டவன் தன்னை அடிபணிந்தே என்னாளும்
மாண்புடன் வாழ்தல் மரபாகும் - தீண்டியே
இன்னல் தராமலே இப்புவியில் வாழ்தலும்
நன்றென நீயும் நவில். - 571

பொய்யினைப் பேசியே பொல்லாங்கு செய்யாமல்
உய்யும் வழிகள் உணர்ந்துமே – மெய்யாக
அன்பைப் பொழிந்துமே ஆதரவு காட்டிடல்
நன்றென நீயும் நவில். - 572

தற்பெருமை பேசாமல் தாரணியில் என்னாளும்
பற்றுடன் வாழ்ந்து பரவசமாய் - முற்றாக
இன்னலை நீக்கியே இன்பமாய் வாழ்தலே
நன்றென நீயும் நவில். - 573

கணக்கைச் சரியாகக் காட்டியே நின்று
பிணக்கும் வராமலே பேணி - இணக்கமாய்
என்றும் இருத்தலும் இப்புவி தன்னிலே
நன்றென நீயும் நவில். - 574

அடுத்தவன் ஆற்றலை அன்புடன் போற்றி
அடுக்காய் அவரை அணைத்து – தொடுத்துமே
இன்பம் கொடுத்துடன் ஏற்றிடல் இப்புவியில்
நன்றென நீயும் நவில். - 575

ஒற்றுமை பேணி உலகினில் வாழ்தலும்
மற்றவர் மாண்பை மதித்தலும் - கற்றவர்
தன்னுரை கேட்டலும் தாரணி தன்னிலே
நன்றென நீயும் நவில். - 576

சத்தியம் தன்னைத் தவறாது காப்பாற்றி
நித்தம் இறையடி நின்றுமே - இத்தரையில்
அன்பாய்ப் பிறரை அரவணைத் தேத்தலும்
நன்றென நீயும் நவில். - 577

கன்னியர் தங்களின் கற்பினைக் காத்தலும்
மன்னுயிர் காத்து மகிழ்தலும் - என்றுமே
நின்றிடர் நீக்கி நெடுநாளாய் வாழ்தலும்
நன்றென நீயும் நவில். - 578

தப்புகள் ஏதும் தரணியிற் செய்யாமல்
ஒப்புரவு காட்டி ஒழுகலும் - எப்போதும்
குன்றாப் புகழைக் குவித்தலும் வாழ்வினில்
நன்றென நீயும் நவில் - 579

ஓதிடும் பண்பை ஒழியா திருத்தலும்
மாதினை என்றும் மதித்தலும் - மேதினியில்
இன்னல் தவிர்த்தே இருத்தலும் வாழ்வினில்
நன்றென நீயும் நவில். - 580

நந்தமிழர் பண்பாட்டை நானிலத்திற் காத்துமே
செந்தமிழ் தன்னின் சிறப்பினையும் - முந்தியே
நின்றிங்கு காத்தலும் நேர்மையைப் பேணலும்
நன்றென நீயும் நவில் - 581

பதுக்கியே விற்காமல் பாதகம் செய்து
புதுப்புதுத் தீங்கைப் புரிந்தே – எதனிலும்
இன்னல் தராமலே இப்புவியில் வாழ்தலும்
நன்றென நீயும் நவில் - 582

துன்பங்கள் எல்லாம் தொலைந்தே அகன்றிங்கும்
அன்புடன் மக்களும் ஆங்கினிதாய் - என்றென்றும்
இன்னாட்டில் எட்டிசையும் இன்பமே பொங்குதல்
நன்றென நீயும் நவில் - 583

சாதிமத பேதங்கள் சாய்ந்தழிந்து போயிங்கு
நீதிநெறி என்னாளும் நின்றோங்கி – மேதினியில்
இன்னாளில் எல்லோரும் இன்பமாய் வாழ்தலே
நன்றென நீயும் நவில் - 584

நல்லவர்கள் மேலோங்கி நாட்டினில் துன்பங்கள்
இல்லாம லெல்லோரும் இன்பமுடன் - வல்லவராய்
என்னாளும் இன்றிங்கே ஏதமின்றி வாழ்தலே
நன்றென நீயும் நவில் - 585

இன்பம் வருகையில் என்றும் உடனிருத்தல்
நன்றாய் இருப்பினும் நானிலத்தில் - என்றுமே
துன்பம் வருங்காலை தோன்றாத் துணையாதல்
நன்றென நீயும் நவில் - 586

மதுபோதை இல்லாமல் மாமிசம் நீக்கி
எதுவந்த போதிலும் ஏற்றே - இதுவரை
நின்று வருத்திய நீண்ட துயரகற்றல்
நன்றென நீயும் நவில் - 587

எத்தேசம் சென்றாலும் எங்களின் பண்பாட்டை
சொத்தாக எண்ணிச் சுடர்விடவே - இத்தரையில்
என்னாளும் காத்தே இருந்திடும் பண்புதான்
நன்றென நீயும் நவில் - 588

தாய்மொழியாம் எங்கள் தமிழ்மொழி தன்னையே
சேய்மொழிகள் சேர்ந்து சிதைக்காமல் - ஆய்ந்தறிந்து
என்றும் வளர்த்திட எண்ணமும் கொள்வதே
நன்றென நீயும் நவில் - 589

அற்றவர் தம்மையும் ஆதரித்து வாழ்தலும்
செற்றவரை அன்புடன் சேர்த்தலும் - இற்றரையில்
என்றும் இருந்துமே இன்பத்தைப் பெற்றிடலும்
நன்றென நீயும் நவில் - 590

## நல்லதோர் நண்பனென நம்பு.

இடுக்கண் களைதலும் இல்லாத வேளை
கொடுத்திடும் பண்பையும் கொண்டு – தடுத்துமே
அல்லன செய்யாமல் ஆட்கொளலும் இப்புவியில்
நல்லதோர் நண்பனென நம்பு. - 591

உடுக்கை இழக்க உதவும் கரமாய்
எடுத்தே உதவி இருப்பான் - கொடுத்துதவி
எல்லோரும் வாழ்ந்திட எண்ணிடும் நண்பன்தான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 592

இல்லாமை என்னும் இடுக்கண் தொடரினும்
வல்ல துடுப்பென வந்துமே – நல்லுலகில்
நல்லன செய்திட நாளும் துணையாவான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 593

உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி
மண்ணில் இருந்து மனம்வருந்தக் - கண்ணீரை
மெல்லத் துடைத்துமே மேலாய் உதவுவான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 594

நல்லன எல்லாம் நமக்கே எடுத்துரைத்து
தொல்லைகள் நீக்கித் துயரகற்றி – எல்லோரும்
நல்லபடி வாழ்ந்திட நாளும் முனைந்திடுவான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 595

முகம்பார்த்து முன்னுரைத்து மூச்சாய் உழைத்து
அகம்நிறையச் செய்வான் அவனும் - இகத்தினில்
நல்வழிகள் காட்டி நலம்பெருகச் செய்திடுவான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 596

அறநெறி தன்னில் அகிலம் செழிக்க
மறநெறி போக்கி மகிழச் - சிறப்பான
நல்லுரை தந்துமே நாளும் உழைப்பவனே
நல்லதோர் நண்பனென நம்பு. - 597

என்றன் துயரிலும் இன்புறும் வேளையிலும்
என்னுடன் ஒன்றாய் இருப்பவன் - தன்னுடைய
நல்லினிய வார்த்தையால் நாட்டில் ஒளிர்பவனே
நல்லதோர் நண்பனென நம்பு. - 598

வீண்வார்த்தை பேசாமல் வீண்பொழுது போக்காமல்
வேண்டுவன எல்லாம் விரைந்துதவி – மாண்புறும்
நல்லபல தேடலால் நாட்டில் உயர்த்துவான்
நல்லதோர் நண்பனென நம்பு. - 599

கற்றோர் சபையிற் கலக்கமுறும் வேளையில்
தற்றுணிபாய் வந்துடன் தான்காப்பான் - இற்றரையில்
கல்விச் சிறப்பினைக் காட்டியே நிற்பவனே
நல்லதோர் நண்பனென நம்பு. - 600

## செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு.

மண்ணுலகில் நாங்கள் மகிழ்வோடு வாழ்ந்திட
எண்ணமும் கொண்டே இருந்திடின் - திண்ணமாய்
கல்வியைக் கற்றுக் களிப்புடன் இப்போது
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 601

உணவும் உடையும் உறையுளும் வேண்டின்
பணத்தினைப் பெற்றாலே பாங்காய் - இணங்கியே
நல்லபடி சேருமிந்த நானிலத்தில் என்பதால்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 602

நோய்நொடிகள் வந்திடும் நொந்துமனம் வாடிடும்
சேய்களும் எம்மைச் சிதைக்குமே – வாய்விட்டுச்
சொல்லியே எம்மைத் துரத்தி விரட்டமுன்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 603

காசுபணம் உண்டானால் காசினியில் மேன்மையே
மாசுகளும் வாராது மன்றினில் - தேசுடனே
நல்லபடி இம்மண்ணில் நாங்களும் வாழ்ந்திடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 604

மாண்புடனே நாமிந்த மண்ணுலகில் வாழ்ந்துமே
கேண்மையும் ஓங்கிக் கிளர்ந்திட – ஆண்டெலாம்
நல்வழி சென்று நனிசிறப்புப் பெற்றிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 605

மன்றினில் எம்மை மதித்திட வேண்டுமெனில்
குன்றாமற் செல்வமும் கூடணும் - என்றுமே
எல்லோரும் ஒற்றுமையாய் இப்புவி தன்னிலே
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 606

ஆலயம் சென்றே அரனடி யேத்திட
ஞாலத்தில் நல்லபடி நாமுயரக் - காலமெலாம்
நில்லாமல் நாமுழைத்து நெஞ்சம் மகிழ்வுறச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 607

வேண்டும் பொருட்களை வேகமாய்ப் பெற்றிட
வேண்டும் செல்வம் வியனுலகில் - மீண்டெழுந்து
அல்லலை நீக்கியே ஆனந்தம் ஓங்கிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 608

நாடெல்லாம் சுற்றி நலம்பல பெற்றுவந்து
வீடெல்லாம் இந்த வியனுலகில் - மாடெல்லாம்
நல்லபடி பெற்றுமே நானிலத்தில் வாழ்ந்திடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 609

இரப்பவர் தங்களுக்கும் இன்பமாய் தந்து
தரமான வாழ்வினைத் தாங்கி – உரமான
நல்வாழ்வு வாழ்ந்திட நல்லபலன் பெற்றிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 610

பக்கத்தில் வாழ்பவர்கள் பார்த்து மகிழ்ந்திட
அக்கறை கொண்டுமே ஆழ்ந்துழைத்து - இக்கரையில்
வல்லவராய் வாழ்ந்து வளமெலாம் பெற்றிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 611

திரைகடல் ஓடித் திரவியத்தைத் தேடிக்
கரைகண்டு வாழ்வில் களிப்பாய் - தரையினில்
எல்லோரும் வாழ்ந்திட இன்பமும் பெற்றிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 612

ஆழ்கடல் சென்றே அருஞ்செல்வம் தேடினால்
வாழ்வில் பெறலாம் வளமெலாம் - தாழ்வின்றி
நல்லுலகில் நாமும் நலமுடன் வாழ்ந்திடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 613

சொந்தங்கள் நம்மையும் சூழ்ந்தே இருந்திடப்
பந்தங்கள் எல்லோரும் பாசமாய் - வந்துநின்று
நல்வாழ்த்துக் கூறி நலமுடன் வாழ்ந்திடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 614

இறந்திட்ட பின்னரும் எங்கள் உடலைச்
சிறப்பாய்த் தகனமும் செய்ய – முறையுடன்
நல்லபடி நாமந்த நம்பனடி சென்றிடச்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 615

இல்லானை இப்புவியில் இல்லாளும் வேண்டாளே
நல்ல ஒளவை நமக்குரைத்தாள் - தொல்லுலகில்
எல்லோரும் எம்மையும் ஏற்றிட வேண்டினால்
செல்வத்தைச் சேர்த்தல் சிறப்பு - 616

## குன்றாப் புகழைக் குவி.

நல்லுலகோர் உன்னையும் நாடித் தொழுதிடச்
செல்வமும் சேர்ந்து செழிப்புற – நல்லபடி
என்றும் பிறருனை ஏத்திடும் வண்ணமாய்
குன்றாப் புகழைக் குவி. - 617

அற்றவர்க்கு நல்லுதவி ஆண்டெலாம் செய்துமே
செற்றவர் தம்மையும் சேர்த்தணைத்து - இற்றரையில்
என்றும் உனக்காய் இருப்பொன்று வந்திடக்
குன்றாப் புகழைக் குவி - 618

கற்றுத் தெளிந்திந்தக் காசினி தன்னிலே
பெற்றிடல் வேண்டும்நீ பேரறிவு – மற்றவரும்
உன்னடி போற்றி உவப்பாய் இருந்திடக்
குன்றாப் புகழைக் குவி - 619

சாதனை இந்தச் சகத்தினில் செய்துநீ
ஏதங்கள் செய்யா திருந்திடப் - பாதகத்தை
என்றும் தவிர்த்துநீ இப்புவி தன்னிலே
குன்றாப் புகழைக் குவி - 620

உலகுளோர் உன்னை உயர்த்தியே பார்க்க
நலமுடன் வாழணும் நாளும் - விலகியே
சென்றவர் எல்லோரும் சேர்ந்துமே வந்திடக்
குன்றாப் புகழைக் குவி - 621

உன்றன் வளர்ச்சியை ஊராரும் போற்றிட
நன்றே வளரணும் நானிலத்தில் - என்றுமே
உன்னடி போற்றி உலகுளோர் வாழ்ந்திடக்
குன்றாப் புகழைக் குவி - 622

புதிது புதிதாகப் பூமியில் நீயும்
அதிக விடயங்கள் ஆய்ந்தே – எதிலுமே
உன்பெயர் நாட்டி உலகுளோர் போற்றிடக்
குன்றாப் புகழைக் குவி - 623

கலைகளில் ஒன்றையேனும் கற்றிடு நீயும்
அலைகடல் சூழுலகை ஆண்டு – நிலையினில்
என்றுமே நீயும் இனிதுயர்ந்து சென்றிடக்
குன்றாப் புகழைக் குவி - 624

விளையாட்டை ஒன்று விளையாடி வென்று
களைகள் அகற்றிக் களித்து – விளைவினை
என்றும் உயர்த்தியே இப்புவி தன்னில்நீ
குன்றாப் புகழைக் குவி - 625

வீர விளையாட்டால் மேதினி தன்னிலே
ஆரமும் பெற்றிடுவாய் ஆனந்தம் - சேரவே
உன்றன் பெயரும் உலகில் நிலைபெறக்
குன்றாப் புகழைக் குவி - 626

தான தருமங்கள் தாரணியிற் செய்துமே
வானம் புகழ்ந்துனை வாழ்த்திடப் - போனவர்கள்
நின்றுன் பெயரினை நீள்புவியில் ஏத்திடக்
குன்றாப் புகழைக் குவி - 627

ஆலயம் சென்றே அறப்பணி ஆற்றிடு
சாலவும் உன்புகழ் தானோங்கும் - காலமெலாம்
உன்றன் புகழும் உலகினில் ஓங்கிடக்
குன்றாப் புகழைக் குவி - 628

இரக்க குணத்தினால் இப்புவி தன்னில்
முரண்டு பிடியாமல் முன்னே – வரங்களும்
உன்செயல் தன்னால் உனக்குக் கிடைத்திடக்
குன்றாப் புகழைக் குவி - 629

நின்று நிதானமாய் நீயிங்கு சிந்தித்து
என்றும் பணிகள் இயற்றியே – நன்றிங்கு
என்றுமே உன்புகழ் இப்புவியில் ஓங்கிடக்
குன்றாப் புகழைக் குவி - 630

## சந்திரனும் சூரியனும்

அம்புலி வானில் அழகுடன் தோன்றியே
வெம்மையை நீக்கி விருப்புடன் - அம்புவியில்
நல்லொளி வீசி நகர்ந்திடும் வேளையில்
பல்லோரும் போற்றுவர் பார் - 631

வட்ட வடிவாக வானில் உயர்ந்துமே
எட்டவும் நின்றே எழில்காட்டி - இட்டமுடன்
தண்ணொளி தந்துமே தாரணி மக்களின்
எண்ணத்தில் ஓங்கும் இனிது. - 632

வானில் வலமாய் வருகையில் தேய்கிறாய்
ஏனிங்கு நீயும் இருக்கிறாய் - தேனிலவைக்
கொண்டாடும் தம்பதியர் கூனிக் குறுகுகின்றார்
திண்டாடிப் போகிறார் தீய்ந்து - 633

இருளைக் களைந்தே இனிய ஒளியை
தருணத்தில் தந்திடுவாய் தானே – பெருமையாய்
ஆண்டவன் சென்னியில் ஆண்டாண்டு காலமாய்க்
காண்போமே நாமும் களித்து. - 634

பாட்டியுடன் நாமமர்ந்து பண்பாய்க் கதைகளைக்
கேட்டு மகிழ்வோம் கிளர்ந்துமே – மீட்டிடும்
எண்ணங்கள் கண்டுநாம் இப்புவி தன்னிலே
வண்ணமாய் வாழலாம் வா. - 635

ஒளியினைத் தந்தே உலகினைக் காட்டித்
தெளிவுறச் செய்திடும் தெய்வம் - பளிங்காய்
அடுத்ததைக் காட்டும் அகத்தில் இளமை
கொடுத்திடும் சந்திரனைக் கூறு. - 636

முழுதாய் இருந்துமே முற்றாகத் தேய்வாய்
எழுதும் கவிகளுக் கேற்ப – பழுதிலாத்
தோற்றமும் காட்டுவாய் சுந்தரமாய் வந்துமே
ஏற்றம் பெறுவாய் இனி. - 637

அப்பன் கணபதியின் ஆட்டத்தைக் கண்டுநீ
அப்படி இன்பம் அடைந்தாய் - இப்படித்
தேய்ந்திடச் செய்திட்டார் தேவையா இன்றுனக்கு
ஆய்ந்துமே பார்த்துநீ ஆடு. - 638

சிவனாரின் உச்சியிலே சேர்ந்தே இருந்து
தவமதும் செய்கின்றாய் தானோ – உவந்துமே
எங்களை ஆண்டிட எப்போதும் நீவருவாய்
திங்களென நல்லொளியைத் தந்து - 639

பாட்டி வடைசுடும் பாங்கினில் ஓடுகிறாய்
காட்டிச் சிறார்க்குக் களிப்புடன் - ஊட்டிக்
களித்திட உன்னுருவம் காலமும் தானுதவும்
ஒளிதந்து காத்திட ஓடு. - 640

காலை எழுந்து கதிரொளி வீசியே
மாலை மறைந்திடும் மாண்புடைய – கோலக்
கதிரவன் தன்னையிக் காசினியில் உள்ளோர்
அதிகம் விரும்புவர் அறி. - 641

கோள்கள் புடைசூழக் கூடிச் சுழல்கிறாய்
நாள்களும் மாற நகர்கிறாய் - தாள்பணிந்து
வந்திப்போர் தங்களின் வாழ்விற் குதவுவாய்
சிந்தித்து நீயும் சிறந்து. - 642

உயிர்கள் தினம்வாழ ஊக்கம் தருவாய்
பயிர்கள் வளர்ந்திடும் பாங்காய் - உயிர்தந்து
காக்கும் கதிரவன் காசினியில் நாளுமே
பூக்கும் புதுவகைப் பூ. - 643

உழவுத் தொழிலுக்கு ஊக்கம் தருவாய்
நிழலின் அருமையை நீயும் - தழலாய்
இருந்து தரணியோர் இங்குணரச் செய்வாய்
குருவாய் இருப்பாயே கூறு. - 644

ஆதவன் என்றும் அருணன் எனவும்நீ
சாதனை செய்வாய் சகத்தினில் - சாதகம்
பார்க்க உதவுவாய் பாரினில் நீயுமுன்
பார்வையில் காட்டு பரிவு. - 645

சோதிடம் பார்க்கையில் சூரியன் உன்னையே
ஆதி முதல்வனாய் ஆக்குவர் - மேதினியில்
நற்பயன் கூறுவர் நல்லருள் தந்தவரை
இற்றரையில் ஏத்த இனிது. - 646

பகலில் ஒளிர்ந்திடுவாய் பக்குவம் ஆக
நகர்ந்துமே சென்றிடுவாய் நாடி - இகத்தினில்
உன்னடி யேத்தி உவந்துனைப் போற்றுவர்
உன்னருள் வேண்டி உணர் - 647

மழையும் பொழிந்திட மக்கள் மகிழ
இழையும் பரிவும் எகிற – நுழைந்துமே
நின்னருள் தந்தெமை நித்தமும் காத்திடுவாய்
உன்னருள் தருவாய் உவந்து - 648

சாதகக் கட்டத்துள் நர்த்தனம் செய்கிறாய்
சாதகம் ஆகவும் தாங்குவாய் - பாதகம்
செய்தும் இருப்பாய் செகத்துளோர் வாழ்வினை
உய்யவே செய்வாய் உவந்து. - 649

உழவர்க்கு நீயும் உதவிகள் செய்வாய்
பழகிட நல்லதாம் பண்பை – வழங்கியே
என்னாளும் நீயிருந்து இன்னல்கள் நீக்கிடுவாய்
என்றும் பணிவோம் இனி - 650

## சாலை விபத்துகள்.

காலை எழுந்து கடமைக்குச் சென்றவர்கள்
மாலை வருவது மாயமே – சாலையில்
நாளும் நடக்கின்ற நாச விபத்துகளால்
வீழும் நிலையை விளம்பு - 651

கோடுகள் பற்பல கூட்டியே காட்டினாலும்
ஏடுகள் தன்னில் இயம்பினாலும் - நாடுகளில்
நல்லொளிகள் காட்டி நலமுறச் செய்யினும்
இல்லாமற் போகலையே இன்று - 652

வேகத்தின் கட்டினை வீதிகளில் இட்டாலும்
வேகம் குறைக்கார் விரும்பியே – ஏகம்
தமதென்றும் எண்ணித் தரணியில் சென்றே
எமனுடன் சேர்வார் இறந்து - 653

அதிவேகம் கொண்டுமே ஆச்சரியம் காட்டிக்
குதித்தோடிச் செல்வார் குறித்து – மதியினால்
வீதிக் குறியீட்டை வேண்டியே கைக்கொளின்
சாதித்து நிற்கலாம் தான் - 654

தம்மெண்ணம் போலவே சாரதி ஆகிநிதம்
இம்மென்னும் முன்னே இடர்தந்து – தம்முயிரும்
தாரணியில் தானிழந்து சார்ந்துளோர் தம்மையும்
சோரவே வைக்கிறார் சூழ்ந்து. - 655

மற்றவர் தம்முயிரின் மாண்பை உணர்ந்துமே
இற்றரையில் வாழ்ந்தால் இனிதாமே – பற்றுடன்
வாகனம் தன்னையும் வாகாய் செலுத்திட
தேகம் சிறக்கும் செழித்து - 656

சாரதியின் குற்றங்கள் சான்றோடு மெய்ப்பித்தால்
சாரதிச் சான்றைத் தடுக்கணும் - தாரணியில்
மற்றோரின் வாழ்வை மதித்திடும் சாரதியை
பற்றுடன் போற்றணும் பார். - 657

சட்டங்கள் பலவும் சடுதியாய் போட்டிங்கு
திட்டங்கள் பற்பல தீட்டணும் - பட்டுணர்ந்து
நட்டங்கள் வந்துநாம் நானிலத்தில் வாடாமல்
திட்டமாய் வாழணும் சேர்ந்து. - 658

வல்லுநர் சேர்ந்து வகுத்துள்ளார் சட்டங்கள்
எல்லோரும் ஏற்றே இருந்திட – நல்லுலகில்
வீதி விபத்துகள் வீழ்ந்திடும் தன்னாலே
நீதி நிலைத்திடும் நீடு. - 659

வீதி விபத்தினால் வீழ்ந்து மடிவோரின்
ஆதி யுறவும் அலறியே – மேதினியில்
வாழ்க்கைச் செலவால் வாடி வதங்கிடும்
தாழ்ந்துமே போகிறார் தான். - 660

போரின் வடுக்களும் போயகலும் வேளையில்
பாரில் விபத்தினால் பாழுயிரை - வாரிக்
கொடுத்திடும் வாய்ப்பினைக் கூட்டும் நபரை
எடுத்தே யகற்றணும் இங்கு. - 661

போதையில் வாகனம் பூமியில் ஓட்டுதலால்
பேதையர் வாழ்வும் பிரிகிறதே – ஏதமின்றி
எம்மவர் வாகனத்தை ஏற்றமாய் ஓட்டினால்
இம்மண் மகிழும் இனி. - 662

வளைவுப் பாதையில் வாகனம் தானும்
நுழையும் பொழுதில் நுணுகி - இழைந்தே
மெதுவாய்ச் செலுத்திட மேதினி தன்னில்
மெதுவாய் விபத்தின்றிப் போம். - 663

முந்தியே செல்கையில் முன்னோக்கிப் பார்த்துமே
சிந்தித்து வாகனம் சென்றிட – நிந்தனை
என்னாளும் வாராது இப்புவி தன்னிலே
துன்பம் விலகும் தொடர்ந்து. - 664

துவளும் மனதோடு தூரப் பயணம்
அவனியில் வேண்டாம் அறிவீர் - கவனமாய்
வீதியில் செல்ல விபத்தும் குறைந்திடும்
பாதிப்பும் வாராது பார். - 665

தூக்கமும் வந்தால் தொடர்ந்து செலுத்தாமல்
தாக்கம் வராமல் தடுக்கவே - சீக்கிரமாய்
ஓய்வை எடுத்தும் உறங்கி எழுந்திடச்
சாய்வும் வராது தனி. - 666

## தொற்றா நோய்களின் தொந்தரவு.

தொற்றாத நோய்களும் தொந்தரவு தந்திடுது
வற்றிடச் செய்யுது வாழ்வினை - இற்றரையில்
தொற்றாத நோய்களின் தொந்தரவுக் காளாவோர்
பற்றற்று வாடுகிறார் பார் - 667

நீரிழிவு என்ற நெடுநாளாம் நோயினால்
பாரினில் பற்பலர்க்கும் பாதிப்பே – வாரிப்
பணத்தை இறைத்தாலும் பாழான இந்நோய்
குணமாகு தில்லையே கூறு. - 668

கொல்லாமற் கொல்லும் கொழுப்புமே தானிங்கு
நில்லாமல் நீளுது நித்தியமும் - பொல்லாத
புற்றுநோய் தானும் புகுந்து விளையாடும்
இற்றரை தன்னில் இருந்து - 669

மருத்துவ சாலைகளில் மக்களின் கூட்டம்
பெருத்துமே செல்லுதல் பேறோ – மருந்துக்காய்
காத்திடும் காலம் கடிதாய் உயர்வதால்
மூத்தோர் விடுகிறார் மூச்சு - 670

இரத்த அழுத்தம் இரக்கமின்றிக் கொல்ல
மரத்துமே போகும் மனமும் - இரந்தேனும்
நோயில்லா வாழ்வில் நுழைந்துமே நாமெல்லாம்
பாயினை நீக்கலாம் பார். - 671

சத்துள்ள உணவுகளைத் தானென்றும் உண்ணணும்
நித்தம் பொதியுணவை நீக்கணும் - இத்தரையில்
நித்தம் நிறையுணவை நேராக நாமுண்டால்
சித்தம் மகிழலாம் சேர்ந்து. - 672

உடலுழைப்பு இங்கில்லை உண்பதும் தானே
உடனுணவு என்றுமே ஆகி – விடமாகி
நோய்களைத் தந்திடும் நுண்ணுயிர்கள் ஓங்கிடப்
பாய்தனில் வீழ்வோமே பார். - 673

இலைகுழை என்ற இயற்கை உணவை
தலைமுறைக்கும் நாங்கள் தராமல் - விலையுயர்ந்த
உண்டிகள் என்றே உணவகத்தில் வாங்கியும்
உண்பதால் வந்ததிந்த ஊழ். - 674

காலையும் மாலையும் கால்கடுக்க ஓடியே
வேலைக்குச் சென்றால் வினையில்லை – சாலையில்
நாங்களும் பேரூந்தில் நாடிப் பயணிக்க
தீங்காய் வருகுதிந்தத் தேய்வு. - 675

உடற்பயிற்சி செய்து உடலை வலுவாய்
திடமாக்கி நின்றாலே தீங்கும் - உடலுக்கு
வந்திடா தென்றுநீ வாயாரச் சொல்லிடு
சந்ததம் ஓங்கலாம் சாற்று - 676

விழிப்புணர்வு பெற்றிட வித்தகர்கள் சேர்ந்து
விழிப்பாக என்றும் விளம்ப – விழிப்படைந்து
சொல்லும் வழிமுறையைச் சுந்தரமாய் பின்பற்றின்
வெல்லலாம் நோயை விளம்பு. - 677

எத்தனை ஆயிரமாய் எங்களின் செல்வமும்
இத்தரையில் நீங்குது இந்நோயால் - நித்தியமாய்
நோயகன்று நாமிங்கு நோவின்றி வாழ்ந்திட
ஆயதோர் தீர்வை அறி. - 678

மருந்தாய் உணவினை மண்ணுலகில் உண்டால்
வருத்தாதே இந்த வருத்தம் - திருவெல்லாம்
தீய்ந்தழிந்து போகமுன் தேர்ந்திடுங்கள் நல்லுணவை
ஆய்ந்தொரு தீர்வை அறி. - 679

மருத்துவர் சொல்லும் வரைமுறையில் நின்றால்
திரும்பவும் வாராது தீநோய் - பெருமையாய்
இப்புவி தன்னிலே எல்லோரும் வாழலாம்
தப்பின்றி என்றுநீ சாற்று. - 680

## அரசபணியும் அவலங்களும்.

அரச பணிக்கென ஆசையும் கொண்டால்
தரமான சேவை தரணும் - வரமென
அப்பணி தன்னை அகிலத்தில் எண்ணியே
தப்பாமற் செய்யணும் தான். - 681

பக்கத்தில் வேண்டும் பணியிடந் தானென
எக்கணமும் வேண்டல் இழிவாமே – அக்கறையாய்
வந்த பணியிடத்தை வாகாக ஏற்றிடலே
சந்ததம் வெற்றியின் சான்று. - 682

ஏற்ற தொழிலினை ஏய்க்காமல் செய்திடச்
சாற்றிடும் வெற்றி தனதாகும் - போற்றியே
அப்பணி தன்னை அழகுறச் செய்திட
இப்பார் புகழும் இனிது. - 683

மக்கள் பணியை மனதினில் கொண்டுமே
அக்கறை ஆகவே ஆற்றணும் - சிக்கல்கள்
வந்திடாமல் நாளும் வரைமுறை பேணிட
சந்ததம் வெற்றியே தான். - 684

தேவையை நாடித் தினமும் வருவோரின்
தேவையை நல்லபடி தீர்த்திடவே – ஆவலாய்
போற்றியே செல்வருன் பொன்னடி தன்னையே
ஏற்றுவர் என்றே யுணர். - 685

அதிகாரம் செய்திடல் அன்பை முறிக்கும்
மதித்தே பழகி மகிழ்வாய் - எதிலுமே
அன்பினைக் காட்டியே ஆதரித்து நின்றிட
என்றுமே வெற்றி எளிது. - 686

சட்டங்கள் சொன்னபடி தன்கடமை யாற்றிடின்
நட்டங்கள் வந்திடாது நாட்டினில் - திட்டமிட்டு
நற்செயல் செய்திடின் நன்மைகள் மேலோங்கும்
குற்றமும் வாராது கூறு. - 687

அதிகார பீடம் அமர்ந்தவர்கள் செய்யும்
அதிகாரம் தன்னில் அடங்கி – மதிப்பிழந்து
தன்கடமை ஆற்றணும் தாண்டினால் என்றுமே
நன்னடத்தை இல்லையென்பார் நம்பு. - 688

வயதில் குறைந்தோர்கள் வந்தமர்ந்து எம்மை
தயவின்றித் தாக்குவர் தானே – சுயத்தை
இழந்தேனும் நாங்கள் இருக்கணும் என்றும்
குழப்பினால் நீக்குவர் கூறு. - 689

குடும்ப நிலையின் குறைகளை நீக்க
எடுத்த பதவியை ஏற்று – வடுவரினும்
தாங்கிப் புரியணும் தன்மானம் நீங்கினும்
வாங்கும் படிக்கென வாழ்ந்து - 690

சம்பள ஏற்றத்தைத் தராமற் தள்ளியே
தம்மதி காரத்தைத் தான்காட்டி - இம்மண்ணில்
எங்களை வாட்டுவார் ஏற்கணும் நாமிங்கே
எங்கள் குடும்பத்தை ஏற்று. - 691

கண்டபடி எம்மைக் கடிதில் இடம்மாற்றித்
தண்டனை என்றுமே தான்சொல்வார் - மண்ணிலே
தங்களின் மாற்றத்தைத் தள்ளியே வைத்திட
எங்குமே செல்வார் இரந்து. - 692

தம்மொழி தாண்டித் தரமான மற்றொரு
செம்மொழி கற்றிங்கு தேறணும் - அம்மொழியை
கற்றிடா விட்டால் கடிதிற் படியேற்றம்
இற்றரை தன்னில் இரா. - 693

வினைத்திறன் காணவென வித்துவர் கூடி
வினையற்று வைப்பார் விரிவாய் - தினையளவும்
நற்பயன் வாரா நடக்குமிச் சோதனையால்
அற்றுமே போகும் அறிவு. - 694

பற்பல நன்மை பணியதில் உண்டென்று
கற்பனை பண்ணியே காசினியில் - பற்றுடன்
இப்பணி வந்தோர் இடருறும் தன்மையை
எப்படிச் சொல்வேன் இனி. - 695

சம்பளம் மட்டும் சரியாய் வருமென்று
சம்பளம் நாடியே தானேற்றால் - இம்மண்ணில்
எப்பணிக்கும் காணாதே இப்படி என்றுநீ
இப்பாரிற் காண்பாய் இனி. - 696

இடமாற்றம் வந்தால் இடரும் தொடரும்
மடமயிலே நீயும் மதிப்பாய் - திடமாய்
பணியிடம் மாறாது பார்த்திட வேண்டின்
அணியாய் தொடரும் அடி. - 697

விடுமுறை பற்பல வேண்டிப் பெறலாம்
நெடுநாள் தொடர்ந்துமே நின்று – வடுவிலா
வைத்தியச் சான்றினை வாகாகத் தந்திட
அத்தனையும் தீரும் அறி. - 698

அரசியல் வாதியின் அன்பும் கிடைத்தால்
வரமாய் அமையுமே வாழ்க்கை – தரமான
நல்லிடம் தன்னிலே நற்பணி செய்யலாம்
பல்லோரும் போற்றும் படி. - 699

இத்தனை இன்பம் இடரெலாம் தாண்டினால்
சித்தி பெறலாம் சிறந்துமே - இத்தரையில்
எல்லோரும் போற்றிடும் இன்பணி செய்திடப்
பல்லோரும் போற்றுவர் பார். - 700

## தேர்தலும் வாக்குறுதியும்.

தேர்தல் வருங்காலைத் தேடியே வந்திடுவார்
வார்த்தையால் எம்மை வசப்படுத்தித் - தேர்தலில்
வாக்கினைப் பெற்றிட வாகாய் முயலுவார்
பாக்களும் பாடுவார் பார். - 701

வானத்தை வில்லாய் வளைப்பேன் எனச்சொல்லி
மானத்தை விற்று மதிப்பிழந்து – தானங்கள்
செய்வதாய்க் காட்டிச் செகத்துளோர் தம்மையும்
பொய்யாய்ப் புகழ்வார் புரி. - 702

கட்சிகள் பற்பல காட்டியே நின்றிடுவார்
திட்டங்கள் நல்லதாய் தீட்டுவார் - கிட்டவந்து
கட்டியும் கொள்வார் கடிதினில் எம்மையும்
முட்டாளாய் ஆக்குவார் முன்பு. - 703

எல்லோர்க்கும் வேலை இருப்பதாய் சொல்லியே
கல்லார் மனதைக் கரைத்திங்கு – நல்விதமாய்
வாக்கினைப் பெற்றுமே வாகையும் சூடிடச்
சீக்கிரம் செப்புவார் சேர்ந்து - 704

நாட்டினில் பற்பல நல்லுதவித் திட்டங்கள்
காட்டுவதாய்ச் சொல்லிக் களிப்பூட்டி – ஏட்டினில்
வாக்குறுதி எல்லாம் வழங்குவார் பின்னாளில்
ஏக்கமுறச் செய்வார் இருந்து. - 705

சம்பளம் பன்மடங்கு தானுயரும் என்றுமே
நம்பிட வைப்பாரே நம்மையும் - இம்மண்ணில்
பொன்மழை பெய்யும் புவியும் செழிக்குமென
நன்றெமை ஏய்ப்பார் நனி. - 706

விளம்பரம் எல்லாம் மிகையாகச் செய்வார்
உளமும் மகிழ உரைப்பார் - தளம்பாமல்
பொய்யுரை சொல்வார் புவியுளோர் தங்கட்கு
மெய்யை மறுப்பார் மிகுத்து. - 707

அன்பளிப்பு பற்பல அள்ளியே தந்தெமை
நன்றே வளைக்க நனிமுயல்வார் - என்றும்
உடனே வருவார் உறுதுணை செய்தல்
கடனெனக் காட்டுவார் காண். - 708

ஊருக்கு நன்மை ஒழுங்காகச் செய்திடுவோம்
சேரும் புகழெனச் செப்பியே – யாருமிங்கு
தந்திடா நன்மைகள் தான்தருவோம் என்றுமே
முந்தியே சொல்வார் முனைந்து. - 709

கூட்டமாய் வந்தே குறைகளைக் கேட்பதில்
நாட்டமும் உள்ளதாய் நாடகத்தைக் - காட்டுவார்
ஓட்டமாய் ஓடி உழைப்பது போலவே
நாட்டில் நடித்திடுவார் நம்பு - 710

தேர்தலில் வெற்றி தெளிவாய்க் கிடைத்தபின்
வார்த்தை தவறுவார் வையத்தில் - தீர்வேதும்
தந்திட மாட்டார் தயவும் புரியாரே
நிந்தனை செய்வார் நினை. - 711

வாக்களித்த மக்களை வாட்டவும் செய்திடுவார்
போக்கிடம் அற்றுப் புவியினில் - ஏக்கமுடன்
வாழ்ந்திடச் செய்வார் வசதிகள் தாம்பெற்றுத்
தாழ்த்துவார் எம்மையும் தான். - 712

கட்சிகள் மாறுவார் காசுக்காய் பேசுவார்
உட்கட்சிப் பூசலினை ஊக்குவித்து – திட்டங்கள்
பற்பல தீட்டியே பாடாய்ப் படுத்துவார்
செற்றவர் தம்முடன் சேர்ந்து - 713

வாக்கினைக் கேட்டு வருபவர் தங்களின்
போக்கினை என்றும் புரிந்துமே – வாக்கினை
அள்ளிக் கொடுப்போம் அநியாயம் செய்வோரைத்
தள்ளியே வைப்போம் தனித்து. - 714

சொல்லிடும் வாக்குறுதி சொந்தமா என்றெண்ணி
நல்விதம் சிந்தித்து நாமிங்கு – நல்லபடி
எங்களின் வாக்கினை ஏற்றவர்க்குத் தந்திடணும்
சங்கடந் தீர்ந்திடும் தான். - 715

கட்சிகள் மாறும் கபோதிகள் தம்மையே
எட்டவே வைக்கணும் இங்கினி – திட்டமிட்டு
நல்லவர் தங்களை நாடியே தேர்ந்தெடுத்து
வல்லவர் ஆக்குவோம் வா. - 716

கற்றுள்ளோர் தம்மையே காசினி ஆள்வதற்காய்
வெற்றியைத் தந்தே விரைந்தனுப்பி - இற்றரையில்
இன்பமாய் நாங்கள் இருந்திடல் வேண்டுமே
குன்றாப் புகழைக் குவித்து. - 717

நாட்டு வளங்களை நாசூக்காய் தங்களது
வீட்டு நலனுக்காய் வீணாக்கி – நாட்டினை
ஏழ்மை நிலையில் இருத்திடும் பாதகரை
வீழ்த்துவோம் நாமும் விரைந்து. - 718

வாக்குத் திறத்தினால் மக்களை வீழ்த்தியே
தீக்கிரை யாக்கிடும் தீயவரை – தாக்கியே
ஓட விரட்டணும் ஒன்றாகக் கூடியே
தேடணும் நல்வாழ்வு தான் - 719

சிந்தனை செய்வோம் செயலினிற் காட்டுவோம்
நிந்தனை நீக்கி நிமிர்வோமே – சந்ததம்
எங்களின் வாழ்வினில் ஏற்றமும் வந்திடப்
பங்கமின்றி வாழ்வோமே பார். - 720

அடிதடிகள் செய்தே அவைக்குள் நுழைய
முடியும் வரைக்கும் முயல்வார் - மிடிதந்தும்
எங்களை வாட்டுவார் எப்போதும் தங்களை
பங்கமின்றி ஏத்துவார் பார். - 721

எப்பாடு பட்டேனும் எங்களின் வாக்குகளைத்
தப்பாமற் தாம்பெறத் தானுமே – எப்போதும்
செய்யாத காரியங்கள் செய்யவே எண்ணுவார்
பொய்யுரை தன்னைப் புகன்று. - 722

அடுத்தவர் தம்மேல் அடுக்காய் குறைகள்
எடுத்துமே வீசுவார் என்றும் - துடுப்பென
நின்றுமே எங்களை நீள்புவியிற் காப்பதாய்
நன்றே நடிப்பார் நனி. - 723

பெற்றுள்ள செல்வமும் பேணுவோர் செல்வமும்
அற்றிடச் செய்தேனும் ஆட்சியைப் - பெற்றிட
எண்ணிச் செயலாற்றி ஏற்றங்கள் கண்டிடப்
பண்ணுவார் பாவங்கள் பார். - 724

மண்ணுக்காய் பாடுபடும் மாந்தரைத் தேர்ந்தெடுக்க
எண்ணமும் கொண்டுநாம் இங்கினி – வண்ணமாய்
வாக்கைக் கொடுப்போம் வளங்களும் பெற்றுயர்ந்து
தாக்கம் தவிர்ப்போம் தான். - 725

போட்டிகள் போட்டுப் பொருட்கள் கொடுத்துமே
வீட்டுக்கு வீடுவந்து வேண்டுவார் - கூட்டாகக்
கேட்டு வருவோரின் கீர்த்தியை நீயறிந்து
வீட்டிடு இங்கே விரைந்து. - 726

மாக்களென எம்மையிந்த மண்ணுலகில் எண்ணியே
வாக்குகள் கேட்டு வருவோரைத் - தாக்கிட
உன்றனின் வாக்கை உயரிய ஆயுதமாய்
நன்றுமே வீசு நனி. - 727

நாளுக்கோர் கட்சியும் நாளுக்கோர் கொள்கையும்
தாளுக்குப் பண்பாடும் தன்மையும் - ஆளுதற்காய்
இல்லாத பொய்களை இங்குரைத்து நிற்போரை
இல்லாமற் செய்வோம் இனி. - 728

அடுத்தவர் தம்மேல் அடுக்காய் பழியைத்
தொடுத்துமே சொல்வார் தொடராய் - வடுப்படுத்தி
நிற்கும் அவரை நிலையாய் விழுத்திட
இற்றரை போற்றும் இனி. - 729

வாக்குறுதி தந்தெங்கள் வாக்குகள் பெற்றிடக்
கூக்குரல் இட்டுக் குழுவாக – நாக்குழறி
கும்பிட்டு நிற்போர் குறைகளைக் கண்டுநீ
இம்மண்ணில் வாக்கை இடு. - 730

## நிலையில்லா வாழ்க்கை.

மண்ணிற் பிறந்தார் மரணிப்ப தென்பது
திண்ணமே என்று தெரிந்துநீ – எண்ணியே
ஆறிலும் வந்திடும் ஆங்கது தானென
தேறிடல் வேண்டும் தெளிந்து. - 731

அற்றார்க் குதவி அவர்பிணி போக்கிநம்
செற்றவர் தம்மையும் சேர்த்துநீ - குற்றமிலா
நற்பணி செய்துமே நாளும் மகிழ்ந்திட
பற்றுடன் வாழப் பழகு. - 732

ஏட்டிக்குப் போட்டியாய் என்றும் இருந்துநீ
தேட்டங்கள் தேடியே சேர்த்தாலும் - கூட்டியே
சென்றிடத் தூதுவர் தேடியே வந்திட
உன்றனைக் காக்கா துணர் - 733

இருந்திடும் நாட்களில் எல்லோரும் வாழக்
கருதியே ஆற்றிடு கர்மம் - வருமுயர்
துன்பங்கள் எல்லாமும் தூரவே போயகல
இன்பணி செய்வாய் இனி. - 734

ஆண்டவன் பாதம் அடியொற்றிப் பேணியே
காண்பவர்க் கெல்லாம் கருணையுடன் - மாண்புறு
நற்பணி செய்துநீ நாளும் இருந்திடச்
செற்றவர் நீங்குவர் சேர்ந்து - 735

நல்லவர் போலிங்கு நாடகம் ஆடாமல்
தொல்லை கொடுத்துத் துரத்தாமல் - நல்லுலகில்
எல்லோரும் வாழணும் என்றுநீ எண்ணிடின்
பல்லாண்டு வாழலாம் பார் - 736

உள்ளத்தில் நஞ்சும் உதட்டிலே தேனுமாய்
மெள்ளவே நீயிந்த மேதினியில் - கள்ளமாய்
என்றும் உறவாடி இங்கிருக்க வேண்டாமே
நன்றே புரிவாய் நலம் - 737

என்றும் எதிலும் எரிச்சல் பொறாமையும்
நின்றே கெடுக்கும் நினைவதும் - குன்றினால்
என்றும் நலமாய் இருக்கலாம் இப்புவியில்
நன்றென நீயும் நவில். - 738

நோய்நொடி இல்லாமல் நொந்துமனம் வாடாமல்
ஆய்ந்துமே காக்கணும் ஆருயிரை – சாய்ந்தே
உடல்விட்டே எங்கள் உயிரோட முன்னர்
கடமையைச் செய்யக் கருது. - 739

பொல்லா வினையெலாம் போயகல நாமிங்கே
எல்லாப் பணியும் இயற்றணும் - நல்லார்
தொடர்பினைப் பேணியே தொல்லைகள் நீங்கி
இடரின்றி வாழ்வோம் இனிது - 740

ஆக்கை நிலையாமல் ஆய்ந்தறிந்து கொள்ளுவாய்
தாக்கும் பகையைத் தகர்த்துநீ – காக்கணும்
உந்தன் உறவை உலகினில் என்றுமே
சிந்தனை செய்தல் சிறப்பு. - 741

நல்லார் தொடர்பும் நலச்செயல் எல்லாமே
பொல்லா வினையினைப் போக்கிடும் - அல்லாத
தீவழிச் சென்றிடத் தேய்ந்திடும் வாழ்வுமே
நாவடக்கி நீயும் நட. - 742

நேர்மை நிதானம் நிறைந்து இருந்தாலே
சீர்மை பெருகும் சிறப்புறவே – பார்தனில்
பேரும் புகழும் பெருகியே வந்திடும்
சேரும் மகிழ்வெனச் செப்பு. - 743

ஆலயம் சென்றுநீ ஆண்டவன் தன்னுடைய
தூல வடிவைத் தொழுதிடவே – ஞாலம்
புகழும் பெருவாழ்வு பெற்றிடுவாய் உன்றன்
அகமும் மலரும் அறி. - 744

அடிதடி செய்துநீ ஆர்ப்பரித்து நின்றால்
பிடியிழந்து போவாயே பின்பு – மிடிவந்தே
என்றும் உழல்வாய் எவருமே தீண்டாமல்
நின்று வருந்துவாய் நீ. - 745

## தனிப்பாடல்கள் மும்மூன்று.

### மழை.

நில்லாமல் கொட்டுது நிம்மதி போகுதே
எல்லோரின் வாழ்விலும் இன்னலாய் – நல்லுலகில்
பாத்திருக்க இங்குப் பரவலாய் நாளுமே
ஊத்துது வானம் உடைந்து. - 746

காலம் தவறிக் கனமழை பெய்யுது
ஞாலம் கலங்கித் தவிக்குது – காலமும்
ஏத்திட வொண்ணா இடரினைத் தந்துமே
ஊத்துது வானம் உடைந்து. - 747

வேண்டும் பொழுதில் விலகியே சென்றிடும்
வேண்டாப் பொழுதினில் வீணாக – யாண்டுமே
வெள்ளமாய் ஓடி விரைந்தழிவு தந்திடும்
உள்ளம் உடையும் உணர். - 748

## அகராதி.

அகர முதிலியென ஆன்றோர் புகழும்
அகராதி தன்னை அறிமின் - இகத்தில்
நிறைந்துள்ள சொற்கள் நிரையாய் வரவே
முறையாய் தருமே முயன்று - 749

உட்பொருள் எல்லாம் உணர்த்தியே நின்றிடும்
எட்டாக் கருத்தும் எமக்குணர்த்தும் - மட்டிலா
நன்மைகள் நல்கிடும் நாட்டினர் எங்கட்கே
என்றும் உதவும் இது. - 750

மொழியினைக் கற்போர் முயன்று பயனை
இழிவின்றிப் பெற்றிட இங்கே – அழிவிலாச்
சொற்களைக் கோர்த்துத் தொகையாக வைத்துமே
பற்றுடன் பேணும் படி. - 751

## குண்டு வெடிப்பு

குண்டெங்கு வந்தெம் குடியைக் கெடுக்குமோ
கொண்டெங்கு வைத்துமே கொல்வாரோ – மண்ணுலகில்
பிஞ்சுக் குழந்தையும் பேரிள மக்களும்
அஞ்சியே வாழ்கிறார் ஆற்று. - 752

வழிபடக் கூடவிங்கு வாய்ப்புகள் இல்லை
அழித்திட எண்ணியே ஆங்கும் - குழிதோண்டிக்
குண்டுகள் வைக்கிறார் கொன்றே குவிக்கிறார்
மண்ணில் இவரை மறு - 753

குண்டுச் சிதறலால் குற்றுயிர் ஆகிடக்
கண்டு மனமும் கலங்கிட – மண்ணில்
மனிதம் மறைந்ததோ மாந்தரின் வாழ்வில்
இனிமை வருமோ இனி. - 754

## பச்சோந்திகள்.

எல்லாம் தெரியுமென்பார் ஏதும் அறிந்திடார்
பல்லிளித்துக் காட்டிப் பதவியினை – நல்லுலகில்
பெற்றிட எண்ணிப் பெருங்கேடு செய்வாரே
இற்றரை தன்னில் இருந்து - 755

பதவிக் கதிரையில் பல்திறன் உள்ளோர்
இதமாய் அமரணும் இங்கே – நிதமுமே
மாறிடும் கொள்கையுள்ள மக்களை நாங்களும்
கூறிடுவோம் என்றுநீ கூறு. - 756

பதவியைப் பெற்றிடப் பாரிற் பலரை
இதமாய் பணியும் இவர்போல - பதர்களை
தீக்கிரை ஆக்கித் திறனுள்ளோர் தங்களை
தூக்கி யிருத்திடத் தூண்டு. - 757

## தலைக்கனம்

என்னை மதியாரை என்றும் மதியேன்நான்
என்னை வெறுப்போரை இப்புவியில் - நின்றே
எவர்க்கும் அடிபணியேன் எட்டியும் பாரேன்
அவனியில் தானே அறி. - 758

என்னையே நம்பினால் என்றும்நான் கைவிடேன்
என்றுமே காப்பேன் இருந்திங்கே – என்னாளும்
என்திறமை நம்பியே இங்கிருப்பேன் நானுந்தான்
மன்னுலகில் என்றே மதி. - 759

தலைக்கனம் அல்லவிது தன்மானம் தானே
அலையாமல் இங்கிருப்பேன் ஆண்டு – நிலையான
இன்பத்தை வேண்டி இடர்களை நீக்கிடவே
என்றும் முயல்வேன் இனி. - 760

## மலையக மக்களின் வாழ்வு.

கொழுந்து பறித்திடக் கூடையும் கொண்டே
எழுந்து மலையேறி இங்கே – விழுந்து
மடியும் மலையக மக்களின் வாழ்வில்
விடிவும் வருமா விளம்பு. - 761

அட்டைக் கடிக்குள் அகப்பட்டு நாளுமவர்
கொட்டும் பனியில் குளித்துமே – முட்டும்
வறுமையைப் போக்க வதைபட்டு நின்று
சிறுமைப் படுகிறார் சேர்ந்து - 762

ஓட்டை லயத்தில் ஒழுகும் குடியிருப்பில்
மாட்டினைப் போலவே மாதுயரில் - கூட்டாக
வாடும் அவர்துயர் வையத்தில் நீங்கிடக்
கூடுவோம் நாங்களும் கூறு. - 763

## மாற்றுத் திறனாளிகள்

அங்கக் குறைவினால் ஆபத்துத் தான்வந்து
பங்கப் படுவோமே பாரிலென – உங்கள்
திறனை மறந்துநீர் தேம்பி அழாமல்
விறலும் பெறுவீர் விரைந்து. - 764

குறைகளைக் கொண்டோர் குவலயந் தன்னில்
நிறைவாக வாழ்ந்தனர் நின்றே – கறையிலா
நற்றிறமை காட்டியிந்த நானிலந் தன்னிலே
பெற்றிடுவீர் நீருமுயர் பேறு. - 765

என்னால் முடியுமென எண்ணி எழுந்திட
உன்றன் திறனால் உயர்ந்திடுவாய் - என்றும்
நிறைவான வாழ்வுனக்கு நீண்டு வருமே
கறைகளும் இல்லாமற் காண். - 766

## இடப்பெயர்வு.

சொந்தவிடம் விட்டகன்று சொத்துசுகம் தான்துறந்து
பந்தங்கள் தம்மையும் பாரினில் - அந்தரிக்க
விட்டுநாம் வந்தோம் விரும்பாமல் ஓடினோம்
கொட்டிய குண்டுமழை கண்டு. - 767

சகதிவழி நாம்நடந்து சங்கடப் பட்டோம்
அகதியென ஆனோமே ஆங்கு – சகமதில்
பட்டதுயர் போதுமினிப் பைந்தமிழர் வாழ்வினில்
எட்டுமா இன்பமும் இங்கு. - 768

வாடாமல் நாமிந்த வையத்தில் வாழணும்
ஓடா திருக்கணும் ஓங்கியே – நாடாளும்
நன்னிலை எங்களை நாடியே வந்திடணும்
என்றுமே நீயும் இயம்பு. - 769

## ஆடிப்பிறப்பு.

ஆடிப் பிறப்பினில் ஆனந்தம் ஆகவே
கூடி மகிழ்வோம் குவலயத்தில் - நாடியே
கூழும் குடிப்போம் கொழுக்கட்டை தின்போமே
பாழும் துயரகலும் பார். - 770

தாடிக் கிழவனாம் தங்கத் தலைவனும்
நாடி யளித்திட்ட நற்பாவைக் - கூடியே
பாடிக் களிப்போம் பரவசம் காண்போமே
ஆடித் திரிவோம் அறி. - 771

எங்களின் வாழ்வினி ஏற்றமும் கண்டிடப்
பங்கம் அகற்றியிப் பாரினில் - எங்குமே
மங்கலம் பொங்கிட மாதுயர் நீங்கிடச்
சங்கடந் தீருமே தான். - 772

## தொடரும் துன்பம்.

துன்பமும் வந்தாற் தொடர்ந்தே வருமென
அன்றே யுரைத்தனர் ஆன்றோரும் - என்றுமே
துன்பத்தை எண்ணித் துவண்டு விடாமல்நீ
அன்றே புரிவாய் அறம். - 773

மலைபோலத் துன்பம் மனத்தினில் வந்தே
அலைபாயச் செய்தாலும் ஆங்கே – நிலையிலா
வாழ்வினை எண்ணி வதங்கி இராமலே
ஊழ்வினை வெல்ல உழை. - 774

ஆண்டவன் தன்னை அடிபணிந் தேத்திட
மீண்டும் வராதிங்கு மீதுயர் - தாண்டியே
வெல்லலாம் நீயும் விரும்பி யுழைத்திட
அல்லல் அகலும் அறி. - 775

## பொங்கல் பண்டிகை.

இன்பங்கள் நாளும் இனிதுயர்ந்து சென்றிடத்
துன்பங்கள் எல்லாம் தொலைந்திட – நன்றுநாம்
பொங்குவோம் இன்னாளில் புத்துணர்வும் பொங்கவே
தங்கிடும் மங்கலம் தான். - 776

புத்தரிசி தானிட்டுப் பொங்கலோ பொங்கலென
இத்தரையில் இன்பம் இனிதுயர - சத்தமாய்
பாடிக் களித்துநாம் பாற்பொங்கல் பொங்கியே
கூடி மகிழ்வோம் குறி. - 777

ஆதவன் தன்னை அகமகிழச் செய்யவே
பாதகம் இல்லாமற் பாற்பொங்கல் - மேதினியில்
பொங்கிப் படைத்திடுவோம் புத்துணர்வும் பெற்றுநாம்
சங்கடந் தீர்க்கலாந் தான். - 778

## சமரசம் உலாவும் இடம்.

பேதங்கள் காட்டிப் பிரிவினைக் கூட்டியே
ஏதங்கள் செய்தே இருந்தாலும் - பூதலத்தில்
மாண்டபின் எல்லோரும் மண்ணுக்கே என்றறிந்து
வேண்டாம் பிரிவென்று வீட்டு - 779

நாடுவிட்டு நாடுசென்று நாமுழைத்துச் சேர்த்தாலும்
கூடுவிட்டே ஆவிபோனால் கூடவே – மாடுமனை
மக்களும் வாரார் மறுவழிக்கு என்பதன்
தாக்கத்தை எண்ணியே தாண்டு. - 780

ஓடியிங்கு நாமுழைத்து ஒன்றென்றாய் சேர்த்துமே
மாடிமேல் மாடிகட்டி மாண்புடனே - கூடியிங்கு
ஏற்றமாய் வாழ்ந்தாலும் எம்முயிர் நீங்கிடின்
வேற்றுமை இல்லை விளம்பு - 781

அடுக்கடுக்காய் சொத்துகள் ஆவலாய்ச் சேர்த்து
வெடுக்கென்று பேசி வெறுப்பை – எடுத்துநீ
காட்டாமல் வாழ்ந்திடக் காசினி தன்னிலே
மாட்சிமை காண்பாய் மதி. - 782

வாதங்கள் செய்துமே வாழ்நாள் முழுதுமாய்
ஏதங்கள் செய்தே இருந்தாலும் - பாதகத்தால்
பாழுமுயிர் போயிடின் பாருளோர் கண்ணினில்
தாழுமே எம்பெருமை தான். - 783

ஆண்டியென ஆனாலும் ஆங்கரசை ஆளுகின்ற
மாண்புடை மன்னனும் மண்ணிலே - கூண்டுவிட்டு
ஆவியது போனால் அடைவர் சுடுகாட்டை
மேவும் சமரசம் மேல். - 784

உயர்ந்தவன் தாழ்ந்தவன் உள்ளவன் இல்லான்
முயங்கி இருப்பர் முடிவில் - தயங்காமல்
எல்லோரும் கூடும் இருப்பிடம் தானாமே
அல்லலிலா இல்லம் அறி. - 785

எத்தனை பேதங்கள் இங்கே இருப்பினும்
அத்தனை பேதமும் அற்றுமே - இத்தரையில்
ஒன்றாகக் கூடி யுறங்கிடும் இல்லிடம்
நன்றிதுதான் என்றே நவில். - 786

கற்றாரும் கல்லாரும் காசினியில் இவ்விடத்தில்
பற்றுடன் தூங்குவர் பார்த்திடுவீர் - இற்றரையில்
ஒற்றுமை ஓங்கிடும் ஓரிடம் தானென்று
பற்றுடன் நீயும் பகர். - 787

சாதி சமயமெனச் சார்ந்த பிரிவினையால்
மோதி மிதிபடும் மூடரே – பாதியில்
ஆவியும் போனால் அடங்குவீர் இங்குதான்
கோவில் இதுவெனக் கூறு. - 788

மாண்டபின் இங்குதான் மண்ணுளோர் வந்திடுவர்
ஈண்டிந்த உண்மையினை எண்ணியே – வேண்டாம்
பிரிவுதான் எல்லோரும் பேரோங்க ஒன்றாய்
உரிமையாய் வாழ்வீர் உயர்ந்து. - 789

உயர்குடித் தோன்றலென ஊருலகம் போற்றப்
பயங்காட்டி வாழ்ந்தாலும் பாரில் - இயங்காமல்
நல்லுடல் வீழ்ந்தபின் நல்லடக்கம் செய்திட
எல்லோரும் கூடுவர் இங்கு. - 790

இங்குநம் முன்னோர்கள் எல்லோரும் வாழ்வதால்
தங்கும் மகிழ்வெனத் தானெண்ணிப் - பங்கமின்றி
ஒற்றுமை பேணி யுயர்வாழ்வு வாழ்வோமே
பற்றுடன் நாமெனப் பாடு. - 791

## நல்லைக்கந்தன் புகழ்மாலை

வஞ்சகமாய் பேசியே வாழ்வினை அழித்திடும்
வஞ்சகர் வாழ்வில் வதைபட – அஞ்சாது
காலெடுத்து வந்து கனல்விழிகள் சீறிட
வேலெடுத்து நீயிங்கு வீசு. - 792

நல்லூர்ப் பதிமேவும் நாயகனே வேலவா
வெல்லும் பகைவிரட்டும் வேந்தனே – நல்லுலகில்
எல்லையில் துன்பங்கள் இங்கிருந்து நீக்கியே
நல்லறம் தன்னைநீ நாட்டு. - 793

நல்லைப் பதியமர்ந்த நாதனே சண்முகா
தொல்லை யகற்றிடும் தூயவா – எல்லோரும்
அல்லல் அகன்றுமே ஆனந்தம் பொங்கிடப்
பல்லாண்டு வாழப் பணி - 794

வெல்லவந்த தீங்கெல்லாம் வேல்கொண்டு கூறாக்கி
நல்லருள் தந்திடும் நாயகா – நல்லுலகில்
இல்லைத் துயரென்றே இங்குள்ள எல்லோரும்
பல்லாண்டு வாழப் பணி. - 795

இப்பாரில் உன்னை இனிதுதொழ வேண்டிநிதம்
தப்பாமற் சார்வார் தமக்குமே – அப்பனே
தொப்பை வயிறனின் சோதரனே நீயெமை
இப்பாரில் காப்பாய் இனிது. - 796

அவ்வைக் கிழவிக்கே அன்றருள் செய்தவா
தெவ்வர் தமையழித்த தேவனே - இவ்வுலகில்
தப்பாமல் வந்துந்தன் தண்ணருள் காட்டியே
எப்போதும் காப்பாய் எமை. - 797

பாரோங் குபுகழின் பைந்தமிழ் நல்லையிலே
சீரோங்க வீற்றிருக்கும் செவ்வேலா – போரோங்கி
நந்தமிழர் தேசமிங்கு நாசமுறும் வேளையில்
சிந்தித்தே வேலைச் செலுத்து. - 798

நின்றனது தாளே நிதமுஞ் சரணமென
வன்மை அகற்றும் வடிவேலா – என்றனது
வாழ்வது தானுயர்ந்து வையத்தோர் ஏத்தவே
தாழ்வும் வராமல்நீ தாங்கு. - 799

எத்தனை துன்பங்கள் எம்வாழ்வில் வந்தாலும்
சித்தம் தளராது சிந்தித்து – நித்தமும்
உந்தனருள் வேண்டி உனதடி வந்திடக்
கந்தனே உன்னருளைக் காட்டு. - 800

வழிப்பறி கொள்ளையோடு வல்லுறவுத் துன்பம்
அழிய அருள்வாய் அழகா – பழிபோட்டும்
உன்னடி வேண்டி உளத்தால் துதித்தோமே
நன்னெறியை நீயுமிங்கு நாட்டு. - 801

நித்தமும் உன்நாமம் நெஞ்சுருகப் பாடியே
தத்தம் குறைநீங்கித் தாரணியில் - தித்திக்க
முப்போதும் ஏத்தியுனை முத்தியும் பெற்றிட
எப்போதும் உன்வேல் எறி - 802

நல்லூர்ப் பதியினிலே நல்லாட்சி செய்திடும்
வல்லோனே வேலா வருதுயரை - இல்லாமற்
செய்யும் அழகனே செவ்வேற் குமராநீ
உய்யும் வழியை உரை. - 803

நகைமுகங் கொண்டுலவு நல்லைக் குமரா
பகைமுகம் எல்லாம் பறக்க – வகையாய்நீ
நல்வழி காட்டி நலமெல்லாம் தந்துமே
பல்லாண்டு வாழப் பணி. - 804

நல்லைப் பதியாளும் நம்பனே சண்முகா
எல்லாம் இழந்துமே இன்னலுற்று – நல்லுலகில்
இல்லிடம் தானிழந்து இன்னலுறும் நாமினிச்
செல்லிடம் எங்கெனச் செப்பு. - 805

பட்டதுயர் போதுமையா பன்னிருகை வேலவா
விட்டகுறை என்ன விளம்பிடுவாய் - இட்டமுடன்
அக்குறை நீக்கி அடிபணிவோம் உன்னிடம்
தக்கதொரு தீர்வினைத் தா. - 806

போருடன் எம்முடைமை போயகன்று விட்டதனை
ஆருடன் பேசுவோம் ஆறுமுகா – வேருடன்
சாய்ந்து தமிழர் தரமிழந்து போகாமல்
ஆய்ந்து முடிவை அருள். - 807

நல்லையில் கூடியிங்கு நல்லாட்சி செய்திடும்
வல்லோனே வள்ளி மணாளனே – நல்லுலகில்
எல்லையிலா இன்பத்தை எல்லோரும் பெற்றிட
நல்லருளை நீயுமினி நல்கு. - 808

நல்லூரில் தானுறையும் நாதனே சண்முகனே
எல்லோரும் இன்புற எண்ணியே – சொல்லாலே
உன்னடி போற்றி உளமாரப் பாடுவேன்
நன்னெறி தன்னையே நாட்டு. - 809

அப்பனிடம் மாங்கனி அன்றுபெற வேண்டியே
தொப்பை வயிறனிடம் தோற்றாய்நீ - இப்பாரில்
எங்களது துன்பம் இனிதகற்றி நாளுமே
பங்கமது வந்திடாமற் பார். - 810

தொல்லைதரு சூரன் தொலைந்திட வேலெறிந்து
நல்லருள் நல்கிய நாதனே – நல்லூரில்
எல்லோரும் உன்னடி ஏத்திப் பணிகின்றார்
பல்லாண்டு வாழப் பணி. - 811

தொல்லைகள் எல்லாம் தொலைந்திட வேலெறிந்து
நல்லூரில் வந்தமர்ந்த நாதனே – எல்லோரும்
நல்லருள் வேண்டியுனை நாவாரப் பாடுகின்றார்
நல்லருளை நீயினி நல்கு. - 812

அலங்காரக் கந்தனே ஆனைமுகன் தம்பி
நலமருளும் நல்லையுறை நாதா – தலம்நாடி
வந்தித்து உன்னையே வாயாரப் பாடுவோரின்
நிந்தனை தன்னையே நீக்கு. - 813

சித்தர்கள் தோன்றிய சீர்மிகும் நல்லையிலே
நித்தம் அடியார் நினைந்துருகித் - தத்தம்
குறைகூறி யுன்னையே கும்பிட்டு நிற்க
நிறையருள் தந்திடு நீ. - 814

பன்னிருகை வேலா பரமசிவன் பாலகா
என்னிதயம் தன்னிலுறை ஏந்தலே - இன்றிந்த
நல்லூர்ப் பதிநாடி நண்ணுவோர் தங்களுக்கு
நல்லருளை நீயினி நல்கு. - 815

கார்த்திகை நன்னாளிற் காத்திருந்து உன்றனது
பார்வைக்காய் ஏங்கிடும் பக்தர்க்கு – சீர்மிகும்
நல்லருளை நல்கி நனிசிறந்து இப்புவியிற்
பல்லாண்டு வாழப் பணி. - 816

நல்லைப் பதியோனே நம்பினோர் காவலனே
அல்லல் அகற்றும் அழகனே – தொல்லைகள்
இப்பாரில் நீங்கிட இன்னருள் தந்தெமை
தப்பாமல் நீயுமே தாங்கு. - 817

வேண்டும் அடியவரின் வேதனை தீர்ப்பவனே
யாண்டும் அருள்தரும் நாயகனே - ஈண்டுன்
கழலடிகள் போற்றினேன் கந்தனே உன்றன்
நிழலினில் நிற்பேன் நினைந்து. - 818

நல்லைப் பதிவாழும் நாயகனே நம்பனே
தொல்லை விலக்கிடும் தூயவனே – சொல்லரும்
உன்விழாக் கண்டே உளமகிழ்ந்து போற்றிட
நன்னெறியை நீயுமினி நாட்டு - 819

சுட்டபழம் தந்தவா சுந்தர வேலவா
துட்டரை நீக்கிய தூயவனே - இட்டமுடன்
உன்னடி நாடி யுரைப்போர் தமக்கினி
நன்னெறி தன்னையே நல்கு. - 820

திருப்புகழ் நாயகா சீர்நல்லை தன்னில்
விரும்பி யுறைகின்ற வேலா – அருள்பெற
உன்னடி நாடி உலகுளோர் வந்திட
நன்னெறி தன்னைநீ நல்கு - 821

அப்பனுக்கு நற்பொருளை அன்றுரைத்து நின்றவா
இப்பாரில் இன்னல் இழிவுறவே – தப்பாமல்
நல்லருள் தந்திடும் நாதனே சண்முகா
பல்லாண்டு வாழப் பணி. - 822

ஏறுமயில் ஏறும் எழில்வேலா எங்கட்கே
ஆறுதலைத் தந்திடும் ஆறுமுகா – மாறுதல்
வேண்டியே வந்துள்ளோம் வேலவா நீயுந்தான்
ஆண்டுமே எம்மையும் ஆற்று - 823

ஏதங்கள் செய்திடும் எத்தர் தமையழித்து
வேதனை நீக்கிடும் வேலவா – சாதகமாய்
எங்களைக் காக்கும் எழில்வேலா நீயெங்கள்
சங்கடந் தன்னைச் சரி. - 824

ஆதரவு காட்டி அழிக்க முயல்வார்க்கு
வேதனை தந்தே விரட்டிடு - நோதலின்றி
எல்லோரும் வாழ்ந்திட ஏற்றவழி காட்டியே
நல்லருளை நீயினி நாட்டு. - 825

## சந்நிதி வேலவா சரணம்

எந்நிதியும் தந்துமே எங்களைக் காத்திடச்
சந்நிதியில் வந்தமர்ந்த சண்முகா – நிந்தனைகள்
சூழ்ந்தெமை வாட்டாமல் சுந்தரனே நீயுந்தான்
வாழ்த்திட வேண்டும் வலிந்து. - 826

ஆற்றங் கரையோனே அன்னதானக் கந்தனே
வேற்படை கொண்டமர் வேலவா – சீற்றமுடன்
வேலெறிந்து சூரனை வீழ்த்தியே நின்றவனே
தாலெடுத்துப் பாடவருள் தா. - 827

காவடிகள் தானெடுத்துக் கந்தனே உன்றனது
சேவடியை நாடிவரும் சேய்களினை – நோவகற்றிக்
காத்திடவே வேண்டும் கனகவேல் தானெடுத்து
ஆத்திரம் கொள்ளாமல் ஆண்டு. - 828

கனலில் கருவான கந்தனே நீயும்
புனலில் உருவாய்ப் புவியில் - தினமும்
வணங்கும் அடியாரை வாழ்த்தி அருளிப்
பிணக்கின்றித் தந்திடு பேறு. - 829

வாய்கட்டிப் பூசிக்க வந்தருள் நல்கியே
சேய்களைக் காத்திடும் செவ்வேலா – நோய்வந்தும்
உன்னடி நாடியே உன்னருள் வேண்டுவார்க்கு
நன்னெறி தன்னைநீ நல்கு. - 830

ஆலம் இலையில் அமுது படைத்திங்கு
வேலனுக்கு தந்திடும் மேலான – சீலமிகும்
நன்முறை தானிங்கு நல்லபடி செய்வரே
இன்னருள் தாராய் இனி. - 831

கல்லோடைக் கந்தனெனக் கற்றவர்கள் போற்றிட
நல்லருள் நல்கிடும் நாதனே – எல்லோரும்
வந்துனை யேத்திட வாகாய் அருள்தந்து
நிந்தனை தன்னையே நீக்கு. - 832

அற்புதங்கள் பற்பலவும் அன்னதானக் கந்தனே
இற்றரையில் செய்தாய் எழில்வேலா – நற்றவத்தால்
உன்னடி நாடி உலகுளோர் வந்திட
இன்னருள் தாராய் இனி. - 833

இல்லறம் தன்னில் இருமனம் தானிணையும்
நல்விழாக் காண்பருனை நாடியே – நல்விதமாய்
எல்லோரும் வாழ்வினில் இன்புற்றே யோங்கிட
நல்லருள் தன்னைநீ நல்கு. - 834

மாறாத நோயெல்லாம் மாற்றி யருள்தந்தே
ஆறாத் துயரறுக்கும் ஆறுமுகா - கூறாக்கி
வல்வினைகள் நீக்கும் வடிவேலா உன்னருளால்
இல்லாமற் போகும் இழிவு. - 835

கதிர்காமர் தான்துதித்த கந்தனே எங்கள்
அதிதுயர் நீக்கும் அழகா – கதியென
உன்னருள் வேண்டி உலகுளோர் வந்திட
என்னாளும் காப்பாய் இனிது. - 836

அசுரர் குலம்தனை ஆரவாரம் இன்றிப்
பொசுங்கிடச் செய்தாய் புவியில் - அசுரக்
குணங்கொண்டார் தம்மைக் குதறிடு நீயும்
வணங்குவார் தம்மையும் வாழ்த்து - 837

மாங்கனி வேண்டி மயிலேறிச் சென்றவா
பாங்குறு வள்ளியைப் பாகத்தில் - தாங்கியே
நின்றிடும் வேலவா நின்னருள் தந்தெமை
என்னாளும் காப்பாய் இனிது. - 838

தொண்டமான் வெட்டிய தூயநல் ஆற்றினது
அண்டையில் வாழும் அழகனே – பண்பாடி
வந்துனை யேத்தி வணங்கும் அடியரின்
நிந்தனை தன்னைநீ நீக்கு. - 839

அழகு மயிலேறி அற்புதங்கள் செய்தாய்
பழகும் அடியர்க்குப் பாங்காய் - நிழலினைத்
தந்திடும் வேலவா தாங்கியெமைக் காத்துநீ
நிந்தனை தன்னையே நீக்கு. - 840

சந்நிதி வேலா சரணம் முருகனே
எந்நிதியும் தந்தெமை ஏற்றிடுவாய் - வந்தனை
செய்கின்றோம் இந்தச் செகத்தனில் நீயெமக்கு
உய்யும் வழிகள் உரை. - 841

கந்தசட்டி நன்னாளிற் கந்தனே உன்றனது
சந்நிதியில் கூடியே சான்றோர்கள் - வந்தித்து
வேண்ட அருள்தரும் வேலனே இங்கெமைத்
தீண்டும் பகையினைத் தீர். - 842

ஆவணியில் உன்தலத்தில் ஆயிரமாய் கூடியுன்
சேவடி யேத்திடும் சேய்களின் - பாவங்கள்
தானகலச் செய்திடுவாய் சண்முகனே எங்களை
ஆனபடி காக்க அருள். - 843

பரந்துள்ள உன்தலத்தில் பக்தர்கள் கூடி
வரம்பெற வேண்டி வணங்க – கரவின்றி
நல்லருள் நல்கிடும் நாதனே எங்களது
வல்வினை நீக்கிட வா. - 844

ஆதரவு அற்றவருன் ஆலயத்திற் கூடியே
தீதகல வாழ்வர் தெளிந்துமே – பாதகத்தைப்
போக்கும் புதல்வனே புண்ணியனே நீயெங்கள்
ஏக்கத்தை நீக்குவாய் இங்கு. - 845

## வல்லிபுர மாயவன் துதி.

வங்கக் கடலோரம் வந்தமர்ந்த மாயவா
எங்கள் குறைதீர்க்கும் ஏந்தலே – பங்கமின்றி
நாங்களிங்கு வாழ்ந்திட நல்லருள் நல்கியே
பாங்குடன் காத்திடப் பார். - 846

அவதாரம் பத்தெடுத்து அற்புதங்கள் செய்தாய்
பவவினை தீர்க்கப் பணிந்து – தவமிருக்கும்
அன்பர்கள் தம்மை அகிலத்தில் ஏத்திட
என்னாளும் காப்பாய் இனி. - 847

கண்ணா மணிவண்ணா காப்பாய் எனக்கூறி
பண்ணோடு பாடிப் பரவிடவே – திண்ணமாய்
நல்லருள் தந்தெமை நானிலத்திற் காப்பவனே
பல்லாண்டு வாழப் பணி. - 848

எங்கள் துயரறுக்க இன்முகம் கொண்டுமே
வங்கக் கடலோரம் வந்தமர்ந்தாய் - பொங்கும்
அடியவர் தங்களை ஆதரித்துக் காத்து
மிடியகலச் செய்வாய் விரைந்து. - 849

சக்கரத் தாழ்வாரே சங்கடந் தீர்ப்பவரே
திக்கெட்டும் காக்கும் திருமாலே – எக்கணமும்
உன்னருள் வேண்டியே உன்தலம் வந்திட
நன்னெறி தன்னைநீ நாட்டு. - 850

காவடிகள் ஆடியே கால்கடுக்க வந்துனது
சேவடியை நாடியே சேவிப்போர் - பாவங்கள்
போக்கிட நீயுனது பொன்னடிகள் தூக்கியே
தாக்கம் வராமலே தாங்கு. - 851

ஆயிரம் ஆயிரமாய் அன்பர்கள் கூடிவந்து
ஞாயிறு தோறுமுன் நற்றலத்தில் - போயிடர்
தீர்ந்திட வேண்டித் திருத்தமாய் ஏத்திட
ஆர்வமாய் நீயும் அருள். - 852

திருவீதி மூன்றில் தேவியர் சூழத்
திருவுலா வந்திடும் தேவே – வருதுயரை
இல்லாமல் ஆக்கும் இறையே உனதருளால்
வல்லோனாய் நானாக வாழ்த்து - 853

வானளாவ ஓங்கிடும் வண்ணநிறை கோபுரமும்
ஆனவெழில் ஆலயமும் ஆங்கிருக்க வானவரும்
வந்துனை யேத்திட வாகாய் அருள்தந்து
நிந்தனை தீர்த்திடு நீ. - 854

நாடிவரும் உன்னடியார் நன்மைகள் பெற்றிடவே
தேடியருள் நல்கிடும் தேவனே – ஓடிவந்து
எங்களைக் காத்திடும் ஏந்தலே இங்கெமைப்
பங்கமும் வாராமற் பார். - 855

வாயிற் சுடுசொல்லும் வாராது காக்கவுன்
கோயிலை நாடியே கும்பிட்டேன் - நாயினும்
கேவலமாய் என்னையும் கீழ்மைப் படுத்தினும்
நாவடக்க நீயருள் நல்கு. - 856

வேட்டொலிகள் நீங்கியே வீணர்கள் தான்மறைந்து
கூட்டமாய் மக்களும் கூடிவாழ - நாட்டமாய்
வந்தமர்ந்து காத்திடுவாய் வல்லிபுர மாயவா
உந்தனருள் தந்தே உயர்த்து - 857

ஏதங்கள் செய்திடும் எத்தர் தமையழித்து
பாதகம் இல்லாமற் பார்த்திடும் - மாதவனே
எல்லோரும் இங்கிருந்து இன்புற்று வாழ்ந்திட
நல்லருள் தன்னைநீ நல்கு. - 858

வல்லிபுரம் வாழ்கின்ற வாசுதேவா உன்னடி
நல்லபடி வேண்டியும் நாம்வந்தே – எல்லோரும்
இன்புற்று வாழ்ந்திட இன்னருள் வேண்டினோம்
உன்னருள் தந்தே உயர்த்து. - 859

மாதவா கோவிந்தா மாயவா என்றுந்தன்
ஆதரவை வேண்டி அடிபணிய – பாதகம்
வந்திடாமற் காத்திடும் வாசுதேவா நீயெங்கள்
நிந்தனை தன்னையே நீக்கு. - 860

## கேதீச்சரநாதன் துதி.

பற்றோடு தொண்டர்கள் பாடியுனை ஏத்திட
நற்றுணையாய் வந்தமர்ந்த நாதனே - இற்றரையோர்
ஏற்றுமுயர் பாலாவி என்னுநற் தீர்த்தமாடி
ஏற்றிடுவாய் எம்மை இனி - 861

சம்பந்த நாயனார் சந்தமொடு பாடிடவே
எம்மண் தனிலமர்ந்த ஏந்தலே – தம்முடைய
இன்னலைக் கூறியுன் இன்னருளே வேண்டுவார்க்கு
நன்னெறியை நீயினி நல்கு. - 862

மன்னார்க் கரையோரம் மாந்தைப் பதியினிலே
இன்முகமாய் வந்தமர்ந்த ஏந்தலே – உன்னருளால்
அத்தனை துன்பமும் அற்றுமே போயகலும்
இத்தரை தன்னில் இயம்பு. - 863

பாலாவித் தீர்த்தத்தில் பாங்குடன் நீராடித்
தாலாட்டிப் பாடித் தரிசிக்க – பாலாக
நல்லருள் தந்திடும் நாதனே எங்களது
வல்வினை நீக்கவே வா. - 864

கந்தக் கடவுளிடம் கைகட்டி வாய்பொத்தி
முந்திப் பொருள்கேட்ட முன்னவா – வந்தித்தோம்
கேதுவந்து ஏத்திட்ட கேதீச் சரப்பதியில்
சாதுவாய் வீற்றெமைத் தாங்கு. - 865

கங்கையைச் சூடியவா கார்குழல் கொண்டுள்ள
மங்கையைப் பாகத்தில் வைத்தவா – எங்களது
இன்னல்கள் போயகல இன்னருள் தந்தெமக்கு
நன்னெறி தன்னைநீ நல்கு. - 866

நாயனார் மூவருனை நற்றமிழாற் பாடிடத்
தீயவை நீக்கிய தேவனே – மாயமாய்
எங்களின் துன்பத்தை இப்புவி விட்டகற்றிப்
பங்கமின்றி நீயுமே பார். - 867

முப்புரம் தன்னை முழுதாய் அழித்துமே
இப்புவி காத்திட்ட ஏந்தலே – தப்பாமல்
உன்னடி யேத்திட உன்னருள் நல்கியே
என்னாளும் எம்மையே ஏத்து - 868

பாற்கடலில் தோன்றிய பாதக நஞ்சினை
ஏற்றுமே தொண்டையில் நீயிருத்தி – சீற்றமாய்
வந்திட்ட கங்கையை வாகாய்த் தலைவைத்து
தந்தனை நற்பேறு தான். - 869

முத்தொழில் செய்யும் முதல்வனே நீயருளி
இத்தரையோர் இன்னல் இனிதகல – நித்தமும்
நல்லருள் நல்கியே நற்றுணையாய் வந்துநீ
பல்லாண்டு வாழப் பணி. - 870

பார்வதியைப் பாகத்தில் பாங்குடனே வைத்தவா
பார்தனைக் காக்கும் பரமனே – ஊர்மக்கள்
எல்லோரும் வந்துன் எழிலார்ந்த தோற்றத்தை
நல்லபடி ஏத்திட நாடு. - 871

நாகநாதர் என்றிடும் நற்பெயர் கொண்டவா
ஏகதந்தன் எந்தையே ஈசுவரா – போகங்கள்
தந்தெமைக் காக்கும் தயாளனே நீயெங்கள்
நிந்தனை தன்னையே நீக்கு. - 872

புலித்தோல் அரைக்கசைத்த புண்ணியனே எம்மை
நலிவின்றிக் காத்திடும் நாதா – வலியெல்லாம்
போக்கி அருள்தரும் புண்ணிய மூர்த்தியே
நீக்குவாய் எம்மிடர் நீ. - 873

பொன்னார்ந்த மேனியா போக்கியே எம்மிடரை
என்னாளும் காத்திடும் ஏந்தலே – மன்னுலகில்
எல்லோரும் வாழ்ந்திட இன்னருள் நல்கியே
வல்வினை நீக்கியெமை வாழ்த்து. - 874

முக்கண் உடையானே மும்மலம் தீர்ப்பவனே
தக்கன் தனையழித்த தந்தையே – எக்கணமும்
எம்மிடர் நீக்கிடும் எண்ணமும் கொண்டவனே
இம்மண்ணில் எம்மையும் ஏத்து. - 875

## கோணமலையும் கதிரமலையும்.

மாமலை வாசனே மாதுமை பாகனே
காமனைக் கொன்ற கடவுளே – வாமமுறும்
நற்றலம் வீற்றிருந்து நல்லருள் தந்தெமைப்
பற்றுடன் நீயுமே பார். - 876

மான்கள் கதைபேச மந்திகள் பாய்ந்தாட
ஆன்றோர் புகழும் அழகனாய் தோன்றிய
கோண மலைதனில் கோயிலுற்ற நாதாவெம்
ஆணவந் தன்னை அழி. - 877

தண்ணார் பதியான தம்பல காமத்தில்
அண்ணலே உன்றனது ஆலயம் - விண்ணவர்
வந்தே வணங்க வரையில் எழுந்ததே
தந்திடுவாய் தண்ணருளே தான். - 878

தக்கனின் யாகத்தை தானழித்து நின்றவா
பக்தர் குறைதீர்க்கும் பாங்கனாய் - எக்கணமும்
உன்தலம் நாடி உலகுளோர் வந்திடவே
நன்னெறியை நீயுமிங்கு நாட்டு. - 879

பார்வதியைப் பாகமாய் பாங்குடன் கொண்டவா
தார்சூட்டி உன்னடியைத் தான்பணிய – பார்தனில்
நல்லறம் பேணிடும் நாதனே உன்னருளால்
வல்லமை பெற்றிட வாழ்த்து. - 880

மும்மலந் தீர்ப்பவனே முக்கண் உடையானே
தம்பல காமத்தில் தானிருந்து - இம்மண்ணில்
இன்னல்கள் நீங்க இனிதருள் செய்பவனே
என்னாளும் எம்மையே ஏத்து. - 881

பாபநாச தீர்த்தத்திற் பாங்குடனே நீராடி
ஆபத்தை நீக்கி யருள்தந்து – கோபத்தை
இல்லாமற் செய்துமே இன்னருள் நல்கிடும்
வல்லோனே எங்களை வாழ்த்து. - 882

கந்தா கடம்பா கதிர்வேல் குமரனே
தந்தைக் குபதேசம் தந்தவனே – முந்தியே
உன்னடி யேத்தி உலகுளோர் போற்றிட
நன்னெறி தன்னையே நாட்டு. - 883

குன்றில் அமர்ந்தாய் கொடுமைசெய் சூரனை
வென்றுமே வந்திட்டாய் வேலவா – மன்றினில்
தெய்வானை தன்னைத் திருமணஞ் செய்தாயே
உய்யும் வழிகள் உரை. - 884

கந்த புராணமும் காசினியில் தோன்றிட
முந்தி அடிகொடுத்த முன்னவா – வந்தனை
செய்யும் அடியவர் சேதங்கள் இன்றியே
உய்யும் வழிகள் உரை. - 885

கதிர மலைதனில் கந்தனே நீயும்
மதிப்பாய் இருக்கிறாய் மன்னா – எதிலும்
இடர்கள் வராமல் இனிதருள் நல்கி
கடம்பனே நீகருணை காட்டு. - 886

காட்டு வழிதன்னில் கால்கடுக்கத் தான்நடந்து
கூட்டாய் வழிபடக் குன்றேறி – நாட்டமாய்
உன்னருள் வேண்டி உனைப்பணிவோர் தங்கட்கு
நன்னெறி தன்னையே நாட்டு. - 887

மாணிக்க கங்கையில் மாண்புடன் நீராடிக்
காணிக்கை வைத்தோம் கடம்பனே – கோணிடாமல்
எங்களைக் காத்தே இனிமையும் தந்தெமைப்
பங்கமும் இன்றியே பார். - 888

வாய்கட்டிப் பூசிக்க வந்தருள் தந்தெமை
நோய்தனில் காத்திடும் நுண்ணியனே – வாய்விட்டு
நாங்கள் உனைப்பாட நல்லருள் தந்தெமை
தீங்கின்றிக் காப்பாய் தினம். - 889

யாத்திரை வந்துன்னை யாசித்து நிற்போரை
ஏத்தியே வைப்பாய் எழில்வேலா – நேத்திரங்கள்
நீர்தனைச் சிந்திட நின்னைப் பணிவோமே
பார்தனில் எம்மையும் பார். - 890

உன்றன் விழாக்காண உள்ளம் மகிழ்ந்திடும்
இன்னல்கள் எல்லாம் இழிந்திடும் - நன்றுந்தன்
சேவடி போற்றியுன் செய்யவருள் வேண்டிட
ஆவலாய் நீயும் அருள். - 891

## நயினைத்தாயே நல்லருள் தருவாயே.

அலைகடல் ஓரத்தில் ஆதிசக்தி நீயும்
நிலைகொண் டருள்வாய் நினைந்து – விலையிலா
உன்னருள் கண்டே உவந்துனைப் போற்றிட
நன்னெறி காட்டு நமக்கு. - 892

நாகங்கள் பூசித்து நர்த்தனங்கள் ஆடிடச்
சோகங்கள் நீக்கியருள் சுந்தரியே – வேகமாய்
உன்னடி போற்றிட உப்புநீர் தாண்டினோம்
நின்னருள் தந்திடுவாய் நீ. - 893

உப்புக் கடலோரம் உத்தமியே நீயிருந்து
தப்பின்றிக் காப்பாய் தயாபரியே - இப்பாரில்
எங்களின் பாவங்கள் எல்லாம் எடுத்தகற்றிச்
சங்கடந் தீர்ப்பாய் சரண். - 894

நேர்த்திக் கடனை நிறைவேற்ற வந்ததனைப்
பூர்த்தியும் செய்வோர் புவியினில் - ஆர்த்தெழும்
துன்பங்கள் எல்லாம் தொலைந்திடல் கண்டுனை
என்னாளும் ஏத்துவர் தான். - 895

தத்தம் குறைகளைத் தாயவள் உன்னிடம்
நித்தமும் கூறியே நின்றகற்ற – எத்தனிக்கும்
அன்பர்கள் கூட்டம் அலைகடல் தாண்டியே
என்னாளும் வந்திடுவர் ஏத்து. - 896

தினந்தினம் உன்தலத்தில் தெய்வீகக் காட்சி
மனமகிழக் காணுவர் மக்கள் - கனவிலும்
உன்னுருவைக் கண்டே உலகுளோர் தம்குறையை
என்னாளும் கூறுவர் ஏத்து. - 897

நித்திய அன்னதானம் நின்தலம் தன்னிலே
சுத்தமாய் தானிருக்கும் சுந்தரியே – சத்தமிட்டு
உன்புகழ் பாடியே உன்னடி சேர்வாரை
என்னாளும் காப்பாய் இனிது. - 898

நவதள கோபுரம் நற்கடலை நோக்க
அவனியோர் வந்துன் அடியில் - பவவினை
போக்கிட வேண்டியே பூசித்துப் போற்றிட
ஏக்கத்தை தீர்ப்பாய் இனி. - 899

புவனேஸ் வரியாகப் பூசித்து நாங்கள்
கவலைகள் போக்கக் கரத்தால் - அவனியில்
அன்பர்கள் தங்களுக்கு அன்னதானம் செய்திட
நன்றெமைக் காத்திடுவாய் நீ. - 900

## பொங்கிப் பெறுவோம் புகழ்.

எங்களின் மண்ணில் இடர்களினிப் போயகல
பங்கமும் நீங்கப் பலரேத்தத் - தங்கியே
எங்ஙனும் இன்பம் எளிதாய் பெருகிட
பொங்கிப் பெறுவோம் புகழ் - 901

உழவரின் வாழ்வில் உயர்வும் கிடைக்க
நிழலாய் அவரிங்கு நின்றே - சுழலும்
உலகிற்கே உண்டி உவந்தே யளிக்கப்
பொங்கிப் பெறுவோம் புகழ். - 902

புத்தரிசி தானெடுத்துப் பொங்கும் மகிழ்வோடு
தித்திக்கச் சர்க்கரையும் சேர்த்துமே - இத்தரையில்
தங்கும் துயரெலாம் தானழிந்து போயிடப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 903

புத்துணர்வும் பொங்கப் புதுப்பானை வைத்துநாம்
தித்திக்கப் பொங்குவோம் தீம்பொங்கல் - நித்தம்
நலமுடன் எல்லோரும் நல்வாழ்வு வாழ
நலமாக வேண்டுவோம் நாம். - 904

ஊழ்வினை வந்தெமை ஊனப் படுத்தினும்
வாழ்விடம் எங்கும் வசைவரினும் - தாழ்வளிக்கும்
சங்கடம் எல்லாமும் சாய்ந்துமே போயகலப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 905

விளைச்சலைக் கண்டு விரும்பி எழுந்து
களைப்பை அகற்றிக் களிப்பாய் - சுழலும்
தலமெங்கும் நற்புகழ் தானோங்கிச் செல்ல
நலமாக வேண்டுவோம் நாம். - 906

இற்றரையில் எம்மவரின் இன்னல்கள் போயகலச்
செற்றவரும் சேர்ந்து சிறப்புற – நற்றவத்தால்
இங்குளோர் எல்லாம் இனிதுற வாழ்ந்திடப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 907

சேற்றில் தினமுழன்று செந்நெல் விதைத்துமே
சோற்றை எமக்களிக்கும் சுந்தரராய் - ஏற்றே
உலகம் புகழும் உழவர்கள் வாழ
நலமாக வேண்டுவோம் நாம் - 908

கரும்புடன் கற்கண்டு காணும் கனிகள்
விருப்புடன் தேடி விருந்தாய் - அருணனுக்கு
மங்கள வாழ்த்தை மகிழ்வுடன் பாடியே
பொங்கிப் பெறுவோம் புகழ் - 909

உலகெலாம் உண்டும் உவப்புடன் வாழக்
கலங்கா துழைத்துக் களிப்பர் - பலமாய்
நலங்களைப் பெற்றிந்த நானிலத்தில் ஓங்க
நலமாக வேண்டுவோம் நாம். - 910

பச்சரிசி சர்க்கரையும் பாலுடன் ஏலமும்
இச்சையுடன் தான்கலந்து இன்பமாய் - இச்சகத்தில்
சங்கடங்கள் தீர்ந்து சகவாழ்வு தான்மலரப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 911

ஊருக்காய் தானுழைக்கும் உத்தமர் வாழ்வினில்
பேருடன் இன்பமும் பெற்றுயர்ந்து – சேரும்
கலக்கமும் நீங்கியே காசினியில் வாழ
நலமாக வேண்டுவோம் நாம். - 912

செய்யும் தொழிலே சிறப்பினைப் பெற்றதாம்
உய்யும் வழியை உணர்த்துமாம் - மெய்யினில்
தங்கும் மகிழ்விங்கு தானுயர்ந்து சென்றிடப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 913

உணவினைத் தானளிக்கும் உத்தமர் வாழ்வினில்
பிணக்குகள் நீங்கிடப் பேணி – வணங்கி
உலகம் முழுதும் உயர்வைப் பெறவே
நலமாக வேண்டுவோம் நாம். - 914

மண்ணைப் புதுக்கி மகிழ்வாய் விதைத்துமே
கண்ணாய் உழைத்திடும் காராளர் - மண்ணினில்
எங்கும் மகிழ்வாய் இருந்திங்கு வாழ்ந்திடப்
பொங்கிப் பெறுவோம் புகழ் - 915

## இல்லறம் என்னும் நல்லறம்.

இல்லற வாழ்வில் இருமனம் ஒன்றாகி
நல்லறம் செய்தல் நலமாமே – தொல்லைகள்
எல்லாம் அகற்றியே இப்புவி தன்னிலவர்
பல்லாண்டு வாழணும் பார் - 916

உள்ளம் இரண்டிங்கே ஒன்றாய் இணைந்திட
அள்ளக் குறைந்திடா அன்புடன் - துள்ளிட
என்னாளும் வாழ்ந்திட இன்பங்கள் எல்லாமும்
வென்றிட வாழ்வர் விளம்பு. - 917

பத்துப் பொருத்தங்கள் பாங்குடன் பார்த்திங்கு
நித்தம் அன்பு நிலைத்திடவே - இத்தரையில்
ஆன்றோர்கள் கூடி அமைத்திடும் இல்லறம்
வான்புகழ் பெற்றிடும் வாழ்த்து. - 918

மங்கை கழுத்தினில் மங்கல நாண்பூட்டி
எங்கும் மகிழ்ச்சி இருந்திடவே – பொங்கிவரும்
அன்புடன் இல்லறம் ஆற்றி இருந்திட
இன்பம் பெருகும் இனி. - 919

அந்தணர் வேதமுடன் ஆன்றோர்கள் வாழ்த்துரைக்க
நிந்தனை நீங்கிட நின்றுமே – வந்தனமாய்
இல்லறம் தன்னில் இனிதாய் இணைந்திட
நல்லறம் ஆகிடும் நம்பு. - 920

இல்லறத்து வாழ்பவன் இப்புவி தன்னிலே
நல்லறம் செய்து நனிமகிழ்வை – எல்லோர்க்கும்
தந்தே இருப்பான் தகுந்த துணையாவான்
நிந்தனை நீக்குவான் நின்று. - 921

அறநெறியில் இல்லறம் ஆற்றி இருந்தால்
இறவாத இன்பம் இருக்கும் - பிறவாத
தன்மையும் ஓங்கிடும் தாரணியில் என்றுமே
இன்னல்கள் வாரா இயம்பு. - 922

மனையறம் பேணிடும் மங்கையவள் வாழ்வில்
மனைவியென வந்தால் மகிழ்வே – அனைவரும்
என்றும் மகிழ்வுடன் இங்கே இருக்கலாம்
துன்பம் அகலும் தொலைந்து. - 923

அற்றவர் தம்மையும் ஆதரித்து நின்றுமே
செற்றவர் தம்மையும் சேர்த்தணைத்து - இற்றரையில்
இல்வாழ்வில் எல்லோரும் இன்பமாய் வாழ்ந்திங்கு
பல்லாண்டு வாழி பழுத்து. - 924

வம்ச விருத்திக்காய் வாழ்வில் இணைந்திடும்
தம்பதிகள் வாழ்வில் தழைத்திடவே - இம்மண்ணில்
எல்லோரும் வாழ்த்தணும் இன்னல்கள் தீர்க்கணும்
நல்லறம் பேணவே நாடு. - 925

ஆண்டவன் தாள்பணிந்து ஆன்றோர்கள் போற்றிட
மாண்புறும் இல்லறத்தை மண்ணினில் - காண்கின்ற
தம்பதிகள் எல்லோரும் தானங்கள் செய்திட்டால்
இம்மண் சிறக்கும் இனி. - 926

நல்லநாள் தேர்ந்தெடுத்து நல்லவர்கள் வாழ்த்துரைக்க
இல்லறம் கண்டிடல் இன்பமே – அல்லாத
தீயநாள் தன்னில் திருமணஞ் செய்திட்டால்
போயகலும் இன்பம் புகல். - 927

தன்னவனைக் காத்து தகைசான்ற பேரறிஞர்
நன்மதிப்பைப் பெற்றிந்த நானிலத்தில் - என்னாளும்
மங்கையர் வாழ்ந்திட மங்கலம் உண்டாகிப்
பொங்கிடும் இன்பம் புகல். - 928

தன்னை இணையாகத் தானிந்த நானிலத்தில்
என்னாளும் ஏற்றுள்ள ஏந்தலை – அன்புடனே
ஆதரித்துக் காப்பாள் அவனியில் தானவளை
ஏதமின்றிக் காப்பாய் இனிது. - 929

உன்னையே நம்பி உலகினில் உன்னுடன்
இன்பமாய் வாழ்ந்திட எண்ணியே – தன்னுடலை
என்றும் உனக்களித்து இன்பம் தருபவளை
என்னாளும் காப்பாய் இனிது. - 930

பெற்றவர் தன்னுடன் பேணியவர் தம்மையும்
பற்றறுத்து உன்றனின் பாதியாக - இற்றரையில்
உன்னோடு வாழ உவப்புடன் வந்தவளை
என்னாளும் காத்தே இரு. - 931

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நிற்கின்ற நற்றுணையாம் - எல்லோரும்
வள்ளுவர் சொன்ன வரிகளைத் தானுணர்ந்து
தெள்ளியே வாழ்வோம் தெரிந்து - 932

மற்றவர் வாழ்வும் மகிழ்வாய் இருந்திட
இற்றரை தன்னிலே இன்பமாய் - பெற்றுள்ள
செல்வங்கள் எல்லாம் சிறப்பாய் வளர்ந்திட
நல்லறம் செய்திடுவோம் நாம். - 933

உற்றவர் தம்முடன் ஒற்றுமையாய்க் கூடியும்
இற்றரை வாழ்வில் இருந்திடப் - பெற்றவர்
தாமிணைந்து வாழ்த்தத் தரணியோர் போற்றிடப்
போமிடர் என்றே புகல். - 934

இல்லறம் தன்னிலே இன்பமாய் தானிணைந்து
நல்லறம் செய்கின்ற நல்லவர்கள் - எல்லா
நயங்களும் பெற்றிந்த நானிலத்தில் வாழ
வயலூரான் தந்தேனே வாழ்த்து. - 935

## கலப்படம் கூடாது காண்

கலப்படஞ் செய்துமே காசைப் பெருக்கி
உலவிடும் மூடர் உணர – நிலத்தில்
பலமான சட்டம் படைக்கணும் தானே
கலப்படம் கூடாது காண். - 936

உண்ணும் உணவில் உலவிடும் வீடுதனில்
எண்ணிலாத் துன்பம் இறைத்திடும் - கண்ணும்
நலமிழந்து போகும் நரகமும் தோன்றும்
கலப்படம் கூடாது காண். - 937

அதிக பணத்தினை அள்ளிட வேண்டி
விதியினை மீறியும் விற்க – மதியின்றிக்
கல்லும் மணலும் கலந்துமே விற்பவர்
அல்லல் அடைவர் அறி. - 938

பதுக்கியும் வைத்திருப்பர் பாரில் அவரும்
புதுக்கியே விற்பர் பொருளை – எதுக்கும்
உதவாப் பொருட்களை உண்டாக்கி விற்பர்
சதமின்றிப் போயிடுவர் சாற்று. - 939

விலைகளை மாற்றியே விற்பனை செய்வார்
நிலையில் உயர நினைப்பவர் - அலைந்தும்
அதிகப் பணத்தினை அள்ளிட வேண்டி
விதியினை மீறுவாரை வீழ்த்து. - 940

நீதியாய் நேர்மையாய் நின்றிட மாட்டாரே
ஏதிடர் வந்தும் இரங்கிடார் - பாதிப்பைத்
தந்திடும் பண்டங்கள் தான்கலந்து விற்பவர்
நிந்தனை பெற்றிடுவர் நின்று. - 941

எங்கும் கலப்படம் ஏனென்று கேட்டிட
இங்குத் துணிவார் எவருமிலர் - தங்கள்
பணப்பை நிறைந்திடப் பாடுபட்டு நிற்பார்
குணத்தை இழப்பரே கூறு. - 942

விலையுயர்ந்து செல்வதனால் விற்பவர்கள் சேர்ந்தே
அலைந்திடச் செய்வார் அறிவீர் - கலைத்தே
பொருளைப் பிரித்துப் புதுவிலை காட்டி
விருப்புடன் விற்பார் விளம்பு. - 943

கலப்படம் வேண்டாம் கருணையும் காட்டி
நிலத்தினில் நாங்கள் நிலைத்து – நலமுடன்
வாழவே வேண்டும் வழங்குவீர் நற்பொருள்
ஆழவே கூடா தறம். - 944

உலகினைத் தாங்கும் உணவுப் பொருட்கள்
கலப்படம் இன்றியும் காண – நிலமதில்
எல்லோரும் சேர்ந்தே இயற்றணும் சட்டங்கள்
பல்லாண்டு வாழலாம் பார். - 945

## பொன்மொழி வெண்பாக்கள்

("ஊலமுள'' கவிதைக் குழுமம் நடாத்திய பொன்மொழி வெண்பாப் போட்டிகளில் வெற்றபெற்ற வெண்பாக்கள்)

சேத்து வயல்களில் செந்நெல் விதைத்திட்டுக்
காத்து மகிழ்ந்து களத்தினில் - நேத்திரங்கள்
பூத்திடப் பார்த்துப் புதுமகிழ்வு பெற்றிடுவர்
காத்தற் பயிர்களைக் கண்டு. - 946

ஆற்றலுடன் நாளும் அரனடி யேத்தியே
ஊற்றாய் எழுந்தே யுழைத்துநிதம் - சேற்றிலே
செந்நெல் விளைத்துச் சிறப்புறச் செய்வதே
செந்தமிழ் நாட்டின் செழிப்பு. - 947

மாசற்ற கல்வியை மண்ணில் எமக்களித்து
ஆசற எம்மையும் ஆளாக்கி – நேசமுடன்
பாசாங்கு செய்யாமல் பல்லறம் போதிக்கும்
ஆசானைப் போற்றல் அறம். - 948

அடுத்தோர்க் குதவிடும் ஆசையும் பொங்க
இடுக்கண் களைந்துமே இங்குத் - தொடுத்தே
இனியவை செய்யும் இயல்புடன் நாளும்
மனிதகுலம் தோன்றல் மதிப்பு. - 949

நித்தமும் நின்றெமக்கு நீண்டபல நல்லுரைகள்
சொத்தெனத் தந்திடும் சுந்தரமாய் - இத்தரையில்
அத்தனை செய்தியும் ஆழமாயத் தந்திடும்
புத்தகம் ஆளும் புவி. - 950

நற்றமிழ் தன்னை நசுக்கிட எண்ணியே
இற்றரை தன்னில் இருந்திடும் - முற்றிய
செற்றவர் தம்மைச் சிதைத்திட நீயுமே
ஒற்றுமை கொண்டிட ஒன்று. - 951

சிரிப்பால் உலகினைச் சிந்திக்க வைத்துப்
பெரிதும் புகழினைப் பெற்றார் - விரிந்த
நகைச்சுவை தன்னால் நனிபுகழ் பெற்ற
நகைச்சுவை நாயகனை நாடு. - 952

வந்திடும் தேர்தலில் வாகாய் வழங்கிடுந்
தந்திர வாக்குறுதி தன்னையே – சிந்தையில்
அக்கறை கொண்டுமே ஆராய்ந்து தந்திட
மக்களின் வாக்கு மதிப்பு. - 953

செவிகளில் இன்பமே தேனாகப் பாயக்
கவிகள் படைக்கும் கவிஞர் - புவியில்
நவின்றிடும் வார்த்தைகள் நன்மையை நல்கும்
கவிஞர்கள் பாக்கள் களிப்பு. - 954

கவிஞர் தமக்குக் களங்கள் அமைத்துப்
புவியிற் புதுமை புகுத்திக் - கவினுறக்
காலமெலாம் நல்ல கவிகளைத் தந்திடும்
ஊலழள ஆண்டுவிவிழா ஊன்று. - 955

பொல்லாப் புவியதிற் போராடி வாழ்ந்திட
வல்லமை தன்னை வழங்கியே – நல்ல
நிறைவான வாழ்வினை நின்றெமக்கு நல்க
இறைபாலன் வந்திடுவார் ஈங்கு. - 956

புவிதனிற் காற்றும் புயலென வீசும்
நவிலும் செழிப்பும் நலியும் - புவியோர்
செயற்கை முறையிற் செயல்கள் புரியின்
இயற்கையின் மாற்றம் இயல்பு. - 957

சொல்லறம் பேணிச் சுகமாய் இணைந்திங்கு
நல்லவர் போற்றிட நாளுமே – எல்லோரும்
நல்லறம் ஆகவே நாடி இயற்றினால்
இல்லறத்தின் இன்பம் இனிது. - 958

கற்பகப் பிள்ளாய் கரிமுகத் தண்ணலே
பற்றுடன் உன்னைப் பணிகின்றோம் - இற்றரையில்
பற்றித் தொடர்ந்து பலரையும் வாட்டுகின்ற
தொற்றை அழிக்கவே தோன்று. - 959

உண்ணும் உணவை உலகோரும் உண்ணவே
எண்ணிப் பகிர்ந்து எடுத்தளித்து – உண்ணுகிற
பண்பாடு காத்திந்தப் பார்தனில் வாழ்வதே
மண்ணில் தமிழரின் மாண்பு. - 960

விலகும் உறவுகள் வேண்டி இணைய
நலமும் பெருகிடும் நாளும் - உலகில்
நலப்பணி நாளும்நீ நாடியே செய்தால்
விலகாது காக்கும் விரைந்து. - 961

அற்றவர்க்கு என்றும் அளித்துண்டு வாழ்ந்திங்கு
மற்றவர் தம்மை மதித்துமே - இற்றரையில்
நல்லோர் இணைந்து நடாத்திடும் போதினில்
இல்வாழ்க்கை என்றும் இனிது. - 962

பாலப் பருவமுதல் பக்குவமாய் எங்களுக்குச்
சீலமுறு கல்வியைச் சேர்ப்பித்து – ஞாலமதில்
என்னாளும் எங்களை ஏத்திட ஏணியாகும்
பொன்னான ஆசானைப் போற்று. - 963

அசுரன் அழிய அகிலம் மகிழ்ந்த
பசுமை நிலையைப் பகிர்ந்தே – நசுக்கிடும்
கோபத்தை விட்டுக் குடும்பம் சிறக்கவே
தீபங்கள் ஏற்றினால் தீர்வு. - 964

நாட்டில் விலைகள் நனிமிக ஏறினும்
வாட்டம் அடைந்து வருந்தாமல் - வீட்டினில்
கூட்டுக் குடும்பக் குதூகலம் போலவே
தோட்ட மலர்களாய் தோன்று - 965

நல்லதோர் நங்கையும் நம்பனும் சேர்ந்துமே
நல்லுறவு பேணி நடந்திடின் - தொல்லுலகில்
நல்லறம் என்றுமே நானிலத்தோர் போற்றிடும்
இல்லற இன்பம் இனிது. - 966

கொழுத்தி வருத்துது கோடை வெயிலும்
புழுங்கித் தவிக்குது பூமி – அழுத்தும்
அதிக துயரம் அகன்றிடல் வேண்டும்
கதிரவன் சீற்றம் கனிந்து - 967

உற்றிடும் நோய்கள் உடனகன்று போயுமே
வற்றா வளங்களும் வந்திட - இற்றரையில்
பற்றுடன் நாமும் பரவசம் கண்டிடச்
சுற்றத்தின் தூய்மை சுகம். - 968

என்னதான் துன்பம் எமக்கிங்கு நேரினும்
முன்னின்று காக்க முயல்பவள் - என்னாளும்
தன்னலம் பாராது தாங்கியெமைக் காத்துமே
அன்னைதான் தந்திடுவாள் அன்பு. - 969

நீக்கமற நெஞ்சில் நிறைந்தவளே என்றனது
ஆக்கமது கண்டே அகமகிழ்வாய் - ஊக்கமாய்
பாக்களினைப் பாடிநான் பாவையே உன்றனுக்காய்
ஏக்கமுடன் காத்திருப்பேன் ஏற்று. - 970

இழியும் வளங்கள் இடையின்றி ஓங்க
அழியும் நிலையை அடையும் - தொழில்கள்
செழித்து வளர்ந்திடச் சிந்தித்து நீயும்
தொழிலாளர் நாளிற் தொடங்கு. - 971

துறைகள் பலதில் தொடர்ந்து வளர்ந்து
கறைகள் துடைத்துக் கலக்கி – நிறைவில்
சிகரமாய் நிற்கும் சிறப்பினை எண்ணி
மகளிரைப் போற்றுதல் மாண்பு. - 972

நல்லவன் என்றிந்த நானிலம் போற்றிடச்
சொல்லறம் பேணிச் சுகமாக – நல்லுலகிற்
தக்கவழி தேடித் தரமுடன் வாழ்ந்திடும்
சிக்கலில்லா வாழ்வே சிறப்பு. - 973

தங்கத் தமிழர் தரணியில் கொண்டாடும்
பொங்கல் திருநாள் புவியினில் - எங்ஙணும்
மங்கலம் தந்துமே மன்றினில் ஏத்திடும்
பொங்கல் தருமே பொலிவு. - 974

நேர்வழியில் சென்று நிலையின்பம் காணவே
ஆர்வமாய் நானுள்ளேன் ஆரணங்கே – ஊர்தனில்
சீர்பல பெற்றுச் சிறப்புடன் வாழ்வோமே
கார்முகிலாள் காதலுடன் காண். - 975

வந்தாரை என்றுமிங்கு வாழவைத்த எம்தமிழை
நிந்தனை செய்துமே நிற்கிறாய் - இந்நிலத்தில்
வந்தமொழி தன்னையுன் வாயாரப் பேசுகிறாய்
சொந்தமொழி எங்கேதான் சொல். - 976

மாடிமனை மக்களொடு மண்ணுலகில் வாழ்ந்தாலும்
தேடிய பாவங்கள் தீர்ந்திட – நாடியின்று
ஓடியே சென்றுநீ உன்சுற்றம் சூழ்ந்திட
ஆடியில் காவிரியில் ஆடு. - 977

கவிதைத் துறையினைக் காசினி தன்னிற்
கவினுற ஏத்தும் கவிஞர் - நவின்று
குழாமாய் இணைந்து குறைவின்றிச் செய்ய
விழாக்கள் தொடரும் விரைந்து. - 978

இருமனம் ஒன்றியே ஈருடல் ஒன்றாய்
பொருந்திடும் காதல் பொலியும் - ஒருதரமும்
ஏதம் வராமலே என்றென்றும் காத்திடும்
காதல் அழிவதில்லைக் காண். - 979

பாதியில் எம்மைப் பரிதவிக்க விட்டுநீ
சேதியேதும் சொல்லாமற் சென்றதேன் - மேதினியில்
வாடும் மனிதரின் வாட்டத்தைப் போக்கிடப்
பாடு நிலாவேநீ பாடு. - 980

இற்றரை தன்னிலே இன்னல் அகன்றுயர்
நற்றவ வாழ்வும் நனிதுயரப் - பற்றுடன்
குற்றங் கருதாமற் கூடி யுறவாடும்
சுற்றங்கள் வாழ்த்தச் சுகம். - 981

ஆடியிலே நாளெடுத்து ஆழமாகத் தானுழுது
தேடிநல்ல நெல்தனைத் தேர்ந்துமே – நாடிநின்று
பக்குவமாய்த் தானெறிந்து பார்த்துப் பராமரித்தால்
எக்கணமும் வாரா திடர் - 982

செற்றவர் சேர்ந்துமே சேதத்தைத் தந்திடாமல்
உற்றவ ரெல்லாரும் ஒன்றாகி - இற்றரையில்
நற்றுணை யாகவே நல்லபடி வாழ்ந்திட
ஒற்றுமை வேண்டுமாய் ஓது. - 983

வறுமை நிலையது வாழ்வினிற் தோன்றிச்
சிறுமை தரவே சிறந்து – கறுவிப்
பொறுமை தனையே பொசுக்கி விடாமற்
பொறுமையாய் வாழ்வினைப் போற்று. - 984

## நன்றி செலுத்துவேன் நான்.

மரபுப் பயிற்சியை மண்ணிற் பெறவே
உரமாய் உழைத்தே உயர்த்தி – வரமாக
என்றும் மனத்தில் இருக்கும் இவர்கட்கு
நன்றி செலுத்துவேன் நான். - 985

தமிழ்ச்சங்கம் தந்த தகைசால் பயிற்சி
அமிழ்தின் இனிதாய் அமைந்து – தமிழினில்
நன்றுமே பாக்களை நானியற்ற வைத்தது
நன்றி செலுத்துவேன் நான். - 986

யாப்பின் இலக்கணத்தை நானுமிங்கு கற்றிட
நாப்பண் இருந்து நவின்றாரே – சோப்பாவார்
என்றும் அவர்பணி எண்ணி மகிழ்ந்துமே
நன்றி செலுத்துவேன் நான். - 987
( சோ.ப எனப்படும் சோ.பத்மநாதன்)

எழுத்தும் அசையும் இலங்கிடும் சீரும்
பழுதின்றித் தந்தாரே பாங்காய் - எழுத்தாளர்
என்னும் ஜெயசீலன் ஏற்றத்தைப் பெற்றிட
நன்றி செலுத்துவேன் நான். - 988

முகநூல் வழியாக முன்னின் றெனக்குத்
தகைசால் பயற்சிகள் தந்து – மிகையாக
என்னறிவை ஏத்தி இலங்கிட வைத்தவர்க்கு
நன்றி செலுத்துவேன் நான். - 989

திருச்சியில் வாழ்கின்ற செம்மல் இவரும்
அரும்பா இலக்கணம் ஆங்கே – விருப்புடன்
என்றனுக்குத் தந்துமே ஏற்றமுற வைத்தாரே
நன்றி செலுத்துவேன் நான். - 990

மரபினில் வல்லவர் மாமுனைவர் ஆன
சரஸ்வதி பாஸ்கரன் தானும் - மரபினில்
என்னைப் புடம்போட்டும் ஏற்றமுற வைத்தாரே
நன்றி செலுத்துவேன் நான். - 991

வலங்கைமான் என்னும் வளமுறும் ஊரில்
துலங்கிடும் ஆசானாய் தோன்றி – நலமுடன்
என்றனுக்கு யாப்பை எடுத்துரைத்து நின்றாரே
நன்றி செலுத்துவேன் நான். - 992

வேல்முருகன் என்றிடும் வித்தகர் தான்முக
நூல்வழி வந்து நுவன்றாரே – சால்புடன்
என்னை வழிப்படுத்தி ஏற்றமுற வைத்தாரே
நன்றி செலுத்துவேன் நான். - 993

முகநூல் குழுக்களில் முத்தான போட்டி
தகவுடன் வைத்துத் தரமாய் - இகமதில்
என்னை உயர்த்தியே ஏற்றமுற வைத்தனர்
நன்றி செலுத்துவேன் நான். - 994

என்றன் கவிகளை என்றுமே ஊக்குவிக்கும்
அன்புடை நண்பர் அனைவரையும் - என்னாளும்
என்றன் மனத்தில் இருத்தியே வைத்தென்றும்
நன்றி செலுத்துவேன் நான். - 995

அனுபவம் ஓங்க அரும்பா விதியை
அனுராதா கட்டபொம்மன் ஐயா – பனுவலாய்
என்றும் முகநூலில் ஏற்றமுறத் தந்தாரே
நன்றி செலுத்துவேன் நான். - 996

நூல்கள் வெளியிட நுண்நிதி தந்தெனைச்
சால்புடன் ஏத்திடும் சான்றோரை – என்னாளும்
நன்றிங்கே ஏத்தி நலமுடன் போற்றியும்
நன்றி செலுத்துவேன் நான். - 997

ஆக்கமுடன் ஊக்கம் அளித்தெனைக் காத்திருந்து
தாக்கமும் இன்றித் தழைக்கவே – தேக்கிய
அன்புடன் போற்றிநல் ஆதரவு தந்தார்க்கு
நன்றி செலுத்துவேன் நான். - 998

நன்றிந்த நானிலத்தில் நானெழுதும் பாக்களை
என்றும் படித்தும் எனக்குமே – மன்றினில்
குன்றாப் புகழினைக் கூட்டியும் தந்தோர்க்கு
நன்றி செலுத்துவேன் நான். - 999

நன்றாக இவ்வுலகில் நானும் உயர்ந்திட
என்றும் பணிசெய்த ஏந்தல்கள் - நின்றென்றன்
துன்பம் அகற்றித் துலங்கிடச் செய்தோர்க்கும்
நன்றி செலுத்துவேன் நான். - 1000

சுபம்

# இதுவரை வெளியிட்ட நூல்கள்

1. பாலர் பாடல் திரட்டு - 1997
2. வேதவனம் - 2012.12.17
3. வேதவன விநாயகர் பிள்ளைத் தமிழ் - 2013.12.06
4. வயலூரானின் வரிகள் - 2016.04.24
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள் - 2017.04.04
6. பனிக்கண்டிக்காளி - 2018.03.18
7. பன்றித்தலைச்சி அம்மன் பிள்ளைத் தமிழ் - 2019.03.18
8. குருதிபடாக் காயங்கள் - 2019.08.14
9. வேதவன விநாயகர் கவசம் - 2019.12.21
10. வேதவன விநாயகர் திருவந்தாதி - 2020.12.19
11. பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் - 2022.05.03

**இதுவரை பெற்றுக்கொண்ட விருதுகள்**

1. வேதவனக் கவிமாமணி
2. தெய்வீகக் கவிவள்ளல்
3. தமிழ்க்கவி
4. கவிக்கோன்
5. சமுகஜோதி
6. கிராமிய மன்னன்
7. மரபு சுடர்
8. சந்தப்பாமணி
9. வெண்பா வித்தகர்
10. கவிஇமயம்
11. கவித்திலகம்
12. தமிழ்நதி
13. நூலக சேவையாளர்
14. வேதவனக் கவிராயர்
15. கவிச்செம்மல்
16. கவித்தென்றல்
17. ஆசுகவி
18. மரபொளிர் கவிச்செம்மல்
19. கவிப்புயல்
20. மரபுமணி

21. வெண்பாமணி
22. கிராமியக்கவி
23. கவிமுகில்
24. விருத்தப்பா வித்தகர்
25. ஔவைக்கனிப் பாவலர்
26. கவிநிலா
27. தமிழ்ச்சுடர்
28. கவிச்சிற்பி
29. கவிமின்னல்
30. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விருது
31. காதல் கவிநிலா
32. காதல் கவித்திலகம்
33. காதல் கவிமின்னல்
34. நட்சத்திரக்கவி
35. கவிச்சுடர்
36. மரபுத் தென்றல்
37. மரபுமாமணி
38. கிராமத்துக்குயில்
39. விருத்தக்கவி வேந்தர்
40. யாழ்முத்து
41. கலைச்சாகரம்
42. கவிமழை



ஆக்கம்-செ.சுதாகரன்

(வயலூரான்)

978-955-38036-5-8